
தமிழரசு
ஜூன் 1-30, 2001 ரூ.10




S.P.M

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2032
வைகாசி – ஆனி
ஜூன் 1–30, 2001
மலர் : 32 இதழ் : 23 & 24
விலை ரூ.10


## இந்த இதழில்...


- தமிழ்நாட்டின் முக்கியத் திட்டங்கள் குறித்து பிரதமரிடம் கோரிக்கை ........ 2
- விவசாயிகள் கடன் சுமையிலிருந்து நிவாரணம் ........ 5
- புதிய அமைச்சர்கள் பதவியேற்பு ........ 6
- கிராமப்புற மாணவர்கள் உயர்க்கல்விபெற பள்ளிகள் நிலை உயர்வு ........ 8
- முதலமைச்சருடன் தொட்டில் குழந்தைகள் ........ 9
- புரட்சி வானமும் புதிய வானம்பாடிகளும்(கவிதை) ........ 10
- 10ஆம் வகுப்பு தேர்வில் முதல்நிலை பெற்ற மாணவர்களுக்குப் பாராட்டு.. 12
- போர்க்கால அடிப்படையில் சென்னைக்குக் குடிநீர் ........ 13
- தேயிலை விவசாயிகளுக்கு உதவி ........ 15
- நீ என்னை நன்றாகப் பார்க்க முடிகிறதா ........ 16
- வாழ்க்கைக்கு கண்ணதாசன் ........ 17
- வறுமையில் வாடும் குடும்பத்திற்கு முதல்வர் உதவி ........ 22
- திருக்குறள் முற்றோதல் – சிறுமிக்கு நிதியுதவி ........ 23
- கிருஷ்ணா நீர் ........ 24
- தமிழ்கூறும் நல்லுலகம் ........ 25
- ஆசிரியர்கள் பணி மாறுதல் ........ 30
- தமிழ்நாட்டில் ஏழ்மை, வறுமை, இல்லாமை அறவே இல்லை என்ற உன்னத நிலையை அடைய இந்த அரசு பாடுபடும் ........ 33
- கபாலீசுவரர் கோயிலுக்குத் தண்ணீர் ........ 48
- புரியவில்லை (சிறுகதை) ........ 49
- சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு உதவி ........ 57
- சிசுக்கருவின் பாலினத்தைக் கண்டறியும் கருவியைத் தவறாகப் பயன்படுத்தினால் தண்டனை ........ 59
- தரமான அரிசி விநியோகம் – முதல்வர் ஆணை ........ 60
- ஊனமுற்றோர் சேவைக்கான விருதுகள் ........ 61
- பின்னலாடைத் தொழில் பிரச்சினை ........ 63
- மீனவர்களுக்கு காப்புறுதித் தொகை ........ 64
- இரத்த அழுத்தம் ........ 65
- சுழலில் சிக்கியவனைக் காப்பாற்றுமுன் (கவிதை) ........ 73
- சிறுபான்மைச் சமுதாயத்தின் நலன் பாதுகாக்கப்படும் ........ 74
- கொத்தடிமைச் சிறுவர்கள் மீட்பு ........ 75
- கூண்டுக்கிளி (கட்டுரை) ........ 77
- உடல் ஊனமுற்ற பெண்ணுக்கு உதவி ........ 79
- காரை நிறுத்தி முதல்வர் பொதுமக்களின் குறைகளைக் கேட்டார் ........ 80


முதல் பக்க அட்டையில்...

**மாண்புமிகு முதலமைச்சருடன் தொட்டில் குழந்தைகள்**

இரண்டாம் பக்க அட்டையில்...

**நெய்வேலியிலிருந்து சென்னைக்குக் குடிநீர்**

கடைசிப்பக்க அட்டையில்...

**மாண்புமிகு முதலமைச்சருடன் 10ஆம் வகுப்பு தேர்வில் முதல்நிலை பெற்ற மாணவ–மாணவிகள்**



# தமிழ்நாட்டின் முக்கியத் திட்டங்கள் குறித்து

## பிரதமரிடம் தமிழக முதலமைச்சர் கோரிக்கை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **5-6-2001** அன்று புதுதில்லியில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.வாஜ்பாய் அவர்களை நேரில் சந்தித்து, தமிழ்நாட்டில் மத்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி இருக்கும் முக்கியத் திட்டங்கள் மற்றும் கருத்துருக்கள் அடங்கிய கோரிக்கை குறிப்பை அளித்தார்கள்.

காவேரி நதிநீர் தாவா நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைகளை அமல்படுத்துவதற்கான தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவும், கச்சத்தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடிக்கும் உரிமையை மீட்டுத் தர இலங்கை அரசை வலியுறுத்தவும் பிரதமரிடம் கோரப்பட்டது. தமிழக மீனவர்கள் மீதும் மீன்பிடி படகுகளின் மீதும் இலங்கை கடற்படையின் துப்பாக்கிச் சூடுகள் அதிகரித்து வருவதால், அப்பாவி மக்களின் உயிர்களையும் மற்றும் இந்திய ஏழை மீனவக் குடும்பங்களின் உடமைகளையும் பாதுகாக்கும் பொருட்டு இலங்கைக் கடற்படையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இலங்கை அரசை வலியுறுத்துமாறு பிரதமர் அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

உலக வர்த்தக அமைப்பு (W.T.O.) ஒப்பந்தத்தில் வேளாண்மைக்கு உரிய பாதுகாப்பு அளித்தல், ஏற்றுமதிக் கடன் மானியம் வழங்குதல், வெளிநாட்டு வர்த்தகப் பொருட்களைக் குவிப்பதற்கு எதிராகத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல், ஏற்றுமதியின்போது தூய்மைத்தரம் மற்றும் இராசாயன தூய்மைத்தரம் நிர்ணயிக்கும்போது நியாயமாகவும் நடைமுறைக்கு உகந்ததாகவும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்த பிரதமரிடம் வலியுறுத்தப்பட்டது.

இரண்டு அடுக்கு ஊராட்சி அமைப்பு மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கான கல்வி நிறுவனங்கள் மற்றும் வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு, தமிழை ஆட்சி மொழியாக ஆக்கவும் அரசியல் கூட்ட 8–வது அட்டவணையின்படி விவரிக்கப்பட்டுள்ள 18 தேசிய மொழிகளையும் மத்திய அரசின் அலுவலக மொழிகளாக ஆக்கவும் தமிழை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்கவும் தேவையான அரசியல் சாசன சட்ட திருத்தங்களை விரைவில் கொண்டுவர பிரதமரிடம் வலியுறுத்தப்பட்டது.

2001–2002ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் இரயில்வே திட்டங்களுக்கு மத்திய அரசால் மிகவும் குறைவான நிதி ஒதுக்கப்பட்ட விவரம் பிரதமர் அவர்களிடம் சுட்டிக்காட்டப்பட்டது. மேலும், தேவையான இரயில்வே திட்டப் பணிகளை மேற்கொள்ளவும் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களை வெகுவிரைவில் முடிக்கவும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.

எண்ணூர் துறைமுகம் இரண்டாம் கட்டப்பணி (Phase-II) மற்றும் திரவ இயற்கை எரிவாயு மின் உற்பத்தி திட்டங்களுக்கும் விரைவில் ஒப்புதல் அளிக்குமாறு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமரை கேட்டுக்கொண்டார்கள்.

தமிழகத்தில் நெசவுத் தொழில் மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலை பயிரிடும் சிறு விவசாயிகள் பிரச்சினைகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

பச்சைத் தேயிலையின் விலை கிலோவுக்கு கடந்த ஒரு வருட காலத்தில் ரூ.7 ஆக குறைந்து தற்போது ரூ.5 ஆக மீண்டும் குறைந்துள்ளது. தேயிலை விவசாயிகள் குறைந்தபட்ச விலையாக கிலோவுக்கு ரூ.15ஆகக் கோரியிருக்கிறார்கள். மத்திய அரசு கிலோவுக்கு விலை மானியமாக ரூ.2 அறிமுகப்படுத்தி ரூ.17 கோடி அனுமதித்துள்ளது என்றாலும் மார்ச் 2001 வரை தேவைப்படும் கூடுதல் நிதி ரூ.35.59 கோடிக்கான அனுமதி இன்னும் மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளது. தேயிலை நீலகிரி மாவட்டத்தில் முக்கியப் பயிராக உள்ளது. மேலும், தேயிலை பயிரிடுதலில் பெரும்பான்மையான சிறுவிவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பச்சைத் தேயிலை விலைக்குறைப்பு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் நிலைமையில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சிறுவிவசாயிகள் பயிரிட்டு வழங்கும் தேயிலையின் விலை ஒரு கிலோவுக்கு ரூ.15 என நிர்ணயிப்பது மிக முக்கியமானது என மாநில அரசு கருதுகிறது. எனவே, மத்திய அரசு வழங்கும் மானியத்தை கிலோவுக்கு ரூ.2லிருந்து ரூ.10 ஆக உயர்த்திக் கொடுக்கவும், அதற்கான ரூ.282.12 கோடிக்கான நிதியை அளிக்கவும் மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

ஏப்ரல் 2000 முதல் பிப்ரவரி 2001 நிறைவுற்ற காலத்தில் மிக அதிக அளவில் அதாவது 13.06 மில்லியன் கிலோ தேயிலை இறக்குமதியின் காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளது. 1–4–2001 முதல் தாராளமாக தேயிலை இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை நீக்குவதன் மூலம் சிறுவிவசாயிகளின் நிலைமை மேலும் பாதிப்பதோடல்லாமல், தேயிலை ஏலத்தின்போது தேயிலை வாங்குவதில் சரிவு ஏற்பட்டு மேலும் விலை வீழ்ச்சியடையும். எனவே உதகைச் சிறு விவசாயிகளின் நலன்களைக் காப்பதற்கும், அவர்களுக்கு உதவுவதற்கு கீழ்க்கண்டாறு நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்ளப் பரிந்துரைக்கப்படுகிறது.

உலக வர்த்தக நிறுவனம் (W.T.O.)–ன் அனுமதிக்கிணங்க இறக்குமதி வரியை 70 சதவீதத்திலிருந்து 150 சதவீதத்திற்கு உயர்த்துதல். இது உள்நாட்டு உற்பத்தியாளர்கள் வர்த்தகம் செய்வதில் நன்கு செயல்பட உதவும்.

நூறு சதவீதம் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் (E.O.Us) மூலம் வரியில்லாத தேயிலை இறக்குமதியை (ஏற்றுமதித் தேயிலை அலகுகளின்) நிறுத்துதல் உள்நாட்டு தேயிலை மிக அதிகமாக கிடைப்பதாலும் அதிகமான ஏற்றுமதி ரஷ்யாவிற்கு ரூபாய் மதிப்புக் கணக்கில் செய்யப்படுவதாலும் முழுமையாக ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் ஏற்றுமதி வரி கொடுக்கச் செய்து பின்னர் ஊக்கத் தொகையைப் (Draw back) பெற்றுக் கொள்ளச் செய்யலாம்.

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தேயிலைக்குக் குறைந்த இறக்குமதி வரி விதித்து ஆதரிப்பதை நிறுத்தவேண்டும். ஏனெனில் தென்னிந்திய தேயிலை மார்க்கெட் அழியும் தருவாயில் உள்ளது.

மேலும், இந்தியத் தேயிலையை அனுப்பும்போது 100 சதவீதம் இந்தியத் தேயிலை இருந்தால் மட்டுமே இந்தியத் தேயிலை எனச் சான்றிதழ் வழங்க வேண்டும். இந்தியத் தேயிலையுடன் இறக்குமதித் தேயிலை கலப்பு செய்யப்படுமானால் இச்சான்றிதழ் அளிக்கப்படக் கூடாது. எங்கு உருவான தேயிலை என்ற சான்றிதழ் தேயிலை வாரியத்தால் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

பதினொன்றாம் நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் வருவாயில் ஏற்படும் இழப்பீட்டை ஈடுசெய்ய வெளிச்சந்தை கடன் (Market Borrowings) அதிக அளவில் பெறவும், சிறுசேமிப்பு (Small savings) வசூல் மீது கூடுதல் கடன் பெறவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

பழுப்பு நிலக்கரி மூலம் ராயல்டி தொகையை (Royalty) முன் தேதியிட்டு அளிக்க வேண்டும் என பிரதமரிடம் கோரப்பட்டது. மேலும், இதன் விளைவாக மாநிலத்திற்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகையை அளிக்கவும் பிரதமரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உலக வங்கியிடமிருந்து விரைவாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு பிரதமர் அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

தேசிய சித்த மருத்துவ நிறுவனத்திற்கான தொடரும் மற்றும் தொடரா செலவினங்களை மத்திய அரசு பகிர்ந்து கொள்ள ஒப்புதல் கோரப்பட்டது.

சென்னையில் இந்திய தகவல் தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை நிறுவனத்தை (Indian Institute of Information Technology and Management) ஏற்படுத்தவும், தமிழகத்தின் தென் மாவட்டங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சேது சமுத்திர கால்வாய் திட்டத்தை விரைவில் நிறைவேற்றவும் பிரதமர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

தமிழக முதலமைச்சர், தமிழ்நாட்டு மண்ணில் இயங்கிவரும் சில மதவாத, தீவிரவாத மற்றும் பிரிவினை வாத குழுக்களை அதாவது அல்உம்மா, ஜிஹாத் கமிட்டி, தமிழ்நாடு விடுதலைப்படை மற்றும் தமிழ்நாடு மீட்புப்படை ஆகியவற்றைத் தடை செய்து உத்தரவு வெளியிடுமாறு கோரினார்.

பாரதப்பிரதமர், அண்மையில் நடந்த தமிழக சட்டமன்ற தேர்தலில் முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ் மக்கள் அளித்த மகத்தான தீர்ப்பை வெகுவாகப் பாராட்டினார்கள்.

பாரதப்பிரதமர், தமிழக முதலமைச்சர் எழுப்பிய பல்வேறு கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலிப்பதாக உறுதி அளித்தார்; உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். •



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25–6–2001 அன்று புதுடில்லியில், மேதகு இந்திய குடியரசுத்தலைவர் திரு.கே.ஆர். நாராயணன் அவர்களை மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

# விவசாயிகளின் கூட்டுறவு வங்கிக் கடன் சுமையிலிருந்து நிவாரணம்

**மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அறிவிப்பு**



மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.6.2001 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிக் கடன் சுமையிலிருந்து நிவாரணம் வழங்கும் திட்டத்தை அறிவித்தார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

★ 1992–ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு கடன் சுமையிலிருந்து நிவாரணம் வழங்க, கூட்டுறவு வங்கிகளில் குறுகிய கால மற்றும் மத்திய கால கடன் பெற்ற விவசாயிகளுக்கு, போனஸ் திட்டம் என்ற திட்டத்தின் கீழ் வட்டி மற்றும் அபராத வட்டி சலுகை வழங்கப்பட்டது.

★ மீண்டும் 2001–இல் விவசாயிகள் கடன் சுமையால் படும் அவதியில் இருந்து உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் வழங்க முடிவு எடுக்கப்பட்டது. விவசாயிகள் கட்ட வேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டி முழுவதையும் அரசே ஏற்றுக் கொண்டு, கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

★ இத்திட்டத்தின் மூலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த செயல்களுக்காக கடன் பெற்றவர்கள், 30.6.2000 அன்றைய தேதியில், தவணை கடந்த அசல் தொகையும், 1.7.2000–லிருந்து 31.8.2001 வரை கட்ட வேண்டிய தவணைத் தொகையும், 30.9.2001க்குள் செலுத்தினால், அவர்களுக்கு 30.6.2000 நிலவரப்படி, அவர்கள் கட்ட வேண்டிய முழு வட்டி மற்றும் அபராத வட்டியை, அவர்கள் சார்பாக அரசே ஏற்றுக்கொண்டு அதற்கு ஈடான தொகையை, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும்.

★ 30.6.2000 தேதியிலிருந்த தவணைத் தொகையை ஏற்கெனவே செலுத்தியவர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

★ இத்திட்டம் குறுகிய கால, மத்திய கால மற்றும் மத்திய கால மாற்றுக் கடன்களுக்கும் பொருந்தும்.

★ இத்திட்டத்தின் மூலம், தவணை கடந்த வட்டித் தொகை ரூ.241.47 கோடியும், அபராத வட்டியாக ரூ.69.04 கோடியும் ஆக மொத்தம் ரூபாய் 310.51 கோடி தொகை கட்டுவதிலிருந்து விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கிறது.

★ விவசாயப் பெருங்குடி மக்கள் இத்திட்டத்தின் பலனை முழுவதும் பெற்று பயன் அடைய வேண்டுமென இவ்வரசு விரும்புகிறது. ✸

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மேதகு ஆளுநர் அவர்களை 9-6-2001 அன்று சந்தித்தார். முதலமைச்சரின் ஆலோசனைக்கிணங்க அமைச்சர்கள் திரு. அய்யாறு வாண்டையார், பொள்ளாச்சி திரு. வி.ஜெயராமன், திரு. ஆர். விஸ்வநாதன் ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களுக்குப் பதில் புதிதாக மூன்று அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். அத்துடன் சில அமைச்சர்கள் பொறுப்பேற்றுள்ள துறைகளும் மாற்றப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு :

# புதிய அமைச்சர்கள் பதவியேற்பு

**துறைகள் மாற்றப்பட்டவர்கள் :**

திரு. **பி.சி. இராமசாமி** - இந்து அறநிலையத்துறை அமைச்சர்

திரு. **பி. தனபால்** - உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்

திருமதி **ஆர். சரோஜா** - சுற்றுலாத்துறை அமைச்சர்

**புதிய அமைச்சர்கள்**

திரு. **ஆர். ஜீவானந்தம்** - வேளாண்மைத்துறை அமைச்சர்

திரு. **சி. சண்முகவேலு** - பால்வளத்துறை அமைச்சர்

திரு. **ஆர். வைத்திலிங்கம்** - தொழில்துறை அமைச்சர்

புதிய அமைச்சர்களுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் 11-6-2001 அன்று பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். பதவியேற்பு நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் பங்கேற்றனர்.



திரு. **ஆர். ஜீவானந்தம்**
வேளாண்மைத்துறை அமைச்சர்




**திரு. சீ. சண்முகவேலு**
பால்வளத்துறை அமைச்சர்



**திரு. ஆர். வைத்திலிங்கம்**
தொழில்துறை அமைச்சர்



**திருமதி வளர்மதி ஜெபராஜ்** அவர்கள்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
அமைச்சராக
29-6-2001 அன்று பதவியேற்றார்.



பேதகு ஆளுநருடன் மாற்றப்பட்ட அமைச்சரவை

## கிராமப்புற மாணவர்கள் உயர்கல்வி பெற பள்ளிகளின் நிலை உயர்வு

கிராமப்புற ஏழை எளிய மாணவர்கள் ஆரம்பக் கல்வியோடு நிறுத்திவிடாமல் தொடர்ந்து எந்த தடையுமின்றி இடைநிலை மற்றும் மேனிலை கல்வி பெற்று, சுயவேலைவாய்ப்பும் உயர் கல்வியும் பெற துணையாக, அரசு படிப்படியாக அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேனிலை பள்ளியாக உயர்த்தும் என அறிவித்ததன்படி, இவ்வாண்டில் (2001–2002) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 100 அரசு நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளிகளாகவும், 125 அரசு உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். இதனால் பல ஆயிரக்கணக்கான கிராமப்புற மாணவ மாணவிகள், குறிப்பாக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் ஆதிதிராவிட மாணவ மாணவிகள் பெரிதும் பயனடைவார்கள்.

இவ்வாறு நிலையுயர்த்துவதால்,

- 200 பட்டதாரி பணியிடங்களும்,
- 100 தமிழாசிரியர் பணியிடங்களும்,
- 100 இளநிலை உதவியாளர் பணியிடங்களும்,
- 100 அலுவலக உதவியாளர் பணியிடங்களும்,
- 875 முதுகலை ஆசிரியர் பணியிடங்களும்,
- 100 உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களும்,
- 125 மேனிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களும்

புதிதாக உருவாக்கப்படுகின்றன. இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவு சுமார் 16 கோடியாகும்.

# மாண்புமிகு முதலமைச்சருடன் தொட்டில் குழந்தைகள் சந்திப்பு

குடும்ப நலத்தையும், பெண் குழந்தைகள் நலத்தையும் மேம்படுத்தி, பெண் சிசுக்களை கொலை செய்கின்ற கொடுஞ்செயலை அறவே ஒழித்துக் கட்டிட தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அரசு 1992ஆம் ஆண்டில் பெண் குழந்தை நலத் திட்டத்தை தொடங்கியது. இந்நலத்திட்டத்தின் ஓர் அங்கமான தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ் உயிர் மீட்கப்பட்ட குழந்தைகளில் 50 குழந்தைகள் தத்து கொடுக்கப் பட்டுள்ளன.

### தொட்டில் குழந்தைகள் மாண்புமிகு முதலமைச்சரிடம் ஆசி

தற்போது, 2001 மே திங்களில் தமிழகத்தின் முதல் அமைச்சராக செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மீண்டும் பொறுப்பு ஏற்றுக் கொண்டதும், தொட்டில் குழந்தைகள் திட்டத்தின் கீழ் குழந்தைகள் வரத் தொடங்கி விட்டன. முன்னர் தொட்டில் குழந்தைகள் திட்டத்தின் கீழ் 1992ஆம் ஆண்டு உயிர் மீட்கப்பட்டு, தத்தெடுக்கப்பட்டு சென்னை தாம்பரம் எஸ்.ஓ.எஸ். வில்லேஜில் பராமரிக்கப்பட்டு வரும் 12 குழந்தைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை 18.6.2001 அன்று காலை சந்தித்து ஆசி பெற்றார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆசி பெற்ற 12 குழந்தைகளின் பெயர் விவரம் வருமாறு:

1. ஜெயலட்சுமி
2. ராஜலட்சுமி
3. கல்யாணி
4. மகாலட்சுமி
5. கமலா
6. கலா
7. கங்கா
8. ராகினி
9. குஷ்பு
10. சத்யா

மேற்காணும் அனைவரும் தற்போது நான்காம் வகுப்பு படித்து வருகின்றார்கள்.

11. அருணா
12. லலிதா

மேற்கண்ட இருவரும் 2ஆம் வகுப்பு படித்து வருகிறார்கள்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் பிஸ்கட், காட்பரீஸ் சாக்லேட்டுகள் அடங்கிய பெட்டிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, நன்றாகப் படித்து



வாழ்க்கையில் சிறப்புடன் முன்னேற வேண்டும் என்று கூறி, தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

### புதிய தொட்டில் குழந்தைகள்

தற்போது தொட்டில் குழந்தைகள் திட்டத்தின்கீழ் சேலத்தில் 30.5.2001 அன்று ஒரு குழந்தையும், கடலூர் மாவட்டம் விருத்தாசலத்தில் 12.6.2001 அன்று ஒரு குழந்தையும் அரசு தொட்டிலில் அடைக்கலம் தரப்பட்டுள்ளது. உயிர் மீட்கப்பட்ட இவ்விரு குழந்தைகளுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.6.2001 அன்று தலைமைச் செயலகத்தில் பெயர் சூட்டினார்கள். இக்குழந்தைகளை மிகவும் வாஞ்சையுடன் அள்ளி அணைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உச்சி முகர்ந்து முத்தமிட்டு, சேலத்தில் மீட்கப்பட்ட குழந்தைக்கு சந்திரா எனவும், விருத்தாசலத்தில் மீட்கப்பட்ட குழந்தைக்கு சித்ரா எனவும் பெயர் சூட்டி, புத்தாடை வழங்கினார்கள்.

★ ★ ★

# புரட்சி வானமும் புதிய வானம்பாடிகளும்



நிலவை வானம் உதறி விட்டதாய்
நிலத்திலே யாரும் கண்டதே இல்லை!

மலரைக் கொடிகள் மறுத்து விட்டதாய்
உலகிலே யாரும் உரைத்ததே இல்லை!


இந்த நிலவுகள் -
வானம் ஒதுக்கிய வண்ண நிலவுகள்!

இந்த மலர்கள் -
கொடிகள் ஒதுக்கிய கோல மலர்கள்!

சமூகத்தின் விரல்கள் தீண்ட மறுத்த
சந்ததிப் பிழைகளாய்
இவைகள் கிடக்கையில்
ஒரு -
தேவ வானம் தேடி வந்து
ஆவ லோடு அணைத்துக் கொண்டது!
எட்டுத் திசையும் போற்றிப் பாடும்
தொட்டில் குழந்தைத் திட்டம் பிறந்தது
இருளுக்குள் தங்களை இழக்க இருந்த
தளிர்களுக் கெல்லாம்
ஒருதாய் கிடைத்தார்!

உடனே -
கருணைத் தாயே வாழ்க என்று
கருப்பைப் பூ க்களும் கவிதை பாடின?
ஏன்?
தாயகம் ஒதுக்கிய தளிர்களை அந்தத்
தாய் அகம் அல்லவா
தாங்கிக் கொண்டது!

அச்சமே இல்லை, புரட்சித் தலைவி
நிச்சயம் நம்மைக் காப்பார் என்று
கள்ளிப் பாலையும்
மறந்து, பெண் குழந்தைகள்
துள்ளிக் குதித்தன கருப்பைக் குள்ளே!
நாளை நமக்குமோர்
வானம் உண்டென்ற
நம்பிக்கையில் அந்தப்
பிறைகள் வளர்ந்தன!



இன்றைக்கு இதோ -
வானமும் அந்த வண்ணப் பிறைகளும்
ஒரு
மவுனப் புரட்சிக்குச் சாட்சியாய் உள்ளன
இந்தப் பிறைகள் முழுநில வாகும்
எந்தத் திசையையும் ஒளிமய மாக்கும்!
'வளர்த்த வானத்தை வாழ்த்திப் பாடும்
வானம் பாடிகள் யாம்' என்று பாடும்

புரட்சித் தலைவி ஓர் புரட்சி வானம்!
இவர்களே அந்த வானம் பாடிகள்!

வானம் பாடிகள் என்னும் சொல்லுக்குப்
புதிய காரணம் புலப்பட்டு விட்டது
வரலாறு புருவத்தை உயர்த்திப் பார்க்கும்
வானம் வாழ்க! வானத்தின் குழந்தைகள்
வானம் பாடிகள் வாழ்க! வாழ்கவே! ●

☐ இளந்தேவன்

# 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவச் செல்வங்களுக்கு முதலமைச்சர் பாராட்டு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **18.6.2001** அன்று தலைமைச் செயலகத்தில், கடந்த **2001** மார்ச் திங்களில் நடைபெற்ற பள்ளி இறுதி வகுப்பு பொதுத் தேர்வில் (S.S.L.C.) தமிழை முதற் பாடமாகக் கொண்டு பயின்ற மாணவ, மாணவியர்களில் மாநிலத்திலேயே மொத்த மதிப்பெண்கள் அதிகம் பெற்று முதல் மூன்று நிலைகள் பெற்ற ஏழு மாணவச் செல்வங்களுக்கு மேல்நிலைப் பள்ளியில் தொடர்ந்து படிப்பதற்கு உதவித் தொகையாக தலா ரூ.1,500–க்கான காசோலைகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டினார்கள்.

முதலமைச்சர் அவர்கள், பரிசு பெற்ற மாணவச் செல்வங்கள் தொடர்ந்து நன்முறையில் மேற்படிப்பு பயின்று தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தரவேண்டும் என்று கூறி தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியின்போது பாராட்டு பெற்ற மாணவ, மாணவியர்களின் பெற்றோர்களும் உடன் இருந்தார்கள்.

முதலமைச்சர் அவர்களிடம் பரிசு பெற்ற முதல் மூன்று நிலைகளில் தேறிய மாணவ, மாணவியர்களின் விவரம் வருமாறு:

**முதல் நிலை :**

1. பி. ஏகம்மை
   சாவித்திரி வித்யாலயா இந்து பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி
2. என். சுபாஷினி
   சாராதக்காள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி பாளையங்கோட்டை

**இரண்டாம் நிலை :**

3. ஆர். அனிதா
   இமாகுலேட் இருதயமேரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பாண்டிச்சேரி
4. டி. சுஜாரிதா
   இமாகுலேட் இருதயமேரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பாண்டிச்சேரி
5. எம்.எஸ். கலையரசி
   புனித வளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி திண்டுக்கல்


**மூன்றாம் நிலை**

6. ஆர். சூரியா
   இமாகுலேட் இருதயமேரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கண்ணுவாப்பேட்டை, பாண்டிச்சேரி
7. பி. தினேஷ்
   எஸ்.எஸ்.டி.பி. ஆண்கள் மேல்நிலைப்பள்ளி திருவெண்காடு, நாகப்பட்டினம் மாவட்டம்



# போர்க்கால அடிப்படையில் சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவர துரித நடவடிக்கை

தற்போது சென்னை நகர மக்களுக்கு குடிநீர் செங்குன்றம் ஏரியில் ஓரளவு இருக்கும் தண்ணீரைக் கொண்டும், சென்னைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள கிணற்றுத் தளங்களிலிருந்து எடுக்கப்படும் நீரைக் கொண்டும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறு வழங்கப்படுகின்ற குடிநீர் போதுமானதாக இல்லை என்பதைக் கருத்திற்கொண்டு, நெய்வேலியிலிருந்து லாரிகள் மூலமாகவும், ஈரோடு மற்றும் மேட்டூரிலிருந்து ரயில் மூலமாகவும் குடிநீரினைக் கொண்டு வந்து சென்னை நகர மக்களுக்குப் போர்க்கால அடிப்படையில் துரித நடவடிக்கை மேற்கொண்டு விநியோகம் செய்ய வேண்டும் எனத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் அடிப்படையில் நெய்வேலியிலிருந்து **18.6.2001** அன்று முதல் லாரிகளில் குடிநீர் நிரப்பப்பட்டு சென்னை நகருக்கு கொண்டு வரப்படுகின்றன. இந்த ஒவ்வொரு லாரியின் கொள்ளளவு சுமார் **10,000** லிட்டர் ஆகும். இவ்வாறு நெய்வேலியிலிருந்து தண்ணீரை நிரப்பிக்கொண்டு புறப்படுகின்ற லாரிகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்த்தப்பட்டு நாளொன்றுக்கு **500** லாரிகள் என்ற வகையில் லாரிகளின் நடைகள் உயர்த்தப்படும். நெய்வேலியிலிருந்து லாரிகள் மூலம் பெறப்படுகின்ற குடிநீரானது நேராக கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பின்பு





பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. நெய்வேலியிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற குடிநீரானது பெரிய ஆழ்துளைக் கிணறுகள் மூலம் எடுக்கப்படுகின்றது. லாரிகள் மூலம் தண்ணீர் கொண்டுவரப்படுகின்ற பணிகளைச் சென்னைக் குடிநீர் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நெய்வேலி நகரியம் ஆகிய துறைகள் இணைந்து செயல் படுத்துகின்றன.

சென்னைக் குடிநீர் வாரியம், வாரியத் தலைமைப் பொறியாளர்கள் தலைமையில், பொறியாளர்கள் அடங்கிய குழுக்களை அமைத்து இக்குழுவினர் நெய்வேலியிலும், நெய்வேலியிலிருந்து சென்னை நகருக்கு வரும் வழியிலும், சென்னை நகரிலும் கண்காணித்து, லாரி நடைகளில் எவ்விதத் தடங்கலும் ஏற்படாமல் இருக்கும் வகையில் தங்கள் பணியை மேற்கொள்வார்கள்.

• • •

## ரயில் மூலம் குடிநீர்

ஈரோட்டிலிருந்து ரயில் மூலம் குடிநீர் சென்னைக்கு 21–6–2001 அன்று கொண்டு வரப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. ஈரோட்டிலிருந்து 60 வேகன்கள் பொருத்தப்பட்ட ரயில் மூலம் தினசரி 15 இலட்சம் லிட்டர் குடிநீர் சென்னைக்கு கொண்டு வரப்படும். இந்த ரயில் வில்லிவாக்கம் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டு குழாய் மூலம் கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்துக்கு கொண்டு சென்று சுத்திரிகரிக்கப்பட்டு சென்னை நகருக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மேட்டூரிலிருந்து குடிநீர் ஜூலை 5ஆம் தேதியிலிருந்து சென்னைக்கு ரயில் மூலம் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்படும்.●

# தேயிலை விவசாயிகள் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட 20 பேருக்கு, ரூ.31 இலட்சத்து 30 ஆயிரம் உதவி



நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை விவசாயிகள் பச்சைத் தேயிலைக்கு நியாயமான விலை கோரி கடந்த ஆண்டு மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை போராட்டம் நடத்தினார்கள். போராட் டங்களின் போது உதகமண்டலம் வட்டம் மீக்கேரி பகுதியில் பாதிக்கப்பட்ட 20 நபர்களுக்கு மாநில மனித உரிமை ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட தொகை முந்தைய அரசால் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்து வந்தது.

தமிழக முதலமைச்சர் அவர்கள் இதனைக் கருணையுடன் பரிசீலனை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப் பரிந்துரை செய்யப்பட்ட முழுத் தொகையையும் உடனடியாக வழங்க ஆணை பிறப்பித்தார். அதன்படி, பாதிக்கப் பட்ட சிறு தேயிலை விவசாயிகள் 3 நபர்களுக்குத் தலா ரூ.3,00,000 வீதமும், 10 நபர்களுக்கு தலா ரூ.2,00,000 வீதமும் 3 நபர்களுக்குத் தலா ரூ.50,000 வீதமும், 4 நபர்களுக்கு முறையே ரூ.30,000, ரூ.25,000, ரூ.15,000, ரூ.10,000 ஆகவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 7.6.2001 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள். •

# நீ என்னை நன்றாகப் பார்க்க முடிகிறதா?

வருஷம் 1934; ஒரிஸ்ஸா யாத்திரை. ஒரு நாள் மாலை காந்திஜி தம் கூட்டத்தினருடன் யாத்திரை தொடங்கியிருந்தார். வழிநெடுக உற்சாகம் மிகுந்து காணப்பட்டது. கிராமவாசிகள் வரிசை வரிசையாக நின்றுகொண்டு காந்திஜியின் வரவை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு இடத்தில் மிகப்பெரிய கூட்டம். ஜனங்கள் தெரு முழுவதும் பரவி இருந்தார்கள். இதன் மத்தியில் குழிவிழுந்த கண்களும், மங்கலான பார்வையும், தலை நரைத்தும் இருந்த ஓர் கிழவி அங்குமிங்கும் ஓடிக் கொண்டே ''எங்கே அவர்? நான் அவரைக் கட்டாயம் பார்த்தே ஆக வேண்டும்'' என்று கூறிக் கொண்டிருந்தாள்.

கிழவி உற்சாகமாகவும் திட நம்பிக்கையுடனும் இருந்த போதிலும் சந்தர்ப்பச் சூழ்நிலையால் காந்திஜியை தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டாமல் போய்விடுமோ என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் காந்திஜி அந்த ஏமாற்றத்திற்கு இடம் கொடுக்காமல் கிழவியைப் பார்த்து விட்டார். அவர் உடனே நின்று அவளைக் கூப்பிட்டார். மிக ஆர்வத்துடன் அவள் காந்திஜியின் பக்கத்தில் வந்து தன்மங்கலான பார்வையை அவர்மீது செலுத்தினாள். காந்திஜி கலகலவென்று சிரித்து 'எப்படியிருக்கிறாய்!' என வினவினார். மேலும் அவள் முதுகைத் தடவிக்கொடுத்துக் கொண்டே ''நீ என்னை நன்றாகப் பார்க்கமுடிகிறதா?'' எனக் கேட்டார்.

கிழவியின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லாமற் போய்விட்டது. கலக்கமுற்ற நிலையில் அவள் தன் கைகளை காந்திஜியின் கழுத்திலும் தலையை அவர் மார்பின் மீதும் வைத்து தன்னையே மறந்த நிலையில் காணப்பட்டாள்.

மெதுவாக காந்திஜி அவள் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டார். அவளும் கனவுலகத்திலிருந்து சுய உணர்ச்சிக்கு வந்து அக்கூட்டத்தில் ஐக்கியமாகி விட்டாள். ஆனால் அவளுடைய சுருங்கிப்போன முகத்தில் இன்னும் இன்னொளி படர்ந்திருந்தது.

— *'காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்'* நூலிலிருந்து...

# வாழ்க்கைக்கு கண்ணதாசன்

கவிஞர் தென்காசி கணேசன்

பாட்டு என்பது பொழுது போக்கிற்காக மட்டும் பாடப்படுவது அல்ல. அது உள்ளம் தொட்டு உயிரை வளர்க்க வேண்டும். பாடலோ கவிதையோ எழுதிய கவிஞனை மட்டுமல்லாமல் படிக்கின்ற மக்களையும் மகிழ்வடையச் செய்ய வேண்டும். இது எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. படித்தவன் மட்டுமல்ல பாமரனையும் சென்றடையும் கவிஞர்களை விரல்விட்டு எண்ணிவிட முடியும். பாரதிக்குப் பின் மக்களை அடைந்த மக்கள் கவிஞன் கண்ணதாசன் ஒருவனே என்பதில் இருவேறு கருத்துக்கள் இல்லை.

எளிமையிலே இலக்கியத்தைத் தந்தவன், இலக்கியத்திலே எளிமையைக் கண்டவன், அதனால் தான் அந்த மாகவிஞனின் பெயர் தமிழ் மொழி வரலாற்றோடு பிணைந்தே இருக்கும். ஒரு கவிஞனுக்குத் தேவை திறமை, தன்னம்பிக்கை மற்றும் துணிவு. இந்த மூன்றுமே பாரதியைப் போலவே இந்தச் சிறுகூடல் பட்டிக் குயிலிடமும் நிறைந்தே இருந்தது.

"மானிட இனத்தை ஆட்டி வைப்பேன், அவர் மாண்டுவிட்டால் அதைப் பாடி வைப்பேன்! நான் நிரந்தரமானவன் அழிவதில்லை, எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை" என்று மரணம் அவனைத் தழுவிய காலத்திற்கு இருபது வருடம் முன்னதாகவே பாடுகின்ற துணிச்சல் இருந்தது. அதிலே தன்னம்பிக்கையும் திறமையும் தெரிகின்றது.

உளியால் செதுக்கப்படுபவைகள் எல்லாம் சிலைகள் ஆவதில்லை. உணர்ச்சிகளாலும் உந்துதல்களாலும் உதிர்கின்ற வார்த்தைகள் எல்லாம் கவிதைகள் ஆவதில்லை. தமிழ்த்திரை வரலாற்றிலே எத்தனை கவிஞர் பெருமக்கள் பாடல்கள் எழுதியிருந்தாலும் "கண்ணதாசனுக்குப் பின் – கண்ணதாசனுக்கு முன்" (க.மு., க.பி.) என்ற ஒரு நிலையை ஏற்படுத்தியவன், அவன். அவனுடைய பாடல்கள் வாழ்வின் எல்லாத் துறைகளிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் எல்லா வயதினராலும் பாடப்படுகின்ற பெருமை கொண்டது. அவன் கையாளாத பொருளுமில்லை தலைப்புமில்லை. அந்தக் கவிக்கடலின் சில துளிகள் இங்கே... நம் வாழ்வுக்கு...

**காதல்**

காதலைப் பாடாத கவிஞன் இல்லை என்பார்கள். ஆனால் நான் கூறுவேன் – காதலைப்பாடாதவன் கவிஞனே இல்லை. காதல் மனித வாழ்வின் ஒரு அங்கம். பாரதியின் "காதல் செய்வீர் – காதலினால் இன்பம் உண்டு". இவைகளை ஒட்டியே கவியரசும் காதலை அற்புதமாய்ப் பாடியிருக்கிறார். கம்பனுக்கும், பாரதிக்கும் பிறகு காதலை கண்ணியமாய் கையாண்டவன் இவன்.

*"மண் பார்த்து விளைவதில்லை – மரம்*
*பார்த்து காய்ப்பதில்லை*
*கன்னியரும் பூங்கொடியும் கன்னையா – அவர்*
*கண்ணிலே களங்கமுண்டோ சொல்லய்யா"*

என்று, அந்தக் காதல் எப்படியிருக்கும் என்கிறான்! அத்துடன், வள்ளுவனின் குறளை கருத்திலே வைத்து இதோ,

*"உன்னை நான் பார்க்கும் போது*
*மண்ணை நீ பார்க்கின்றாய்*
*விண்ணை நான் பார்க்கும் போது*
*என்னை நீ பார்க்கின்றாய்"*

என்றும் விவரிக்கிறான்!

அவனின் காதல் சிந்தனை கூட வாழ்வின் சராசரி மனிதனின் எண்ணத்துடன் ஒத்துப் போகிறதென்றால் அதற்குக் காரணம், கவிஞனே கதாபாத்திரமாக மாறுவதுதான். "காவியத்தாயின் இளைய மகன் காதல் பெண்களின் பெருந்தலைவன்" என்று தன்னையே பாடிக் கொள்கிறான். வாழ்க்கை என்பது தத்துவம் பேச மட்டுமல்ல, தத்தையுடன் மெத்தையில் கூடவும்தான் என்பதே அவன் கொள்கை. காதலை ரசித்தான். வாழ்வைச் சுவைத்தான். அதனால் தான்

*"ஆண்டொன்று போனால் வயதொன்று போகும்*
*அதற்கு முன்னாலே வா வா வா!*
*அழகுடன் இளமை தொடர்ந்து வராது*
*இருக்கின்ற போதே வா வா வா!"*

என்கின்றான். எல்லோரும் இளமையடைந்து, மணமாகி, வாழ்கிறார்கள். ஆனால் காதலை நுகர்ந்து அனுபவிப்பவர்களுக்குத் தான் காதல் காவியமாகும். அதனால் தான்,

*"இளமையின் இந்த ரகசியம்*
*இயற்கையில் வந்த அதிசயம் – இதை*
*வாழ்ந்து பார்த்தவர் ஆயிரம் – அதில்*
*நாமும் இன்னோர் காவியம்"*

என்கிறான். ஆனாலும் பண்பாடு தவறி காதலுக்கு அவன் ஒப்புதல் தரவே இல்லை.

'பெண் இல்லாமல் சுகம் இல்லை உலகினிலே' என்றவன் 'அணைத்து வளர்ப்பவளும் தாயல்லவா அணைப்பில் அடங்குபவளும் அவளல்லவா' என்கிறான்.

அந்தக் காதலி தாய்மை உணர்வுடன் இருந்தால்தான் அன்பும், ஆசையும் இருப்பதுடன் இணைந்து வாழும் ஆதரவும் இருக்கும் "அவனுக்காக அவள் – அவளுக்காக அவன்" என்பதைத்தான்,

'நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்' என்கிறான். அதுமட்டுமா. 'நான் காணும் உலகங்கள் நீ காண வேண்டும். நீ காணும் பொருள் யாவும் நானாக வேண்டும்' என்கிறான். இந்த வரிகளில்தான் காதலின் உண்மையான தத்துவம் இழைந்தோடுகிறது. காதலியின் அன்புடன் தாய்மையை இணைத்தே பாடியிருப்பது எல்லோருடைய வாழ்விற்கும் தேவையான ஒன்று, அடிப்படையான ஒன்று, அவசியமான ஒன்று.

*'புதையல் தேடி அலையும் உலகில்*
*இதயம் தேடும் என் உயிரானது'* என்றும்

*'தாய்மை எனக்கே தந்தவள்'* என்றும்

*'மனதாலும் நினைவாலும் தாயாக வேண்டும்'* என்றும் பாடுவது இங்கே நோக்கத்தக்கது.

காதலி மட்டும் காதலனிடம் என்ன தேடுகிறாள்? வெறும் தாம்பத்ய உறவை மட்டுமா? அல்லவே! இதோ:–

*"சின்ன சின்ன பறவை*
*அன்னை அவள் மடியில்*
*தவழ்வது போல் தவழ்ந்திருப்பேன்*
*கண்ணை மெல்ல மறைத்து*
*உன்னை கையில் எடுத்து*
*காலமெல்லாம் அணைத்திருப்பேன்"*

– என்பதில் வாழ்வின் இழைவு தெரிகிறது.

அது மட்டுமா

*'உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல;*
*உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல'*

– என்பதுடன்

*'என் மேனியில் உன்னை பிள்ளையைப் போல*
*நான் வாரியணைப்பேன் கைகளினாலே*
*நீ தருவாயோ நான் தருவேனோ*
*யார் தந்த போதும் நீயும் நானும் வேறல்ல'*

என்றும் பாடுவது நோக்கத்தக்கது! இந்தக் காதல் மானிடர்க்குப் பொது; இதனைத் தடுப்பது பெரிய தீது என்பதைத்தான்–

*'காதலுக்கு சாதியில்லை மதமுமில்லையே*
*கண்கள் பேசும் வார்த்தையிலே பேதமில்லையே –*



*'வேதமெல்லாம் காதலையே மறுப்பதில்லையே – அது*
*வேதம் செய்த குருவைகூட விடுவதில்லையே'*

– என்று கூறுகிறான் அது மட்டுமல்ல,

*'நம் முன்னவர்கள் வெறும் முனிவரில்லை*
*அவர் தனித்திருந்தால் நாம் பிறப்பதில்லை'*

– என்று இந்த மண்ணின் தத்துவத்தை, மதம் கடந்த ஒழுக்கமான பழக்கத்தை, மனிதப் பிறவியின் அடிப்படைத் தேவையை, நியாயப்படுத்திக் காண்பிக்கின்றான்.

இப்படிப்பட்ட காதல் தோன்றும்போது பாமரன் என்றும், படித்தவன் என்றும், கருப்பென்றும், சிவப்பென்றும், இனமென்றும், உறவென்றும் பார்த்தா வரும். இதனைத்தானே வாழ்க்கைக் காதலாய்– காதலே வாழ்க்கையாய், தன் வசந்த வரிகளால் காண்பித் திருக்கின்றான்.

**கற்புநெறி**

காதலை ஒட்டிய கற்பு நெறியைப் பற்றி அவன் கூறுவதுகூட, என்றைக்கும் உகந்ததாய் அல்லவா இருக்கின்றது.

"மானிட இனத்தை
ஆட்டி வைப்பேன்,
அவர் மாண்டுவிட்டால்
அதைப் பாடி வைப்பேன்!
நான் நிரந்தரமானவன்
அழிவதில்லை,
எந்த நிலையிலும்
எனக்கு மரணமில்லை"

கற்பென்பது இருவருக்கும் பொதுவென்பதை அங்கீகரித்தே அவன் பாடல்கள் பிறந்திருக்கின்றன.

*"ஆயிரம் பெண்மை மலரட்டுமே*
*ஆயிரம் கண்கள் ரசிக்கட்டுமே*
*ஒருத்தியின் கணவன் ஒருவனுக்கென்றே*
*சொல் சொல் சொல்'*

என்று பெண்மையை வலிமையாய் காட்டுகிறான். அடுத்த வரிகளிலே அந்த உள்ளத்தின் மென்மையையும் காட்டுகின்றான்.

*'ஒரு கொடியில் ஒரு முறைதான்*
*மலரும் மலரல்லவா*
*ஒரு மனதில் ஒரு முறை தான்*
*வளரும் உறவல்லவா'*

என்று கற்புடைய காதலைக் காட்டுகின்றான்!

கற்பு என்பதே முறையான காதலுடன் சேர்ந்தது. அதனைத்தான் :

*'அடக்கம் என்பது பெண் உருவம்*
*அதனை அறிந்தால் விலகும் என் உருவம்'*

கண்டவுடன் காதல், முறையற்ற காதல், இவைகளை சாடுபவையே இந்த வரிகள். ஆணுக்கும் இந்த நெறி உண்டு என்பதைத்தான்

*'உள்ளத்தை ஒருத்திக்குக் கொடுத்துவிடு*
*அந்த ஒருத்தியை உயிராய் மதித்துவிடு'*

என்ற வரிகளிலே கூறுகின்றான்.

இப்படிப்பட்ட காதல் நெறியும், கற்பு நெறியும் இணைந்த இல்லற உறவுதனை எப்படிக் கூறுகிறான் என்பதனை அடுத்துப் பாா்ப்போம்.

**இல்லறம்**

வள்ளுவன் சொன்ன இல்லறத்தை, தன் பாடல்கள் மூலம் தெள்ளு தமிழிலே அள்ளித் தந்திருக்கின்றான். வார்த்தைகள் எல்லாம் உள்ளத்தை கிள்ளுகின்றனவே;

*'சுற்றி நான்கு சுவர்களுக்குள்*
*தூக்கமின்றி கிடந்தோம் – ஒரு*
*துன்பம் போன்ற இன்பத்திலே*
*இருவருமே நடந்தோம்'*

– என்று இல்லற சுகத்தை இனிதே பாடியவன், இந்த இல்லறக் காதலை, தாம்பத்யத்தை, விரசமில்லாமல் கூறுகின்ற வார்த்தைகள்தான் எத்தனை! எத்தனை!

*'நான் காதல் எனும் கவிதை சொன்னேன்*
*கட்டிலின்மேலே!*
*அந்தக் கவிதைக்கு நான் பரிசுதந்தேன்*
*தொட்டிலின் மேலே!*

என்றும்

*'கட்டில் தந்த பாட்டு பாராட்டு*
*தொட்டில் தந்த பாட்டு தாலாட்டு'*

– என்றும் பாடுவது தாம்பத்ய உறவைப் போற்றுகிறது. அப்படிப்பட்ட உறவுதான் குடும்பத்தை வளர்க்கும். அந்தக் குடும்பம் எப்படி இருக்கும் என்பதை

*'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்*
*அன்புமணி வழங்கும் சுரங்கம்'*

– என்றும்,

*அன்னை எனும் கடல் தந்தது*
*தந்தை எனும் நிழல் கொண்டது*
*பிள்ளைச் செல்வம் எனும் வண்ணம்*
*கண்ணன் பிறந்தான்'* என்றே கூறுகிறான்.

இப்படிப்பட்ட உறவுதான் இறுதிவரை உறுதியாக இருக்கும் என்பதைத்தான்

*'ஆலம் விழுதுகள் போல் உறவு ஆயிரம்*
*வந்துமென்ன ?*
*வேர் என நீ இருந்தாய்*
*அதில் நான் வீழ்ந்து விடாதிருந்தேன்'*

**அனுபவமே வாழ்க்கை**

இப்படிக் காதலைத் தொடர்ந்து இல்லற வாழ்க்கைக்கு வார்த்தைகளைத் தந்தவன் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும், துன்பங்களுக்கும் பாடங்களையே பாடல்களாய்த் தந்திருக்கிறான். காரணம், அனைத்துமே அவனின் அனுபவம். அவனைப் பொறுத்தவரை அனுபவம் என்பது தெய்வீகம். அதைத்தான்

*பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்*
*பிறந்து பாரென இறைவன் பணித்தான்*

*படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்*
*படித்துப் பாரென இறைவன் பணித்தான்*

*பாசம் என்பது யாதெனக் கேட்டேன்*
*பகிர்ந்து பார் என இறைவன் பணித்தான்*

*மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்*
*மணந்து பாரென இறைவன் பணித்தான்*

*முதுமை என்பது யாதெனக் கேட்டேன்*
*முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்*

*இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்*
*இறந்து பாரென இறைவன் பணித்தான்*

*அனுபவித்தே அறிவதுதான் வாழ்க்கை என்றால்*
*ஆண்டவன் நீ எதற்கு என்றேன்!*

*ஆண்டவன் அருகே அழைத்துச் சொன்னான்*
*அந்த அனுபவமே நான்தான் என்று!*

அதனால்தான் நம் அனைவரின் அனுபவத்தோடு ஒத்துப்போகிறது அவனது பாடல்கள்.

## ஆசையும் எண்ணமும்

நம் அனைவரின் துன்பத்திற்குக் காரணம் எண்ணம்தான். அந்த எண்ணம் வருகின்ற இடம் மனம்; மனம் முழுதும் ஆசை; ஆசை நிறைவேறவில்லை என்றால் கவலை, துன்பம், வருத்தம், அழுகை. அந்த ஆசையைத்தான்–

*'ஆசையே அலைபோலே*
*நாமெல்லாம் அதன்மேலே*
*ஓடம் போலே ஆடிடுவோமே*
*வாழ்நாளெல்லாம்'* என்றும்

*'கையளவேதான் இதயம் வைத்தான்*
*கடல்போலே அதில் ஆசை வைத்தான்'*

– என்றும் பாடுகிறான். இந்த ஆசையை கொடுப்பதே மனம்தானே அதனைக் கூட

*'மனித ஜாதியில் துயரம் யாவுமே*
*மனதினால் வந்த நோயடா'* என்றும்

அந்த ஏழை மனதை மாளிகையாக்கி இரவும் பகலும் காவியம் பாடி, நாளைப் பொழுதை இறைவனுக்களித்தால் நடக்கும் வாழ்வில் அமைதி கிடைக்கும் என்றும் விடையும்!

இப்படியில்லாமல் ஆசையின் வழியிலே வாழ்க்கை சென்றால் நிம்மதிதான் மறையும். எனவே தான்

*''கடலளவு கிடைத்தாலும் மயங்கமாட்டேன்–அது கையளவே ஆனாலும் கலங்க மாட்டேன் உள்ளத்திலே இருப்பதுதான் உலகம் கண்ணா! இதை உணர்ந்து கொண்டேன் துன்பமெல்லாம் விலகும் கண்ணா!* என்கிறான்.

## மனமே வாழ்வு

மனத்தை வைத்தே மனித வாழ்வு என்பதை எவ்வளவு அழகாக கூறுகிறான். அப்படிப்பட்ட மனிதன் ஆசையை விட்டுவிட்டு உழைப்புடனும், நம்பிக்கையுடனும் வாழ வேண்டுமென்கிறான்.

*"பஞ்சைப்போட்டு நெருப்பை மறைப்பவன்*
*பைத்தியக்காரனடா!*

*பாவம் தீர்க்க பணத்தை இறைப்பவன்*
*பச்சை மடையனடா!*

*நெஞ்சுக்கு நீதியை மறைத்து வாழ்பவன்*
*நிச்சயம் மிருகமடா*

*தன் நேர்மையிலும், உடல் வேர்வையிலும்*
*நின்று வாழ்பவன் மனிதனடா!"*

நேர்மையும் உடல் உழைப்பும் மனிதனுக்குத் தேவை என்பதனை இந்த வரிகளிலே காட்டுகின்றான். கடமையைச் செய்யாமல், பலனை எதிர்பார்ப்பதில் நியாயமில்லை என்பதைக்கூட

*"எனக்காக நீ அழலாம் இயற்கையில் நடக்கும்*
*எனக்காக உணவு உண்ண எப்படி நடக்கும்'*
*நமக்கென்று பூமியிலே கடமைகள் உண்டு*
*அதை நமக்காக நம்கையால் செய்வது நன்று"*

– இப்படிக் கூறுகின்றான்.

இந்தக் கடமையை நிறைவேற்றுவது அவ்வளவு எளிதல்ல என்பது அவனுக்கும் தெரியும். எனவேதான், அப்பொழுது ஏற்படும், மனச்சோர்வை நீக்க நம்பிக்கை வரிகளை நமக்குத் தருகின்றான்.

## நம்பிக்கையே பலம்

*'நாளைப் பொழுதென்றும் நமக்கென வாழ்க!*
*அதை நடத்த ஒருவன் உண்டு கோவிலில் காண்க!*
*வேளை பிறக்குமென்று நம்பிக்கை கொள்க!*
*இந்த வேதனையும் மாறும் மேகத்தைப் போல!'*

அவன் பாடல்கள் நம்பிக்கை மலர்கள். எனவேதான் வாழவேண்டுமென்றால் முதலில் மனத்தில் அந்த எண்ணம் வேண்டும் என்பதை

*'வாழ நினைத்தால் வாழலாம்*
*வழியா இல்லை பூமியில்'* என்றும்

*'வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்*
*வாசல் தோறும் வேதனை இருக்கும்*
*வந்த துன்பம் எதுவென்றாலும்*
*வாடி நின்றால் ஓடுவதில்லை'*

– என்றும் நமக்கு நம்பிக்கையைத் தருகின்றான். அதற்கு அடுத்து நிம்மதி வேண்டுமானால் நம்பிக்கையுடன், மனதினில் நிறைவு வேண்டும். அதனைக் கூட

*'உனக்கும் கீழே உள்ளவன் கோடி*
*நினைத்துப் பார்த்து நிம்மதி தேடு'*

என்றும் மனமானது மாற்றத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதைக் கூட

*'பாதையெல்லாம் மாறிவரும்*
*பயணம் தொடர்ந்து வரும்*
*மாறுவதை புரிந்து கொண்டால்*
*மயக்கம் தெளிந்து வரும்'*

என்று கூறுகிறான்.

அந்த மனம் கிடைத்தால் மயக்கம் தீரும், அதனைத்தான்

*'மனமிருந்தால் பறவைக்கூட்டில்*
*மான்கள் வாழலாம்*
*வழியிருந்தால் கடுகுக்குள்ளே*
*மலையைக் காணலாம்*
*துணிந்து விட்டால் தலையில்*
*எந்தச் சுமையும் தாங்கலாம்*
*குணம்! குணம்! அது கோவிலாகலாம்!*

என்றும் கூறி அந்த மனமிருந்தால் வாழ்க்கையில் அமைதி கிடைக்கும் என்கிறான்.

*'காற்றடித்தால் சாய்வதில்லை*
*கனிந்த மனம் வீழ்வதில்லை'* என்கிறான்.

அது கிடைக்க நம்மை உணர வேண்டு மென்பதைத்தான்

*'உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால்*
*உலகத்தில் போராடலாம்,*
*உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்*
*தலை வணங்காமல் நீ வாழலாம்!'*

தன்னை அறிதலே வாழ்க்கை! தன்னை உணர்தலே வாழ்க்கை! இதுதான் மதங்கள் கூறுவது, சமயங்கள் கூறுவது; கவிஞனும் இதனை அற்புதமாய்க் கூறுகிறான்.

*'அன்னையின் மடியில் ஆடுதல் இன்பம்*
*கன்னியின் மடியில் சாயுதல் இன்பம்*
*தன்னையறிந்தால் உண்மையில் இன்பம்*
*தன்னலம் மறந்தால் பெரும் பேறின்பம்!'* என்கிறான்!

## நிலையாமையும் இறை நம்பிக்கையும்

இப்படி வாழ்க்கைக்குத் தேவையான அத்தனையும் கொடுத்து விட்டு சித்தரின் தத்துவங்களையும் அள்ளித் தந்திருக்கிறான். வாழ்க்கையின் நிலையாமையை நன்றாகவே கூறுகின்றான்.

*'வந்தது தெரியும், போவதெங்கே*
*வாழ்க்கை நமக்கே தெரியாது*
*வந்தவரெல்லாம் தங்கி விட்டால்*
*இந்த மண்ணில் நமக்கே இடமேது!*

– என்றும்

*மனிதன் நினைப்பதுண்டு, வாழ்வு நிலைக்குமென்று*
*இறைவன் நினைப்பதுண்டு, பாவம் மனிதரென்று'*

– என்றும் நிலையற்ற வாழ்வினை எண்ணிக் கொண்டு வாழ வேண்டுமென்கிறான். எனவே இறைநம்பிக்கையை வலியுறுத்துகிறான்.

*'மூலம்வித்து, முளைப்பது பூங்கொடி*
*மூலம்விந்து முளைப்பது பாலகன்*
*மூலம்மேகம், முகிழ்ப்பது பொன் மழை*
*மூலம் இல்லாமல் முளைப்பன இல்லையே!*
*ஆயின் இந்த அவனிக்கு மூலம்*
*யாரோ அறியேன் அவனை என்மனம்*
*இறைவன் என்பது எவ்வழி தவறாகும்'*

> 'வாழ்க்கை என்றால்
> ஆயிரம் இருக்கும்
> வாசல் தோறும்
> வேதனை இருக்கும்
> வந்த துன்பம்
> எதுவென்றாலும்
> வாடி நின்றால்
> ஓடுவதில்லை'

– என்று கூறுவதுடன்

*'தன்னையறிந்து தன் பால்சூழ்ந்த*
*மன்னுயிர்க் கூட்டம் மனநிலை யறிந்து*
*நம்பிய வழிகளில் நடப்போர் கண்களில்*
*இம்மை வாழ்விலும் இறைவன் வருவான்'*

– என்று கூறுகிறான்.

## நிறைவாக

இப்படி வாழ்க்கையின் அத்தனை எல்லைகளையும் தொட்டவன், நமக்கு வாழ்வதற்குரிய பொருள்களை இல்லையென்று கூறாமல் பாடல்களாய் வாரி வழங்கிய வள்ளல் கவிஞன் அவன்.

அவன் மது போதை, மாது போதை, மயக்க போதைகளில் வாழ்ந்தவன்; புகழ் போதையில் மட்டும் மயங்காதவன்; அடக்கத்தை உயர்வாய் எண்ணியதால்தான் படித்தவர் மட்டுமல்லாமல் அனைவர் நெஞ்சினிலும் கற்பனையாய், கவிதை வரிகளாய் அடங்கியிருப்பவன். எனவேதான், அவன் இளைஞர்களுக்கு தன் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம் என்று கூறியதுடன், "எப்படி வாழ வேண்டும் என்பதற்கு என் புத்தகங்களையும், எப்படி வாழக்கூடாது என்பதற்கு என் வாழ்க்கையையும் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கம்பீரமாகச் சொன்னான், அந்த இமாலயக் கவிஞன். அவனின் பாடல்கள் அனுபவத்தின் சுவடுகள் என்பதால் நம் அனைவரின் வாழ்விற்கும் என்றென்றும் அவை பாடங்களாகவே இருக்கும். கம்பனைப் பற்றி அவன் கூறிய வரிகளே அவனுக்கும் பொருத்தம் –

*காலமெனும் ஆழியிலும்*
*காற்றுமழை ஊழியிலும்*
*சாகாது கம்பன் அவன் பாட்டு*
*அது தலைமுறைக்கு எழுதிவைத்த சீட்டு.*

• • •

சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், நூற்றுக்கணக்கில் பெண்களும் ஆண்களும் திரண்டு வந்து நாள்தோறும் தங்கள் குறைகளை எடுத்துக்கூறி மனுக்களை கொடுத்து வருகிறார்கள். இம்மனுக்கள் அனைத்தையும் கவனத்துடன் ஆய்வு செய்து உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ள ஆணைப்படி, இம்மனுக்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டு தக்க நிவாரண உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 15.6.2001 அன்று, மதுரை மாவட்டம் கப்பலூரைச் சேர்ந்த திரு. எஸ். கணேசன் என்பவர், கையில் ஒரு பிஞ்சுக் குழந்தையுடன்தான் கடுமையான வறுமையில் தவிப்பதாகவும், தனது மனைவியையும், குழந்தையையும் காப்பாற்ற வழியின்றி வாடுவதாகவும், தனக்கு உதவிட உற்றார் உறவினர் எவரும் இல்லை என்றும், முதலமைச்சர் அவர்கள் தன் குடும்பம் வாழ வழி செய்திட வேண்டும் என்று கோரி மனு ஒன்றினை முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்.

திரு. கணேசனின் இவ்வேண்டுகோளை பரிவுடன் ஆய்வு செய்து, அவரது ஏழ்மையான குடும்பச் சூழலை கருத்தில் கொண்டு, கருணை அடிப்படையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,000 (ரூபாய் பத்தாயிரம்) வழங்க, முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

மேலும், திரு. கணேசன் அவர்களுக்கு மதுரை கள்ளிக்குடியில் உள்ள மகாத்மா காந்தி சத்துணவு தயாரிக்கும் மகளிர் மேம்பாட்டுத் தொழில் கூட்டுறவு சங்கத்தில் கணக்கர் வேலையில் பணியில் சேர்ந்திடவும் ஆணை பிறப்பிக்க உத்தரவிட்டார்கள்.


அதேபோல, அவரது துணைவியார் திருமதி. க. ஜரினா என்பவரை மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள திருமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி சத்துணவு மையத்தில் சமையலராக நியமித்திடவும் ஆணை பிறப்பிக்க முதலமைச்சர் அவர்கள் உத்தர விட்டார்கள்.

# வறுமையில் வாடும் குடும்பத்திற்கு முதலமைச்சர் உதவி

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.6.2001 அன்று தலைமைச் செயலகத்தில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவி ரூ.10,000/–க்கான காசோலை மற்றும் பணி நியமன ஆணையினை மனுதாரர் திரு. கணேசனிடமும், மனுதாரரின் துணைவியாருக்கான பணி நியமன ஆணையை திருமதி. ஜரினாவிடமும் நேரில் வழங்கினார்கள்.



வறுமையில் வாடிய தங்கள் குடும்பத்திற்கு கருணை அடிப்படையில் இவ்வுதவிகளை வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு, திரு. கணேசன், திருமதி. ஜரினா இருவரும் தமது பிஞ்சுக் குழந்தையுடன் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். •



# திருக்குறள் முற்றோதல் - சிறுமிக்கு முதலமைச்சர் நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம் வீரமுடையநத்தம் என்ற கிராமத்தில் வசிக்கும் திரு.சிவபெருமான் என்பவரின் 11 வயது மகள் செல்வி சிவராஜி என்ற மாணவி, தன் பள்ளியில் பேச்சுப் போட்டியிலும் கட்டுரைப் போட்டியிலும் திருக்குறள் போட்டியிலும் முதல் மாணவியாக விளங்கி வருவதாகவும், எனவே தனக்கு கல்வி பயிலுவதற்கு உதவியளிக்குமாறும், குடியிருக்க வீடு ஒன்றும், தனது சகோதரி திருமணத்திற்கு நிதியுதவியும் கோரி மனு ஒன்றினை நேரில் கொடுத்திருந்தார்.

### உடனடி நடவடிக்கை

அம்மனுவின் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு, செல்வி சிவராஜின் திருக்குறள் முற்றோதல் திறமையைப் பாராட்டி, அவருக்கு ரூ.5000 (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) முதலமைச்சர் அவர்களால் 11.6.2001 அன்று வழங்கப்பட்டது.

### செல்வி சி.சிவராஜியின் சகோதரிக்கு உதவி

செல்வி சி.சிவராஜியின் மூத்த சகோதரி 21 வயதுள்ள செல்வி சிவஜோதியின் திருமணத்திற்கு, அரசு திட்டங்களின் கீழ் உதவி செய்ய வழிவகை இல்லாத காரணத்தால், டாக்டர் எம்.ஜி.ஆர். அறக்கட்டளை சார்பாக ரூ.10,000 (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ரொக்கமாக 11.6.2001 அன்று தலைமைச் செயலகத்தில முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் நேரடியாக செல்வி சிவராஜி மற்றும் அவரது தந்தை திரு.சிவபெருமான் ஆகியோரிடம் வழங்கப்பட்டது.

### முதலமைச்சர் ஆணை

மேலும், அச்சிறுமியின் வறுமையான குடும்பச் சூழலைக் கருத்தில் கொண்டு, அரசுப் பள்ளி மற்றும் மாணவியர் விடுதியில் அவரைச் சேர்த்து, செல்வி சிவராஜி தொடர்ந்து கல்வி பயிலுவதற்கான அனைத்துச் செலவுகளையும் அரசே ஏற்றுக் கொள்ளும் வகையில் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

மேலும், குடியிருக்க வீடு வழங்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★

# கிருஷ்ணா நீர்

தமிழக அரசுக்கும் ஆந்திர பிரதேச அரசுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, சென்னை நகருக்கு கிருஷ்ணா நதிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குவது நடப்பு ஆண்டு ஜூலை 1–ஆம் தேதி முதல் தொடங்கப்பெற வேண்டும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடான ரூ.2,544.80 கோடியில் தமிழ்நாட்டினுடைய பங்குத் தொகையான ரூ.639.40 கோடியில், தமிழ்நாடு இதுவரை ரூ.512 கோடி வழங்கியுள்ளது. தற்போது சென்னை மாநகரத்தில் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுவதால், நீர்த்தேக்கங்களில் தற்போது இருக்கின்ற குடிநீர் வரும் அக்டோபர் மாதம் பருவ மழை ஆரம்பிக்கும் வரை போதுமானதாக இருக்காது.

எனவே இந்த மிகக் கடுமையான குடிநீர்ப் பிரச்சினையின் விளைவாக, தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை அமைச்சர், ஆந்திர பிரதேச அரசின் பொதுப்பணித்துறை அமைச்சருக்கு உடனடியாக குடிநீர் வழங்க வேண்டும் என்று தனது 9.6.2001 தேதியிட்ட கடிதத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார். ஆனால் ஆந்திர அரசிடமிருந்து பதில் ஏதும் கிடைக்கப் பெறாததால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு ஆந்திரபிரதேச முதலமைச்சருக்கு கடந்த 13.6.2001 அன்று இது குறித்து கடிதம் ஒன்று எழுதினார். அதன் பிறகு 10 நாட்கள் ஆன போதிலும் ஆந்திர அரசிடமிருந்து இதுவரை பதில் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே தமிழக முதல்வர் அவர்கள் ஆந்திர முதலமைச்சர் திரு.என்.சந்திரபாபு நாயுடு அவர்களுடன் 22.6.2001 அன்று தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

ஆந்திர பிரதேச முதலமைச்சர் தமிழக முதலமைச்சரிடம் தன்னுடைய மாநிலத்தின் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் தொடர்பான பணிகளில் தான் ஈடுபட்டிருந்த காரணத்தினால், தன்னால் உடனடியாக பதில் அனுப்ப இயலவில்லை என்றும், ஆயினும் தமிழக முதலமைச்சருடன் தான் தொடர்பு கொண்டு பேச விரும்பியிருந்ததாகவும் தெரிவித்தார். தற்போது தமிழக முதலமைச்சர் அவர்கள் தன்னிடம் தொடர்பு கொண்டு பேசியதை அடுத்து அவர் தன்னுடைய முழுமையான ஒத்துழைப்பை நல்குவதாகவும் கூறினார். மேலும் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆந்திர பிரதேச முதல்வர் அவர்களை கிருஷ்ணா நதிநீர் தமிழ்நாட்டின் எல்லையினை வருகின்ற ஜூலை 1–ஆம் தேதியன்று சேருகின்ற வகையில் அனுப்பிட ஆந்திர பிரதேச மாநில அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அதற்கு ஆந்திர பிரதேச முதலமைச்சர் அவர்கள் தமிழக முதல்வர் அவர்களிடம் தான் இதுகுறித்து நிச்சயமாக தேவையான நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். மேலும் அவர் தமிழக அரசின் தலைமைச் செயலர் ஆந்திர பிரதேச அரசின் தலைமைச் செயலரைத் தொடர்பு கொள்ள தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மேலும் இந்த இரு மாநில அரசுகளின் அதிகாரிகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு சென்னைக்கு குடிநீர் கொண்டு வருவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

மாண்புமிகு ஆந்திர பிரதேச முதலமைச்சர் திரு என்.சந்திரபாபு நாயுடு அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இதுகுறித்து தான் முழுமையான ஒத்துழைப்பு நல்குவதாக உறுதி அளித்தார்.

# தமிழ் கூறும் நல்லுலகம்

☐ அறிஞர் தனிநாயக அடிகள்

தமிழ் ஆராய்ச்சித் துறையில் ஈடுபடுவதற்கு வெளி நாடுகளில் தமிழறிஞர்களுக்குக் கணக்கற்ற வாய்ப்புக்கள் உள. கீழ்த்திசை நாடுகளில் தமிழ்ப் பண்பாடு மிகவும் பழமையான காலத்திலேயே பரவியது. சாவகம், சுமத்திராப் போன்ற இடங்களில், இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே தமிழ் மக்கள் குடியேறி இருக்கவேண்டுமென்பது கெல்டோன் போன்ற அறிஞர்களின் கருத்து. தமிழ்நாட்டிலிருந்து மரக்கலங்கள் அந்நாடுகளுக்குப் பண்டு சென்று வாணிகம் நடத்தின என்றும்; வாணிகம் நிலைபெற்று நீண்ட நாள் நடந்தது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இன்றும், சுமத்திராவில் வாழ்ந்து வரும் 'காரோபட்டாக்' வகுப்பினரின் உட்பிரிவினராயிருக்கும் சிம்பிரிங் என்போர், தம்மைச் 'சோளியர்', 'சேரர்', 'பாண்டியர்'' 'கலிங்கர்' என்று வகுத்திருக்கின்றனர்.


சாவகத்தில் எழுப்பப் பெற்றிருக்கும் 'பிரம்பானான்', எனும் கோயில், சைவ சித்தாந்தத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட கோயில் என்பர். அதே போன்று, 'தியங்' சமவெளியில் உள்ள கோயில்கள் பலவும், 'பனத்தரான்' கோயிலும், கணபதி அகத்தியருடைய கணக்கற்ற சிலைகளும் திராவிடத் தென்னிந்திய மக்களின் கட்டடச் சிற்பக் கலைகளை ஒட்டியே அமைக்கப் பெற்றவை.

இந்தோனேஷியா மொழியில் வழங்கும் சொற்கள் பல, அம்மக்கள் தமிழ்நாட்டுடன் கொண்ட வாணிகத் தொடர்பைக் குறிப்பன. எடுத்துக்காட்டாக, 'கப்பல் ' என்பதைக் 'கபல்' என்கின்றனர். அவர் வழங்கும் வேறு சில தமிழ்ச் சொற்கள், 'வாடை', 'சுக்கு', 'இஞ்சி', 'கஞ்சி', 'கொத்துமல்லி', 'குதிரை', 'கூடை', 'பெட்டி', 'பிட்டு'ப் போன்றவை. 'தாலி' என்ற சொல்லைக் 'கொடி' என்ற பொருளிலும் பயன்படுத்திக் கொள்கின்றனர். 'அம்மா', 'அக்கா', 'மாமா', 'தம்பி' போன்ற உறவுச் சொற்களும் அங்குப் பேச்சு வழக்கில் உள.

பாலித் தீவின் பண்பிற்கும் சமூக வாழ்விற்கும் இந்து சமயமே அடிப்படை. அங்கிருக்கும் ஒரிடத்திற்குக் 'கப்பல்' என்பது பெயர். அவ்விடத்தில் தமிழ் நாட்டுக் கப்பல் ஒன்று கரையில் மோதுண்டு உடைந்ததாகக் கூறுவர். பொதுவாகத் தென்கிழக்குத்திசை நாடுகளின் இசையும், நாட்டியமும், நிழற்கூத்தும் இந்தியக் கலைகளுடன் தொடர்புடையனவென்று கருதுவதற்கு இடம் உண்டு. ஆயினும், இத்துறையில் ஆய்வு நிகழ்த்துவதற்கு நம்மவர் தென்கிழக்குத் திசை மொழிகளை அறிவதுடன், நன்றாகப் பிரெஞ்சு மொழியையும், டச்சு மொழியையும் பயின்றிருத்தல் வேண்டும். சேடிசு, கிறோம் (Coedes, Krom) போன்றவர்கள் எழுதிய நூல்களிலிருந்து நம்மவரும் பல வரலாற்றுண்மைகளை அறிதல் கூடும்.

இதுகாறும் நம் அறிஞர் இவ்வாராய்ச்சிகளை நிகழ்த்துவதற்குத் தென் கீழ்த்திசை நாடுகளுக்குச் சென்றிலர். அவர்கள் செல்லாது இருக்கும் தறுவாயில் ஒரு சில தொடர்புக் குறிப்புக்களையே நாம் பொதுவாகக் கூறிக்கொண்டு வருதல் கூடும். மலேயாப் போன்ற இடங்களில் தமிழர் வழிபடுந் தெய்வங்களின் சிலைகளும், பண்டு தமிழ் பேசும் மக்கள் அமைத்த கோயில்களும் உள. ஆயினும், மலேயாவைக் கடந்து கம்போதியா, வியட்னாம் போன்ற இடங்களுக்குச் சென்றால், அங்கு நாம் காணும் தமிழரின் சின்னங்கள் இன்னும் பெருவியப்பைத் தருகின்றன.

வியட்னாமின் துரானில் இருக்கும் பழம் பொருட்சாலையில் உள்ள நந்திகளைப் போல் அழகு வாய்ந்த நந்திகளைத் தமிழ் நாட்டில் நான் கண்டிலேன். மேலும், வியட்னாமின் பல மாவட்டங்களில் சிவலிங்கம் அமைத்த கோயில்கள் பல உள்ளன. மரங்களும் செடிகளும் அக்கோயிற் சுவர்களின்மேல் இன்று வளர்ந்தும் படர்ந்தும் வருகின்றன. அந்நாட்டின் ஒரு பகுதி சம்பா என்றே வழங்கப் பெற்றது.



சம்பாவில் வாழ்ந்துவரும் சாம்பரின் (Chams) வரலாற்றைத் தமிழறிஞர்கள் படித்தல் வேண்டும். கம்போதியாவிலிருக்கும் அம்கோர்வாட், அம்கொர்தொம் எனும் பெருநகரும், கட்டடமும், கிமேர் (Khemrs) எனும் இனத்தவரால் பத்தாவது பதினோராவது நூற்றாண்டுகளில் சிறப்புற எழுப்பப் பெற்ற வான்வருடும் கட்டடங்கள். அங்குச் சுவர்கள்மீது செதுக்கப் பெற்றிருக்கும் மகா பாரதம், இராமாயணம் முதலிய வரலாற்றுச் செய்திகள், இவை யாவையும் இதுகாறும் தமிழ் அறிஞர் பார்வையிட்டனர் அல்லர். அங்குள்ள கட்டடங்கள் பல, சிலைகள் பல, யானை உருவங்கள் பல பல்லவருடைய கட்டடச் சிற்ப முறைகளைக் காட்டுவன. கிமேர் இனத்தாரின் அரசரின் பெயர்களும் வர்மன் என்னும் விகுதியைக் கொண்டவை. ''அம்கோர்'' என்னும் சொல்லும் ''நகர்'' என்னுந் திராவிடச் சொல்லின் திரிபாகும்.

கம்போதியாவின் அரண்மனையில் நடைபெற்று வந்த நாட்டியக் கலை பரத நாட்டியக் கலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது. தைலாந்தில் சிறப்பாகத் தமிழ்ப் பாக்களைத் தைமன்னரின் முடி சூட்டு விழாவில் பாடி வருகின்றனர் என்பதை இன்று தமிழருள் சிலரேனும் அறிவர். நான் பாங்கொக்கு மாநகருக்குச் சென்றிருந்த பொழுது இந்து சமய பிராமணர் எனப்படுபவர் இருக்கும் கோவில்களைப் பார்க்கச் சென்றேன். அங்கு அவர்களுடைய ஏடுகளிலிருந்து தம் மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடிவரும் செய்யுட்களை அவர்கள் பாடிய பொழுது தமிழ் என்று அறியாது அவர் பாடும் ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை'' என்னும் திருவெம்பாவைப் பாட்டைக் கேட்டுப் பெருவியப்பு எய்தினேன்!

திருப்பாவை, திருவெம்பாவைத் திருநாட்களைப் பண்டு மிகவும் சிறப்பாகக் கொண்டாடி வந்தார்கள் தைநாட்டு மக்கள். அக்கொண்டாட்டம் பொது மக்களின் கொண்டாட்டமாயும் அமைந்தது என்பதற்கு அங்குள்ள மாபெருங்கோயிலுக்கு அண்மையில் உள்ள உயர்ந்த ஊஞ்சல் நிலைகளே சான்றாவன. இன்றும் திருப்பாவை திருவெம்பாவைத் திருநாள்களை அப்பிராமணர்கள் கொண்டாடி வருகின்றார்கள். அங்குள்ள அவர்களது கோவில் அமைப்பும் வழிபாடும் தென்னிந்தியக் கோவில் அமைப்புக்களையும், வழிபாட்டு முறையினையும் தழுவி அமைந்ததாக அவர்களின் அரசகுரு எனக்குக் கூறினார்.

தை மொழியில் இருக்கும் இராமாயணம் வான்மீகியின் இராமாயணத்தைத் தழுவியது அன்றென்றும், பெரும்பாலும் கம்பரின் இராமாயணத்தையே தழுவி இருத்தல் கூடுமென்றும் பியானுமன் எனும் தை அறிஞர் எனக்குத் தெரிவித்தார். மேலும், தம் மொழியில் 'ஐ' விகுதிகளும் 'அன்' விகுதிகளும் கொண்ட சொற்கள் பலவென்றும், தம் இராமாயணத்தின் காவியச் செல்வரின் பெயர்கள் பெரும்பாலும், இராமன், சுக்கிரீவன் என்ற தமிழ்ப் பெயர்களைப் போலவே அமைந்திருக்கின்றனவென்றும் குறிப்பிட்டார்.

மேலும் தை நாட்டின் வெண்கலப் படிவங்கள் பல்லவர் சோழர் காலத்துத் தமிழ் நாட்டுப் படிவங்களைப் போன்றவையென்று தைநாட்டில் சிற்பம் கற்பிக்கும் இத்தாலிய சிற்பியார் ஒருவரும் எனக்குச் சொன்னார். அந்த அறிஞரே 'தங்கம்' என்னும் சொல் தமிழிற்குச் சீனத்திலிருந்து தை நாடு வழியாக வந்த ஒரு சொல் என்றும் கருதினர்.

'தமிழ்' என்ற சொல்லைத் 'தமின்' என்று ழகரத்தின் இடத்தில் 'ன' கர ஒலி கொடுத்துப் பயன்படுத்துகின்றார்கள் தை மக்கள். ஆனால் தை மொழியில் தமின் என்ற சொல் 'கொடுமையான மகன்' எனப் பொருள்படும். பல்லவர் சோழர் காலத்தில் செல்வாக்குப் படைத்த பல்லவ சோழ மன்னர்களின் அரண்மனை முறைகளையும் சடங்குகளையும் கடைப்பிடித்த தை மக்கள், பிற்காலத்தில் 'தமிழ்' என்னும் சொல்லுக்கு இத்தகைய பொருளைக் கொடுப்பதற்குக் காரணம் யாது? பிற்காலச் சோழரின் படைகள் ஈழம் முதலிய

**கம்போதியாவின் அரண்மனையில் நடைபெற்று வந்த நாட்டியக் கலை பரத நாட்டியக் கலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது தைலாந்தில் சிறப்பாகத் தமிழ்ப் பாக்களைத் தைமன்னரின் முடி சூட்டு விழாவில் பாடி வருகின்றனர்**

வெளி நாடுகளின் மீது படையெடுத்தது காரணமாக, அந்நாடுகளில் பெருந்துன்பம் நிகழ்ந்தது. அதனால், ஈழத்தில் வாழ்ந்த புத்த பிக்குகள் தங்கள் நாட்டைவிட்டு, புத்தமதக் கோட்பாடுகளைப் பேணி வரும் தை நாட்டின்கண் சென்று அடைக்கலம் புகுந்தார்கள். அங்ஙனம் சென்ற பௌத்தர்கள், தென்னாட்டுத் தமிழ் மன்னர்களால் தங்கள் நாட்டிற்கு ஏற்பட்ட அழிவினை அறிவித்தார்கள். அதனால், பண்டு உயர்சொல்லாய் வழங்கிய 'தமிழ்' எனும் சொல் இப்பொழுது இழிவுச் சொல்லாய் வழக்கில் திரிந்து வழங்குகின்றது. நான் இப்பொருள் மாற்றத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு, வானூர்தி நிலையத்தில் பணியாற்றும் பாமரன் ஒருவனை அணுகி, ''அப்பா, 'தமின்' என்ற சொல்லுக்குப் பொருள் யாது?'' என்று வினவினேன். அதற்கு அவன் சிறிதும் தயங்காது, "By Tamin I mean a black Indian who is cruel and hard," என்று விடையிறுத்தான்.

தமிழ்நாட்டிற்கு வடமேற்குத் திசையிலிருக்கும் நாடுகளிலும் தமிழ் ஆராய்ச்சிக்கு எல்லையற்ற இடமுண்டு. இன்று வரையிலும் நாம் அறிந்த பண்புள்ள பண்பற்ற திராவிட மொழிகள் ஏறக்குறைய இருபது என்று கூறுவர். மொகஞ்சதரோவை நான் பார்க்கப் போயிருந்த பொழுது அங்கே பிராகுவி மொழி பேசும் மாந்தர் சிலருடன் உரையாடினேன். பாகிஸ்தானத்தில் கிணறு தோண்டும் குலத்தினர் ஒரு சிலர், ''ஒட்டர்'' எனப் பெயரிடப்பெறுவர் என்றும், அன்னார் திராவிட மொழி போன்ற ஒரு மொழியைப் பேசி வருகின்றனர் என்றும் என்னிடம் கூறினர். நான் ''ஒட்டர்'' எனும் மக்களை நேரில் கண்டு அவர்களுடன் பேசுவதற்குரிய வாய்ப்பினைப் பெற்றிலேன். அண்மையில் மாஸ்கோ மாநகரில் ஆப்கானிஸ்தானிலிருந்து வந்த ஆங்கில அறிஞர் ஒருவருடன் உரையாடியபொழுது, அவர் ஆப்கானிஸ்தானத்தில் ஒரு வகுப்பினர் (ஏறக்குறைய 200 குடும்பங்கள்) திராவிடமொழி போன்ற மொழி ஒன்றினைப் பேசி வருகின்றனர் என்றும், இது காறும் அம்மொழியினை அறிஞர் எவரும் ஆராய்ந்திலர் என்றும் செப்பினர். எனவே, நம் அறிஞர்கள் இந்நாடுகளுக்குச் சென்று இம்மொழிகளைப் பேசும் மக்களைப் பற்றிய செய்திகளை ஆய்ந்து வருவார்களாயின் இன்னும் சில திராவிட மொழிகள் இயங்கி வருவதாக நாம் அறிய நேர்ந்தாலும் நேரலாம்.

பின்னிஷ் (Finnish) மொழி திராவிட மொழிகளுடன் தொடர்புடையது எனக் கால்டுவெல் முன் கூறியுள்ளதை மீண்டும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக அறிஞர் பரோ (Burrow) என்பவர் இக்காலத்திலும் வற்புறுத்தி வருகின்றார்.

மொழி இயலில் தமிழராய்ப் பிறந்த தமிழ் அறிஞர் ஈடுபடும் பொழுது பிற நாட்டுத் தமிழறிஞர் தமிழ் மொழியையும் பண்டைய இலக்கியங்களையும் நன்கு அறியாது ஆராயும் வழக்கின் சில வழுக்களை நீக்குதல் கூடும். மேல் நாட்டு அறிஞர் ஒருவரும் நானும் தொதவர் சிலரை உதகமண்டலத்தில் கண்டு சில பொருள்களுக்குத் தம் மொழியின் பெயரைக் கூறுமாறு கேட்டோம். அஃதாவது, பறவை ஒன்றினைச் சுட்டிக்காட்டி அதற்கு அவர் மொழியில் பெயர் யாது என்று கேட்டோம். பறவையைப் பார்த்துத் தொதவர் ''பிள்'' என்று கூறினார். மேல் நாட்டறிஞரோ, தமிழ்ச் சொல்லின் திரிபுதான் ''பிள்'' என்பதனை உணர்ந்திலர். எனவே, தமிழ் ஆய்வுகளைத் தமிழின் வெவ்வேறு கால இலக்கியங்களை நன்கு பயின்ற அறிஞர்கள் உயர்ந்த முறையில் நடத்தும் பொழுது ஏனையோர்க்கில்லாத வாய்ப்புக்களைப் பெறுகின்றார்கள்; வழி வகைகளையும் காண்கின்றார்கள். ஆயினும், அவர்களுக்குப் பன்மொழிப் புலமையும் இவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படையாகும், ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்,'' என்ற அடி உண்மை கூறுவது என்பதை அறிவது தமிழ்மொழி ஒன்றனையே அறிந்த புலவர்க்கு இயலாது.

பாரதியார் ஆங்கிலத்தையும், பிரெஞ்சு மொழியையும், இந்தியையும், வடமொழியையும், வங்க மொழியையும் அறிந்ததாலேதான் அவ்வாறு கூற உரிமையுடையவரானார். இன்றிருக்கும் புதுப்பேச்சுக் கருவிகளைக் கொண்டு பிற மொழிகளைப் பயில்வது பண்டினும் எளிது. இப்புது முறைகளைக் கொண்டே மேல் நாட்டறிஞர் இன்று பன்மொழிப் புலவர் ஆகின்றனர்.

பண்டைக் காலத்தில் கிரேக்க நாடு, ரோம் நாடு போன்ற மேல் நாடுகளுடன் தமிழ் மக்கள் கொண்ட வாணிகத் தொடர்பு மிகவும் சிறந்தது என்பதற்குச் சங்க இலக்கியங்களும் சிலப்பதிகாரமும் நல்ல உறுதி படைத்த ஆதாரங்களாய் அமைகின்றன. அரிசி, இஞ்சி வேர், கருவாய் போன்ற தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியில் உள்ளன. ஆயினும், Paleography. Paleontology போன்ற சொற்களில் வரும் 'பழைய' என்னும் பகுதியும், இக்காலக் கிரேக்க மொழியில் நீருக்கு, 'நேரோ' என்னும் சொல்லும், இன்னும் நாம் கிரேக்கம் போன்ற பண்டைய மொழிகளில் ஆய்வு செய்வதற்கு இடமுண்டு என்பதைக் காட்டுகின்றன. கிரிட்டுத் தீவின் பண்பாட்டில் காளை மாட்டின் வழிபாடும், ஏறு தழுவுதல் போன்ற விளையாட்டுக்களும் கி.மு. இரண்டாயிரத்திற்கு முன் நிலவிய மீனோஸ் காலத்தின் பண்பாட்டில் இடம்பெற்றுள்ளன. இன்றும் செட்டி நாட்டில் இடம்பெறும் விளையாட்டும் முல்லைக்கலி கூறும் ஏறு தழுவுதலும் தமிழர் கிரிட்டரின் பண்டைத் தொடர்பினைக் காட்டுகின்றது என்பது அறிஞர் சிலரது முடிவு.

தமிழ் நூல்கள் பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளிலே தான் அச்சேறின என்று பலர் நம்பி வருகின்றனர். ஆயினும், தமிழ் மொழிதான் இந்திய மொழியில் முதன்முதல் அச்சினைக் கண்ட மொழி. 1554ல் இலிஸ்பன் மாநகரில் இலத்தீன்



எழுத்துக்களைக்கொண்டு தமிழ்ச் செபங்களை ஒலி பெயர்த்த நூல் ஒன்றனை அச்சிட்டனர். அதில் ஒரு வரி தமிழ் ஒலி வடிவைக் காட்ட, மற்றொரு வரி போர்த்துக்கீசிய மொழியின் பொருளைக் குறிக்க, மூன்றாவது வரி தமிழ்ச்சொல்லிற்கு நேராகிய போர்த்துகீசியச் சொல்லைத் தருகின்றது. இவ்வாறு மும்மூன்று வரிகளாகவும் இரு நிறங்களிலும் அச்சிடப் பெற்ற அழகிய அந்நூல் ஐரோப்பிய அச்சுக் கலைக்கே அணியாய் விளங்குகின்றது. மேலும், 16ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் போர்த்துகீசிய மொழியில் எழுதப்பெற்ற தமிழ் இலக்கண நூல்களையும் இலிஸ்பன் நூற்கூடங்களிற் கண்டேன். வத்திக்கான் நூற்கூடத்தில் இருந்த கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றையும், பழைய நூல்கள் சிலவற்றையும் ஒரு முறை ஆராய்ந்த பொழுது, அங்குப் பதினேழாம் நூற்றாண்டில் அம்பலக் காட்டில் அச்சிடப் பெற்ற போர்த்துக்கீசு தமிழ்—தமிழ் போர்த்துகீசு அகர வரிசையைக் கண்டெடுத்தேன். 664 பக்கங்கள் கொண்டதும், பெரும்பாலும் புன்னைக் காயல் என்னுமிடத்தில் 1586ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்றதுமான கத்தோலிக்கத் திருத்தொண்டர் வரலாறு (Flos Sanctorum) என்னும் நூலினையும் கண்டெடுத்தேன். இன்னும் பல பயனுள்ள கையெழுத்துப் பிரதிகளையும், பண்டு அச்சிடப்பெற்ற தமிழ் நூல்களையும், ஜகர்த்தா, இலிஸ்பன், பாரிஸ், வத்திக்கான், கொப்பென் கெய்கன், இலண்டன் இன்னோரன்ன நகர்களிலுள்ள நூற்கூடங்களில் கண்டிருக்கின்றேன். எதிர்காலத்தில் இந்நகர்களுக்குச் செல்லும் தமிழறிஞர்கள் நம் வரலாற்றிற்குப் பயன்படும் இத்தகைய நூல்களையும் கையெழுத்துப் பிரதிகளையும்,

கடிதங்கள் முதலியவற்றையும் ஆய்தல் வேண்டும்.

மேலை நாட்டு அறிஞர் பலர் இன்றும் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கலிபோர்னியாவிலிருக்கும் ஏமெனோ என்பவர் கோத்தர் மொழியினை நன்கு கற்றவர். அவர் திராவிட மொழியியலில் ஈடுபட்டு வருகின்றார். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பரோ என்பவர் வட மொழிக்கும் தென் மொழிக்கும் இருக்கும் தொடர்பினையும் திராவிட மொழிகளின் ஒப்பியற் பான்மையையும் ஆராய்ந்து வருகின்றார். பாரிஸ் நகரில் மெல் என்பவரும், பீலியோசா என்பவரும் தமிழ் இலக்கியத்தையும் இலக்கணத் தையும் ஆய்ந்து எழுதி வருகின்றனர். ஜெர்மனியில் இருக்கும் லேமன் என்பவர், தாயுமானவர் பாடல்களை ஜெர்மன் மொழியில் பெயர்த்தவர்; தஞ்சை மாவட்டத்தின் சீர்காழியில் ஏழாண்டுகள் வாழ்ந்தவர்; இன்று கிழக்கு ஜெர்மனியின் பல்கலைக் கழகமொன்றில் தமிழ் கற்பித்து வருகின்றார். செக்கஸ்லோவாக்கியாவில் இருக்கும் சுவலேபில் என்பவரும் லெனின்கிராடில் இருக்கும் ருடின் என்பவரும் இளைஞர்; தமிழ்ப் பற்றுடையவர்; செந்தமிழைச் செம்மையாகப் பேசுகின்றவர், எழுதுகின்றவர். இலண்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பாடங்களை நடத்தும் மார் என்பவரும், ஆசர் என்பவரும், மாஸ்கோப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சி செய்யும் ஆந்திரேனோவ் என்பவரும், பியர்த்கோஸ்கீ என்பவரும் தமிழில் பெரிதும் ஈடுபாடு உள்ள மேனாட்டு இளைஞர். இவர்களுடைய தமிழ்ப் பற்றும், தமிழறிவும், இக்காலப் பன்மொழிப் புலமையும், இக்கால ஆராய்ச்சி முறைகளும் நம் இளைஞர்க்கும் இருக்குமாயின், தமிழ் ஆராய்ச்சி காணவிருக்கும் எதிர்கால வெற்றிகள் கணக்கற்றவையும் எல்லையற்றவையுமாம்.

தமிழ் மக்களும், தமிழ்ச் சின்னங்களும், தமிழ்ப் பண்பாட்டை நினைவூட்டும் பழக்க வழக்கங்களும் பாரெங்கும் பரவியிருக்கக் காணலாம். பிரெஞ்சு மொழியில் 1863இல் தமிழ் இலக்கண நூலொன்றை எழுதியவர் அத்லாந்திக்குப் பெருங்கடலில் மார்டினீக் பூர்போன் தீவுகளில் தமிழ் மக்கள் வாழ்வதாகவும், ஆதலால் அங்கு ஆட்சி செலுத்தும் பிரெஞ்சு மக்களுக்குத் தமிழ் இலக்கண நூல் பயன்படுவதாகவும் முகவுரையில் கூறியிருக்கின்றார். இவ்வண்ணம் இடையமெரிக்கா, ஆக்லாந்திக்குத் தீவுகள், தென்னாப்பிரிக்கா, மரீசியஸ் தீவு, மலேயா, பியூஜித் தீவுகள், வியட்நாம் ஆகிய எங்கும் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்தியத் தமிழ்மொழியையும் பயின்று வருகின்றார்கள். இந்தியத் தமிழ் நாடு தமிழகமெனச் சிறப்பாகக் கூறப்படுமெனின், ஈழ நாட்டிலும் தமிழகம் உண்டு; மலேயாவிலும் தமிழ் மக்கள் பெருந்தொகையாய் உள்ளார்கள். சென்னை, திருச்சி, புது டெல்லி, கொழும்பு, சிங்கப்பூர், குவலாலம்பூர், இலண்டன் மாநகர், மாஸ்கோ நகர் போன்ற நகர்களிலிருந்தெல்லாம் தமிழ் ஓசை ஒலி பரப்பக் கேட்டல் கூடும். தமிழ்ப் பேசும் படங்களைக் கீழ்த்திசைச் சைக்கோனி விருந்து மேற்றிசைக் கெய்ரோ வரையும் காட்டப் பார்த்திருக்கின்றேன். இத்தகைய தமிழ்ப் பரப்பின் பான்மையையும், செறிவையும், இயல்பையும், வகையையும் தமிழ் அறிஞர் வருங்காலத்தில் வரை அறுத்துக் கூறுமாறு தமிழ்ப் பகுதிகளைக் கொண்ட பல்கலைக் கழகங்கள் மேலான வாய்ப்புக்களை அளித்தருள்க!

*நன்றி :*
தமிழ்த்தூது
(கட்டுரைக் கொத்து)
*வெளியீடு :*
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை–113.

• • •

**பிரெஞ்சு மொழியில் 1863இல் தமிழ் இலக்கண நூலொன்றை எ ழுதியவர் அத்லாந்திக்குப் பெருங்கடலில் மார்டினீக் பூர்போன் தீவுகளில் தமிழ் மக்கள் வாழ்வதாகவும், ஆதலால் அங்கு ஆட்சி செலுத்தும் பிரெஞ்சு மக்களுக்குத் தமிழ் இலக்கண நூல் பயன்படுவதாகவும் முகவுரையில் கூறியிருக்கின்றார்**

# ஆசிரியர்கள் பணி மாறுதல் புதிய நெறிமுறை

*- முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அறிவிப்பு*

நாட்டு மக்கள் என் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நல்லாட்சி நடத்திச் செல்ல வேண்டும் என்பதில் நான் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறேன்.

எந்த வகையிலும் எவரும் குறை சொல்ல முடியாத ஒரு நல்ல ஆட்சியைத் தமிழக மக்களுக்கு அளிக்க வேண்டும் என்பதில் நான் மிகவும் உறுதி கொண்டு இருக்கின்றேன்.

நிர்வாகப் பணிகள் ஒளிவு மறைவு அற்ற வகையில் பகிரங்கமாக நடைபெற வேண்டும்; எந்தவிதமான குறைபாடுகளும் ஏற்படக் கூடாது; அப்படிக் குறைபாடுகள் ஏதேனும் சுட்டிக் காட்டப்பட்டால் அதை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதில் அமைச்சரவை சகாக்களுக்கும், அரசு அதிகாரி களுக்கும் கடுமையான உத்தரவு பிறப்பித்து உள்ளேன்.

அதன் அடிப்படையில் தான் கல்வித் துறையில் ஆசிரியர்கள் பணி இட மாறுதல்கள் குறித்து ஒரு தெளிவான உத்தரவை வழங்கி, பணி மாறுதல்களில் எந்தவிதக் குறைபாடுகளும் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளேன்.

பணி மாறுதல் தேவைப்படும் ஆசிரியர்கள் இனிமேல் மாறுதல் வாங்கித் தருவதாகக் கூறும் இடைத் தரகர்களை நம்பி ஏமாறத் தேவை இல்லை. நெறிமுறைகளுக்கு உட்பட்டு அவர்கள் பணி மாறுதல் இருந்தால் உடனடியாக நிறைவேற்றி வைக்கப்படும்.

ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை மற்றும் கல்லூரி ஆகிய அரசுக் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து வகை ஆசிரியர்களுக்கான பொது மாறுதல்களில் கீழ்க்கண்ட நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படும்.

1. ஒரு பணி இடத்திற்கு ஒருவருக்கு மேல் மாறுதல் கோரினால் கீழ்க்கண்டவாறு முன் உரிமை வழங்கப்படும்.




சென்னையில் 5.6.2001 அன்று நடைபெற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை மற்றும் அறிவியல் நகரம் இணைந்து நடத்திய 'உலக சுற்றுச் சூழல் தின விழாவில்' மாண்புமிகு செய்தி, விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தமிழ்நாடு அரசின் பசுமை விருதுகள் மற்றும் சுற்றுச்சூழல் விருதுகளை வழங்கினார்கள்.உடன் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. டி.ஜெயகுமார் அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளார்கள்.

அ. மாநில அரசு, மத்திய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் கணவன் மனைவி இருவரும் ஓரிடத்தில் பணிபுரிய வேண்டி மாறுதல் கோரல்.

ஆ. இராணுவத்தில் பணிபுரிவோரின் மனைவி

இ. 50 சதவிகிதத்திற்கு மேல் உடல் ஊனமுற்றவர் என்பதற்கான முறையான மருத்துவச் சான்று பெற்றுள்ள உடல் ஊனமுற்ற ஆசிரியர்கள் மற்றும் பார்வையற்ற ஆசிரியர்கள்.

ஈ. ஆசிரியைகள்

மேற்கண்ட முன்னுரிமையில் ஒன்றிற்கும் மேற்பட்டவர்கள் மாறுதல் கோரியிருப்பின் அவர்கள் தற்போது பணி இடத்தில் பணிபுரியும் காலத்தை அடிப்படையாகக் கொண்ட (Station Seniority) முன்னுரிமைப்படி மாறுதல் வழங்கப்படும்.

2. மனமொத்த மாறுதல்கள் ஏற்கப்படும்.

3. மலைப்பாங்கான இடங்களில் உள்ள பள்ளிகளுக்கு ஏற்கெனவே நடைமுறையில் உள்ள மலைச் சுழற்சி மாறுதல் முறை பின்பற்றப்படும்.

மேற்கண்ட நெறிமுறைகளின்படி மாறுதல்கள் வழங்குவதற்கு அனைத்துக் கல்வி நிர்வாக அலுவலங்களில் நிரப்பிடத் தகுதியான காலிப் பணி இடங்களின் பெயர்ப் பட்டியல்கள், மாறுதல் கோரியுள்ள ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் மாறுதல் நெறிமுறைகள் ஆகியவை தகவல் பலகையில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

மாறுதல் வழங்குவதற்கு மாறுதல் அளிக்கக் கூடிய அலுவலர்கள் ஒரு குறிப்பிட்ட நாள், இடம் ஆகியவற்றை அறிவித்து மாறுதல் கோரியுள்ள அனைத்து ஆசிரியர்களையும் வரவழைத்து அவர்கள் முன்னிலையிலேயே அவர்கள் விரும்பிய காலிப் பணி இடங்களுக்கு ஒற்றைச் சாளர முறைப்படி அப்போதே மாறுதல் ஆணைகள் அவர்கள் கையில் வழங்கப்படும்.

இந்த நெறிமுறைகள் பின்பற்றப்படாமலோ, இதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தாலோ முன்னுரிமை அடிப்படையில் மாறுதல் செய்யப்படவில்லை என்று கருதினாலோ உடனடியாக எனது கவனத்துக்குக் கொண்டு வரும்படி மாறுதல் கோரும் ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வருங்கால சந்ததிகளுக்கு நல்வாழ்வு நல்க கல்வி அளிக்கும் ஆசிரியப் பெருமக்களிடம் காசு பணம் வாங்கி மாறுதல் அளிக்கும் அவல நிலைமை இனி தமிழ் நாட்டில் அறவே இல்லை என்ற நிலையை உருவாக்க முயலும் எனது முயற்சிக்கு அரசு அலுவலர்களும், ஆசிரியப் பெருமக்களும் முழு ஒத்துழைப்பு நல்கிடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ★

---

**உலக வரலாற்றில் ஆயுத பலத்தை மிக அதிகமாகப் பயன்படுத்தியவன் நெப்போலியன். அவனே ஆயுத பலத்தைவிட ஆன்மிக பலமே ஆற்றல் மிகுந்தது என்று கூறியிருப்பது அனுபவ பூர்வமான உண்மையாகும்.**

எதையும் நெப்போலியனால் பொறுத்துக் கொள்ள முடிந்தது. ஆனால், கெஞ்சிக் கேட்பதும், சலுகை கேட்பதும் அவன் இயல்புக்குப் பொருந்தி வரவில்லை.

**பிறர்படும் துன்பத்தைக் கண்டு இரங்கி, அத்துன்பத்தைப் போக்கும் வகையில், தாமும் உடன் துன்பப்படுவதை இன்பமாக ஏற்று, பிறர் நலத்துக்காக வாழ்கிறார்கள் மகாத்மாக்கள்.**

# 2001-2002-ஆம் ஆண்டுக்கான ஆசிரியர்கள் பொது மாறுதல்

ஆசிரியர் சமுதாயம் சம்பந்தப்பட்ட வெளிப்படையான தெளிவான பணியிடம் மாற்றம் வழங்கப்பட்டு விதிமுறைகளின் படி தொடக்கக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஊராட்சி ஒன்றிய, நகராட்சி தொடக்க / நடுநிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு 16.6.2001 அன்று ஒற்றைச் சாளர முறையில் நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியருக்கு 237 மாறுதல்களும், தமிழ் ஆசிரியர்களுக்கு 11 மாறுதல்களும், பட்டதாரி ஆசிரியருக்கு 1 மாறுதலும், தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு 2,894 மாறுதல்களும் மொத்தம் 3,143 மாறுதல்களும் எந்தவிதமான புகார்களுக்கு இடமின்றி வழங்கப்பட்டது.

இதைப்போலவே 17.6.2001 அன்று பதவி உயர்வு மூலம் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக 336 ஆசிரியர்களுக்கும், துவக்கப்பள்ளி தமிழ் ஆசிரியர்களாக 82 ஆசிரியர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களாக 34 ஆசிரியர்களுக்கும், தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர்களாக 2,666 ஆசிரியர்களுக்கும் பதவி உயர்வு மூலம் மொத்தம் 3,118 பதவி உயர்வுகள் வழங்கப்பட்டது. இதை போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் 23.6.2001 அன்று ஒன்றிய மாறுதல்களும் 24.6.2001 அன்று மாவட்டத்திற்குள் ஒன்றியம் விட்டு ஒன்றியத்திற்குள் மாறுதல் கோரும் கோரிக்கைகளும் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரால் பரிசீலிக்கப்பட்டு ஒற்றைச் சாளரமுறையில், நடைபெறும் இடம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, ஆசிரியர்கள் முன்னிலையில் ஒளிவு மறைவின்றி, மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டன. ●

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இந்தப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் பி.ஆர். சுந்தரம் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு என் பதிலைத் தொடங்குகிறேன்.

முதலில், அண்மையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியை அளித்து இந்த அவையில் முதலமைச்சராக அமர்த்தி, இந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கும் பொன்னான வாய்ப்பினை எனக்கு நல்கிய தமிழக மக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறேன். இந்தத் தேர்தல் வெற்றிக்காக கடுமையாக உழைத்த கழக உடன்பிறப்புகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடன் இணைந்து உழைத்த கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடைபெற்று முடிந்த தேர்தல் பல வகையில் வரலாறு படைத்துள்ளது. இம்மாநில வரலாற்றில் இதற்கு ஈடு இணையே இல்லை என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. இந்த விவாதத்தில் பங்கேற்ற எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசுகின்றபோது, இந்த வரிகளையே சுட்டிக்காட்டி, இந்தத் தேர்தல் வெற்றி எந்தவகையிலும் வரலாற்று சிறப்புடையது அல்ல என்று கூறினார்கள். எல்லோருக்கும் தெரிந்த உண்மை இவர்களுக்கு மட்டும் ஏன் தெரியவில்லை? ஏன் புரியவில்லை? காரணம், இதுதான். உண்மையாக தூங்குபவர்களை எழுப்பலாம். ஆனால், தூங்குவது போல் நடிப்பவர்களை எப்படி எழுப்ப முடியும்? அண்மையில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலைப் போல் இதற்கு முன்பு தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகிலேயே எங்கேயும் எப்போதும் தேர்தல் நடைபெற்றது இல்லை. களத்தில் இரு அணிகள் மோதுகின்றபோது, ஒரு அணியின் தலைவரை நிராயுதபாணியாக்கி விட்டது மட்டுமின்றி, கைகளையும் கட்டிப் போட்டுவிட்டு, எதிர் அணியைச் சார்ந்தவர்கள் அவரைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு, எல்லாவிதமான, பயங்கரமான ஆயுதங்களையும் கொண்டு, அவரைத் தாக்கியபோதெல்லாம், அத்தகைய கடுமையான சூழ்நிலையிலும் போராடி, எதிரிகளை வென்று, எதிரிகளை நிராயுதபாணியாக்கி யார் அழிந்து போவார் என்று எதிரிகள் எண்ணினார்களோ அவரை

# தமிழ்நாட்டில் ஏழ்மை, வறுமை, இல்லாமை அறவே இல்லை என்ற உன்னத நிலையை அடைய இந்த அரசு பாடுபடும்!

- முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா**

இராஜசபையில் அரியணையில் அமர்த்தி, அழிக்க நினைத்த எதிரிகளை அவரிடம் எங்களுக்குப் பாதுகாப்புத் தாருங்கள் என்று கேட்க வேண்டிய நிலைமையை உருவாக்கித் தந்த எனதருமைத் தமிழக மக்களுக்கு மீண்டும் ஒருமுறை என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பேசுகின்றபோது அடிக்கடி ஜனநாயக நெறிமுறைகளைப் பற்றியும், அவை மரபுகளைப் பற்றியும் பேசினார்கள். ஒரு கட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், எதிர்க் கட்சியே இல்லாமல் செய்ய வேண்டும் என்று நாங்கள் திட்டமிட்டுச் செயல்படுவதாகக் குற்றம் சாட்டினார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் வழித்தோன்றல்களாகவும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் பாடம் பயின்றவர்களாகவும் இருக்கின்ற நாங்கள் ஒருபோதும் அப்படிச் செயல்படவும் மாட்டோம், கருதவும் மாட்டோம். ஆனால், கடந்த ஐந்தாண்டு காலம் ஆட்சி புரிந்த தி.மு.க.வினர்தான் தமிழகத்தில் எதிர்க்கட்சியே இருக்கக் கூடாது என்று கருதி அதற்காகவே திட்டமிட்டுச் செயல்பட்டார்கள். கடந்த

தமிழ்நாடு
சட்டப் பேரவையில்
**மேதகு ஆளுநர்** உரை மீதான
விவாதங்களுக்குப்
பதிலளித்து
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
1-6-2001 அன்று
ஆற்றிய உரை.

ஐந்தாண்டுகளில் ஆட்சியாளர்கள், ஆட்சி அதிகாரத்தின் முழு பலத்தையும் கட்டவிழ்த்துவிட்டு, எல்லாவிதமான பயங்கரமான தாக்குதல்களையும் தொடுத்து, பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் அவதூறுப் பிரச்சாரம் நடத்தி, அடுக்கடுக்கான பொய் வழக்குகளை ஜோடித்து, சுமத்தி, சிறையில் தள்ளி, அவமானப்படுத்தி, அசிங்கப்படுத்தி, கொச்சைப்படுத்தி, கேவலப்படுத்தி, ஆட்சி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, கழகத்தை நிலைகுலைய வைக்க என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையும் செய்து, கழகத்திற்குள் துரோகிகளை வளர்த்து, பின்னர் அவர்களை வெளியே இழுத்து, அந்தத் துரோகிகளைவிட்டுக் கழகத்தைப் பலவீனப்படுத்த முயன்று, வங்கிக் கணக்குகளை முடக்கி, உதவியாக உறுதுணையாக இருந்தவர்களையெல்லாம் சிறையில் விடுவார், இதிலிருந்து மீண்டு அவர் வரவே மாட்டார் மீண்டு வரவே முடியாது என்றெல்லாம் எக்காளமிட்டு, கைக்கொட்டிச் சிரித்து, அதிகார மமதையோடு, ஆணவத்தோடு இவர் ஒழிந்தார், இனி எதிர்ப்பே இல்லை, வாரிசுக்கு மணிமுடி சூட்ட இனி எந்தத் தடையுமில்லை என்று மனக்கோட்டை கட்டி, மனப்பால் குடித்து மகிழ்ந்தவர்கள் இன்று இருட்டறையில் செய்வதறியாது, முக்காடு போட்டுக்கொண்டு, மூலையில் உட்கார வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றால் அதுதான் மக்கள் சக்தியின் மகத்துவம் ஆகும். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதையும், எந்தத் தீர்ப்பையும் வெல்லும் தீர்ப்பு மக்கள் தீர்ப்புதான் என்பதையும் இந்தத் தேர்தலில் தமிழக மக்கள் உலகிற்கே உணர்த்திவிட்டார்கள்.

சில எதிர்க்கட்சியினர் தேர்தலில் நிற்க முடியாத நான் ஏதோ கொல்லைப்புற வழியாக வந்து முதலமைச்சர்



தள்ளி, என்னைத் தனிமைப்படுத்தி, மக்கள் பணி, கழகப் பணி ஆகியவற்றில் என்னைக் கவனம் செலுத்தவிடாமல் நித்தம், நித்தம், தினம் தினம், பொய் வழக்குகளைத் தொடுத்து, புதிய புதிய சிக்கல்களைத் தினந்தோறும் உருவாக்கி, கடைசியாக் தேர்தலிலேயும் என்னை நிற்க விடாமல் செய்து இதுவரை யாருமே சந்தித்திராத, இந்தச் சோதனைக் கடலில் இவர் மூழ்கி நாற்காலியில் அமர்ந்துவிட்டதாகக் கூறினார்கள். நான் கொல்லைப்புற வழியாக வரவில்லை. மக்களின் அமோக ஆதரவோடு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, ஆளுநர் அவர்கள் எனக்குப் பதவிப் பிரமாணம் செய்துவைத்து, ஊர் அறிய, உலகறிய வந்து இந்த முதலமைச்சர் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறேன். ஆனால், இப்படியெல்லாம் என்னைக் கொச்சைப்

**அண்மையில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலைப் போல் இதற்கு முன்பு தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகிலேயே எங்கேயும் எப்போதும் தேர்தல் நடைபெற்றது இல்லை.**

படுத்திப் பேசத் தூண்டுகிற தி.மு.க. தலைவர் கருணாநிதிதான் இந்த அவைக்கு வர வெட்கப்பட்டு, பயந்து கொல்லைப்புற வழியாக யாருக்கும் தெரியாமல், இரகசியமாக பேரவைத் தலைவர் அறைக்கு வந்து, சட்டமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு, வந்த சுவடே தெரியாமல் ஓசைப்படாமல் போய்விட்டார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற புதிய உறுப்பினர்கள் வருகின்ற நேர்வழி இந்த வழி. இந்த வழியில் வரமுடியாதவர்கள், வர வெட்கப்படுகிறவர்கள் தான் வேறு வழியில் வருவார்கள். அதைத்தான் செய்திருக்கிறார்கள். நான் சொன்னதைத்தான் வேறுவிதமாக மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு வீராசாமி அவர்களும் சொல்லியிருக்கிறார்.

இந்த ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில், இந்த ஆண்டு மொத்தம் 51 மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மொத்தம் 16 மணி நேரம், 24 நிமிடம் பேசியிருக்கிறார்கள். ஆனால், இதே சட்டமன்றத்தில் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் மொத்தம் 58 உறுப்பினர்கள் பேசினார்கள். அவர்கள் 17 மணி நேரம் 33 நிமிடங்கள் பேசினார்கள்.

இந்த ஆண்டு நடைபெற்ற விவாதத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் 12 பேர் பேசி இருக்கிறார்கள். அந்த 12 பேரும் பேசிய நேரம் 2 மணி நேரம் 47 நிமிடங்கள் ஆகும். ஆனால், 1996–ல் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் 21 பேர் பேசினார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் 5 மணி நேரம் 12 நிமிடங்கள் ஆகும். 2001, இந்த கூட்டத் தொடரில் மற்ற கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் 39 பேர் பேசி இருக்கிறார்கள். அவர்கள் பேசிய நேரம் 13 மணி நேரம் 37 நிமிடங்கள் ஆகும். ஆனால், 1996–ல் ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது மற்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 37 பேர்தான் பேசினார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட நேரமோ 12 மணி 21 நிமிடங்கள் ஆகும். ஆகவே, எங்களைப் பொறுத்தவரை ஜனநாயக மரபுகளில் நம்பிக்கை உள்ளவர்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தான் இந்தப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணியில் உள்ள அதிகாரிகள் மனச்சோர்வு அடைந்து இருக்கிறார்கள்; உற்சாகம் இழந்திருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் மீண்டும் உற்சாகம் ஊட்ட வேண்டும்; அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று கூறப்பட்டுள்ளது. இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி மற்றும் இம்மாநிலத்தில் பிற பணிகளைச் சேர்ந்த பணியாளர்களின் மன உறுதியையும் பெருமையையும் மீட்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. 1996–ல் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் முதன்முதலாகப் பதவி ஏற்றுக் கொண்டபோது, வந்தவுடனேயே காவல் துறையைப்பற்றித் தெரிவித்த கருத்து என்னவென்றால், காவல்துறையின் ஈரல் 75 சதவீதம் கெட்டுவிட்டது என்பதாகும். எடுத்த எடுப்பிலேயே உள்துறை இலாகாவுக்குப் பொறுப்பேற்றிருக்கிற முதலமைச்சர், காவல்துறைக்கே பொறுப்பேற்றிருக்கிற முதலமைச்சர், காவல் துறையைப் பற்றி இப்படி ஒரு கருத்தைத் தெரிவித்தால் இப்படி ஒரு damaging statement- ஐ தெரிவித்தால், அவர்களுக்கு எப்படிப் பணியில் உற்சாகம் இருக்கும்? அப்போது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் பற்றி முன்னாள் முதலமைச்சர் ஒரு கருத்து சொன்னார். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் பொறுத்தவரையில், அவர்களைப் பூப் போல நடத்துவேன் என்றார். ஆனால், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் பூப் போல நடத்தவில்லை; ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அவமானப் படுத்தினார்; தற்காலிகப் பணி நீக்கம் செய்தார்; கைது செய்தார்; சிறையில் அடைத்தார்; பூக்களைக் கசக்கினார்; பூக்களைக் காலில் போட்டு மிதித்தார். இப்போது அந்தப் பூக்களுக்கு மறுமலர்ச்சி அளிக்க வேண்டிய மாபெரும்

பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது. அதை நிச்சயமாகச் செய்வோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டம்-ஒழுங்கு கடந்த 5 ஆண்டு காலத்தில் சீர்குலைந்துவிட்டது; அடியோடு சீர்குலைந்துவிட்டது. பிரிவினைவாத, தீவிரவாத சக்திகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. சட்டம்-ஒழுங்கை மீண்டும் நிலைநாட்ட வேண்டிய மாபெரும் பொறுப்பும், இந்தத் தீவிரவாத பிரிவினைவாத சக்திகளை அடக்க வேண்டிய, ஒடுக்க வேண்டிய, விரட்ட வேண்டிய மாபெரும் பொறுப்பும் எங்களுக்கு உள்ளது. T.N.L.A., T.N.R.T. போன்ற தீவிரவாத, பிரிவினைவாத அமைப்புகளைத் தடைசெய்ய மத்திய அரசை வற்புறுத்துவோம். அண்மையில், இன்னும் சில நாட்களில் நான் பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களைச் சந்திக்க உள்ளேன். அப்போது T.N.L.A., T.N.R.T. ஆகிய தீவிரவாத, பிரிவினைவாத அமைப்புகளை உடனடியாகத் தடைசெய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்துவேன்.

சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதில் கடந்த தி.மு.க. அரசு கண்ணாமூச்சு விளையாட்டு விளையாடியதைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் அளவிற்கு வளர்ந்துவிட்ட சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்கப் புதிதாகப் பொறுப்பு ஏற்று இருக்கும் இந்த அரசு ஒரு திட்டவட்டமான, தெளிவான முடிவு எடுத்துள்ளது. வீரப்பனைப் பிடிக்கத் தற்போது இயங்கும் சிறப்பு அதிரடிப் படையை மாற்றியமைக்க தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. முன்னாள் D.G.P. திரு. வால்டர் தேவாரம் சிறப்பு அதிரடிப் படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளார். திரு. தேவாரம் இப்படையின் முதன்மைத் தலைவராகப் பணியாற்றுவார். அவருடைய மேற்பார்வையின்கீழ் காவல்துறை தலைவர் - Inspector-General விஜயகுமார் பணியாற்றுவார்.

இதற்காக மத்திய அரசின் எல்லைப் பாதுகாப்புப் படையில், அதாவது Border Security Force-ல் பணிபுரியும் ஐ.ஜி. திரு. விஜயகுமாரை மீண்டும் தமிழ்நாட்டிற்கு வரவழைக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் சுயவிருப்ப அடிப்படையில் பணியாற்றும் துணைக் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் இந்தப் படையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். இந்தச் சிறப்பு அதிரடிப் படைக்குத் தேவைப்படும் வாகனங்கள், தொலைத் தொடர்பு வசதிகள் மற்றும் நவீன சாதனங்கள் வழங்கப்படும். இந்த சிறப்பு அதிரடிப்படை நன்கு செயல்பட்டு வீரப்பனை உயிரோடு பிடிக்கும் அல்லது வீரப்பனை இந்த அரசிடம் சரணடையச் செய்யும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் காவல் துறையை நவீனமயமாக்கி, தலைசிறந்த அமைப்பாக மாற்றவும், என் தலைமையில் இருந்த முந்தைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதை நாடறியும். 1996 முதல் ஆட்சியில் இருந்த திரு. கருணாநிதி அவர்கள், காவல் துறையின் ஈரல் கெட்டுவிட்டது என்றும், பின்னர் சீரடைந்து விட்டது என்றும் வாய்ஜாலம் பேசினாரே தவிர, ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்போது புதிதாக என் தலைமையில் பொறுப்பேற்றுள்ள இந்த அரசு, காவல் துறையை நவீனப்படுத்த எல்லாவித நடவடிக்கை களையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே அதிகமாகப் பேசப்பட்ட கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைப் பற்றி சில கருத்துக்களை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் பதவியேற்ற சில நாட்களிலேயே, முக்கிய நாளிதழ்களில் சென்னைக்கு வந்து கொண்டிருந்த கிருஷ்ணா நீர் நிறுத்தப்பட்டது என்ற செய்தியைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். இதில் உண்மை என்ன வென்றால், ஒருபோதும் கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரவேயில்லையென்பதுதான் உண்மை. அதற்குப் பதிலாக, வறண்டு போன பெண்ணாற்றிலிருந்து கண்டலேறு நீர்த் தேக்கத்தில் சேமிக்கப்பட்டு, அங்கிருந்து வந்த தண்ணீர் தான் நிறுத்தப்பட்டது. இதைப்பற்றி நான் ஏற்கெனவே விளக்கம் கூறிய போது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஏதோ தண்ணீர் வந்தது என்பதை ஒப்புக் கொள்கிறீர்கள் அல்லவா என்று கேட்டார். என்றைக்கோ ஒரு நாள் சிறிது சிறிதாக தண்ணீர் வந்தால் சென்னை நகர மக்களுக்கு என்ன பயன்? கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் என்பது தினந்தோறும் குறிப்பிட்ட அளவு நீரை சென்னை மக்களுக்கு வழங்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட திட்டமாகும். ஆகவே அந்த நீர் சென்னைக்கு வந்து சேராமல், வராமலேயே கண்டலேறுவில் தேங்கிக் கிடந்த மழை நீரை, எப்போதாவது ஆந்திர மாநில முதலமைச்சரிடம் கேட்டு சிறிது சிறிதாகத் திறந்து விடப்பட்டு என்றைக்கோ ஒரு நாள் சொட்டு சொட்டாக தண்ணீர் வந்தால், இந்த மாநகர மக்களுக்கு என்ன பயன்? முந்தைய ஆட்சியாளர்கள், குறுகிய அரசியல் நோக்கத்துடன் சென்னை மாநகர மக்கள் அனைவருக்கும் கிருஷ்ணா நீர் சென்னைக்கு வந்து விட்டதாகத் தவறாகக் கூறியுள்ளனர். இது குறித்து நான் ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன்.

1983ஆம் ஆண்டு சென்னை மாநகரின் நீண்ட கால குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்துடன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் திரு.என்.டி.ராமராவ் அவர்களால் அன்றைய தினம் தெலுங்கு கங்கைத் திட்டம் என்ற கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் வகுக்கப்பட்டது. இரண்டு மாநில முதலமைச்சர்களும் 18-4-1983 அன்று இதற்காக ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இந்தத் திட்டத்தை நான்கு கட்டங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது.

இந்தத் திட்டத்தில் மொத்தம் ஸ்ரீசைலம் முதல் பூண்டி வரை, 379 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கால்வாய் வெட்டப்பட வேண்டும். திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாட்டின் பங்குத் தொகையாக ஆந்திர அரசுக்கு, கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக, பல்வேறு கட்டங்களில் செலுத்த வேண்டிய தொகை 760 கோடி ரூபாய் என்று அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. திட்டப்படி, நான்கு கட்டங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளில் கடைசி மூன்று கட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆந்திர அரசு, போத்திரெட்டிபடு என்ற இடத்தில் ஒரு நீர் மின் சக்தி நிலையத்தை நிறுவி வருவதால், முதற்கட்டப் பணிகள் முடிவு பெறவில்லை. மேலும் பனக்கசாரலா மதகு, வேலுகோடு நீர்த் தேக்கம், அழகனேறு தடுப்பு அணை ஆகிய பகுதிகளில் பெரும் பாலான கட்டுமானப் பணிகள் நிலுவையில் உள்ளன.

மேலும், இப்பகுதிகளில் பிரதான கால்வாயின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்ட போதிலும், இணைப்புக் கால்வாய்கள் இன்னும் கட்டப்படவில்லை. இதைத்தான் இந்த அவை கவனிக்க வேண்டும். இப்பகுதிகளில் பிரதான கால்வாயில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டபோதிலும் இணைப்புக் கால்வாய்கள் இன்னும் கட்டப்படவே இல்லை.

அதேபோன்று, சென்னமுக்கப்பள்ளி கிராமம் மற்றும் கொண்டபேடா கிராமம் ஆகிய பகுதிகளில் வளமான நிலங்கள் இருப்பதால் 35 கி.மீ. நீளத்திற்கு நில ஆர்ஜிதப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் கட்டுமானப் பணிகள் எதுவும் நடைபெறாமல் உள்ளன. இதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் கவனிக்க வேண்டும். 35 கி.மீ. தூரத்திற்கு கால்வாயை வெட்டுவதற்கு இன்னும் நிலமே ஆர்ஜிதம் செய்யவில்லை. இந்த லட்சணத்தில் கிருஷ்ணா நதிநீர் வந்துவிட்டது என்று சொல்கிறார்கள். அதிக இழப்பீட்டுத் தொகை கோரி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால், நில ஆர்ஜிதப் பணிகள் மிகவும் மந்தமாக உள்ளன. எனவே, இந்தத் திட்டப் பணியை உடனடியாக முடிக்கப் போதிய வாய்ப்புகள் இல்லை. இந்தச் சூழ்நிலையில் ஆந்திர அரசும், இது தொடர்புடைய மற்ற பணிகளை முடிப்பதற்கு எந்தவித அக்கறையும் காட்டவில்லை.

**மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதையும், எந்தத் தீர்ப்பையும் வெல்லும் தீர்ப்பு மக்கள் தீர்ப்புதான் என்பதையும் இந்தத் தேர்தலில் தமிழக மக்கள் உலகிற்கே உணர்த்திவிட்டார்கள்.**

நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டில், 1983 ஆம் ஆண்டிலிருந்து 1989 ஆம் ஆண்டு வரை அ.இ.அ.தி.மு.க. அரசு இந்தத் திட்டத்திற்கு 47 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. அதற்குப் பின் வந்த தி.மு.க. அரசு 1989 முதல் 1991 வரை தன்னுடைய 2 ஆண்டு ஆட்சிக் காலத்தில் 85 கோடி ரூபாய் கொடுத்தது. அதற்குப் பின் பொறுப்பேற்ற என்னுடைய தலைமையிலான ஆட்சியில் 1991 முதல் 1996 வரை இத்திட்டத்தை முடிப்பதற்காக 320 கோடி ரூபாய் வரை வழங்கப்பட்டது. ஆனால், 1996 ஆம் ஆண்டு பதவியேற்ற தி.மு.க. அரசு கடந்த 5 ஆண்டு காலத்தில் 60 கோடி ரூபாய் மட்டுமே கொடுத்துள்ளது. இத்திட்டத்திற்காக செலுத்த வேண்டிய கடைசித் தவணையான 69 கோடி ரூபாயை முன் குறித்த காலத்தில் செலுத்தியிருந்தால் ஆந்திர அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் காலதாமதம் செய்வதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லாமல் போயிருக்கும். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட இத்தகைய காலதாமதத்தினால் திட்ட மதிப்பீடு பல மடங்கு உயர்ந்துள்ளது. தொடக்கத்தில் 760 கோடி ரூபாய் மதிப்பீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டமானது தற்போது 2,545 கோடி ரூபாயாக மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கடந்த 5 ஆண்டு காலமாக முந்தைய தி.மு.க. அரசு இந்த முக்கியமான திட்டத்தைக்கூட சென்னை மக்களுக்காகச் செயல்படுத்தாமல் மெத்தனமாக இருந்துள்ளது.

இதுபற்றி இந்த விவாதம் நடைபெறுகின்றபோது பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்பு அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது வேகம் காட்டவில்லை என்றார். இப்போது நான் தெரிவித்த விவரங்களிலிருந்து யார் வேகம் காட்டினார்கள், யார் வேகம் காட்டவில்லை என்று தெளிவாகியிருக்கும் என்று நான் நம்புகிறேன்.

அதுமட்டுமின்றி, முந்தைய தி.மு.க. அரசு இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணராமல் அடுக்கடுக்காக, உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சொல்லி வந்துள்ளது. 1996 ஆம் ஆண்டு

மே 24 அன்று, அரசின் கொள்கைக் குறிப்பான ஆளுநர் உரையில் கிருஷ்ணா நீர் 1996ஆம் ஆண்டு இறுதிக்குள் சென்னைக்கு வந்து சேரும் என்று உறுதி அளிக்கப்பட்டது. மேலும், 1996ஆம் ஆண்டு செப்டம்பர் 29ஆம் தேதி சென்னை இராஜாஜி அரங்கில் ஒரு விழா நடத்தப்பட்டு, அங்கு ஒரு வெள்ளிக் குடத்தில் கிருஷ்ணா நீர் கொண்டு வரப்பட்டு, கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வந்ததாகத் தம்பட்டம் அடிக்கப்பட்டது. அதிக விளம்பரத்துடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சி, சென்னை மாநகர மேயர் தேர்தலின்போது, முந்தைய ஆட்சியாளர்களுக்கு மிகவும் உதவி புரிந்தது. ஆனால், கிருஷ்ணா நதி நீர் மட்டும் சென்னைக்கு வரவேயில்லை. பின்னர், தமிழ்நாடு சட்டசபையில் கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனை உறுதி செய்யும் வகையில் அப்போதைய உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.கோ.சி. மணி அவர்கள், அரசு சார்பில் தயாரிக்கப்பட்ட ஒரு வண்ணமிகு புத்தகமாக வெளியிட்டார். ஆனால், இன்று வரை கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரவேயில்லை என்பதுதான் உண்மை.

மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் நீண்ட நேரம் பல விளக்கங்களை இங்கே அளித்தார். அதற்கெல்லாம் குறுக்கீடுகள் இல்லாமல் என்னையும் பதில் சொல்ல இங்கே அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். முதலில் அவர் கேட்ட கேள்வி, நீங்கள் இப்போது ஆட்சிக்கு வந்து கோப்புகளைப் பார்த்து இந்தத் தகவல்களைச் சொல்கிறீர்களா, அல்லது ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்களா, ஏற்கெனவே சொல்லியிருந்தால் பரவாயில்லை என்கிறார்.

மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் தின நாளேடுகளை, பத்திரிகைகளைப் படிக்கிறாரோ என்னவோ தெரியவில்லை. கடந்த பல ஆண்டுகளாக நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது கிருஷ்ணா நதிநீர் வரவில்லை. தி.மு.க. அரசு மோசடி செய்துவிட்டது, மக்களை ஏமாற்றி விட்டது என்று தான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். இப்போதும் சொல்கிறேன். கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் என்பது நாள்தோறும் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட அளவு நீர் சென்னையில் பெறப்பட வேண்டும். அந்த நீர் இன்றுவரை வரவில்லை.

கிலோ மீட்டரைப் பற்றி அவர் இங்கே ஒரு மறுப்பைத் தெரிவித்தார். கோப்புகளைப் பார்த்துவிட்டு இந்தத் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை வரும்போது முழு விவரங்களை இந்த அவையில் தெரிவிக்கிறோம். ஆனால் நான் தெரிவித்ததில் எந்த மாற்றமும் இல்லை. மெயின் கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறதே தவிர இணைப்புக் கால்வாய்கள் இன்னும் வெட்டப்படவில்லை, கட்டப்படவில்லை என்பது உண்மை. குறிப்பிட்ட நீளத்திற்கு நான் 35 கிலோ மீட்டர் என்றேன், அவர் 14 கிலோ மீட்டர் என்றார். ஆனால் 14 கிலோ மீட்டர் வரை கால்வாய் வெட்டப்படவில்லை என்று அவரே ஒப்புக் கொள்கிறார். கால்வாயே வெட்டப்படாத போது தண்ணீர் எப்படி வரும் ? கிருஷ்ணா நதி நீர் எப்படி வரும் ? மேலும் அவர் ஒன்றைச் சொன்னார். 1992–ல் நான் முதலமைச்சராக இருந்தபோது ஒரு அறிக்கையை வெளியிட்டேன். 1994–ல் ஒரு அறிவிப்பை வெளியிட்டேன். 1992–ல் ஹைதராபாத்தில் பேட்டி அளித்தபோது 1994–ல் கிருஷ்ணா நதிநீர் கிடைத்துவிடும் என்று நம்புகிறோம், பின்னர் 1995–ல் கிடைத்துவிடும் என்று நம்புகிறோம் என்று நான் சொன்னதாகச் சொல்கிறார். வரும், நம்புகிறோம் என்றுதான் சொன்னேனே தவிர, வந்துவிட்டது என்று இவர்களைப் போல நான் சாதிக்கவில்லை. மக்களை ஏமாற்றவில்லை. 1992–ல் நான் ஆந்திரத்திற்குச் சென்றபோது, ஹைதராபாத் சென்றபோது ஆந்திர முதலமைச்சரோடு கலந்து பேசி அங்கே ஒரு பேட்டி அளித்தது உண்மைதான். அன்றைய சூழ்நிலையில் பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது திரு.ஜனார்த்தன ரெட்டி அவர்கள் ஆந்திர முதலமைச்சராக இருந்தார். இரண்டாண்டு காலத்திற்குள் 1994–க்குள் திட்டப் பணிகளை முடித்துவிட முடியும் என்ற நம்பிக்கையில் அன்றைக்கு அறிவிப்பு செய்தேன். அதன்பிறகு, குறுகிய காலத்திற்குள்ளேயே திரு.ஜனார்த்தன ரெட்டி அவர்கள் மாற்றப்பட்டு திரு.விஜயபாஸ்கர ரெட்டி அவர்கள் ஆந்திர முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அதன் பின்னர் மீண்டும் நான் ஹைதராபாத் சென்று இந்தத் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டும் என்று அவரோடு பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்போதும் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. அதன் பின்னர் சிறிது காலத்திற்குள் தேர்தல் வந்தது. விஜயபாஸ்கர ரெட்டி அவர்களும் சென்றுவிட்டார். என்.டி.ராமராவ் அவர்கள் ஆந்திர முதலமைச்சராக வந்தார். மீண்டும் நான் ஹைதராபாத் சென்று அன்றைய ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவ் அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தினேன். அப்போதும் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டும் என்று அவர்களை வற்புறுத்தினேன். ஆனால் சிறிது காலத்திற்குள்ளே அவரும் மாற்றப்பட்டு, திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் ஆந்திர முதலமைச்சராக வந்தார். இப்படி ஆந்திர முதலமைச்சர்கள் மாறிக் கொண்டே இருந்த காரணத்தால்தான் ஆந்திராவில் நடைபெற வேண்டிய பணிகள் தாமதப்பட்டனவே தவிர இங்கே தமிழ்நாட்டுப் பகுதியில் நாங்கள் செய்ய வேண்டிய பணிகளில் எந்தவிதமான தாமதமும் ஏற்படவில்லை. ஆந்திராவில் ஆட்சி மாற்றம் அடிக்கடி ஏற்பட்ட காரணத்தால் முதலமைச்சர் மாறிக் கொண்டே இருந்ததனால் அங்கே காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் 1994–ல் தண்ணீர் கிடைத்துவிடும், 1995–ல் தண்ணீர் கிடைத்துவிடும் என்று நம்புகிறோம் என்று சொன்னது நடைபெறவில்லை. அதற்கு நாங்கள் எப்படிப் பொறுப்பாக முடியும் ?

ஆனால் சில கடிதங்கள் வந்ததைப் பற்றி இங்கே மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆந்திர முதலமைச்சர் கடிதம் எழுதி இருக்கிறார், ஆந்திர நீர்ப்பாசன அமைச்சர் கடிதம் எழுதி இருக்கிறார், ஆந்திர நீர்ப்பாசனத் துறைச் செயலாளர் இந்த அரசுக்குக் கடிதம் எழுதி இருக்கிறார் என்றெல்லாம் குறிப்பிட்டார். இந்தக் கடிதங்களில் கிருஷ்ணா நதிநீர் திறந்துவிடப்பட்டது என்று குறிப்பிட்டார்கள் என்றும் அவர் இங்கே சொன்னார். இங்கே மக்களை ஏமாற்றுவதற்காக ஒரு மோசடி விழாவே நடத்திவிட்டு அதில் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவே கலந்து கொண்டுவிட்டு கிருஷ்ணா நதிநீரை ஒரு வெள்ளிக் குடத்தில் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, பின்னர் வரவில்லை என்று அவரே எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? ஆந்திர முதலமைச்சரோ, ஆந்திர அமைச்சரோ, ஆந்திர அதிகாரிகளோ அவர்களே இந்த விழாவில் கலந்து கொண்டபோது கிருஷ்ணா நதிநீர் வந்துவிட்டதாக அவர்களே இங்கே சொன்னபோது ஆந்திரத்திலிருந்து கிருஷ்ணா நதிநீர் வரவில்லை என்று அவர்களே எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? அதனால்தான் அவர்கள் ஜாக்கிரதையாக கடிதப் போக்குவரத்தில் கிருஷ்ணா நதி நீர், கிருஷ்ணா நதி நீர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் எழுதிய மாத்திரத்திலேயே கிருஷ்ணா நதி நீர் இங்கே வந்துவிடவில்லை. இன்னும் வரவில்லை. வரவில்லை என்பதுதான் உண்மை.

இன்னொரு மாநில முதலமைச்சரைப் பற்றி நான் எந்த அவதூறான கருத்தையும் இங்கே தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால், கடந்த, முந்தைய ஆட்சியாளர்கள், சென்னை மாநகர மக்களை ஏமாற்றியிருக்கிறார்கள் என்பது உண்மை. கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வந்துவிட்டது என்று கூறுவது மாபெரும் மோசடியாகும். மக்களை ஏமாற்றுவதற்காக, உள்ளாட்சி அமைப்புத் தேர்தலில், சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக மக்களை ஏமாற்றுவதற்காக ஒரு விழா நடத்தப்பட்டது. அதில் கிருஷ்ணா நதி நீர் வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அந்த விழாவில் ஆந்திர முதலமைச்சர் கலந்துகொண்டார் என்பது உண்மை. இது ஊரறிந்த உண்மை. உலகறிந்த உண்மை. இன்றுவரை ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரவில்லை என்பதுதான் உண்மை. கால்வாய்ப் பணிகள் இன்னும் முடிவடையவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் எவ்வளவுதான் சாதித்தாலும் கிருஷ்ணா நதி நீர் பெறப்படவில்லை என்பதுதான் உண்மை. மக்களின் துயரங்களைப் போக்க என்னுடைய அரசு முன்னுரிமை அடிப்படையில் விரைவாகச் செயல்பட்டு கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டு வருவதற்கு முழுமூச்சுடன் செயல்படும் என்று உறுதி அளிக்கிறேன். ஆந்திர அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இத்திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்துவதற்கு அவர்களைக் கட்டாயப் படுத்துவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சென்னை மாநகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்துடன் கூடுதலாக புதிய திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்படும். தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் போதிய அளவு குடிநீர் கிடைக்கச் செய்வது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளில் ஒன்றாகும். இந்தத் தேர்தல் வாக்குறுதியைக் கண்டிப்பாக நிறைவேற்றுவோம் என்று இத்தருணத்தில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, புதிய வீராணம் திட்டம் பற்றிய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1991 –ம் ஆண்டு என் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தபோது சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்கப் புதிய வீராணம் திட்டம் என்ற திட்டத்தைச் செயல்படுத்த விரும்பினேன். இந்தத் திட்டம் 1993–ம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. அதாவது நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அடிக்கடி சென்னையில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. எல்லோர்க்கும் தெரிந்த விவரம், சென்னைக்கு குடிநீர் மூன்று ஏரிகளிலிருந்து வருகிறது. ரெட்ஹில்ஸ், பூண்டி, சோழவரம் என்ற மூன்று ஏரிகள்தான் நீர்த் தேக்கங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. அங்கிருந்துதான் சென்னைக்குக் குடிநீர் வருகின்றன.

**மக்களின் துயரங்களைப் போக்க என்னுடைய அரசு முன்னுரிமை அடிப்படையில் விரைவாகச் செயல்பட்டு கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டு வருவதற்கு முழுமூச்சுடன் செயல்படும்.**

நான் முதலமைச்சராக இருந்த அந்த ஐந்தாண்டு காலத்தில் அடிக்கடி கனமழை பெய்தது. அப்போது இந்த மூன்று ஏரிகளும் நிரம்பிவிட்டன. அப்போது இந்த ஏரிகளெல்லாம், நிரம்பி உபரி நீர் பெருக்கெடுத்ததால் அந்த ஏரிகளின் தடுப்புச் சுவர்கள் உடைந்து விடுகின்ற அபாயம் இருந்ததால் உபரி தண்ணீர் கடலில் திறந்துவிடப்பட்டது. அப்போது இவ்வளவு தண்ணீர் கடலில் வீணாக போய்க் கொண்டிருக்கிறதே, கடலில் கலக்கிறதே, இங்கே மக்கள் மற்ற நேரங்களில் குடிக்க தண்ணீரின்றி அவதிப்படுகிறார்களே என்று சொல்லி, அந்த நீர்த் தேக்கங்களின் கொள்ளளவை அதிகப்படுத்த என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அதையெல்லாம் செய்ய உத்தரவிட்டேன். முதலில் இந்த நீர்த்தேக்கங்களை தூர் வாரச் செய்தேன். அதற்காக உத்தரவிட்டேன். அந்த மூன்று நீர்த்தேக்கங்களும் தூர் வாரப்பட்டன. ஆனால், அதன் பின்னாலும், மீண்டும் கனமழை பெய்தபோது மீண்டும் ஏரிகள் எல்லாம் நிரம்பி மீண்டும் அந்த உடைப்பைத் தடுப்பதற்காக உபரி நீரைக் கடலுக்குள் திறந்துவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது இன்னொரு யோசனை சொன்னேன். இந்த ஏரிகளில் சுவர்களின் உயரத்தை அதிகப்படுத்தலாம் என்று சொன்னேன். அதுவும் செய்யப்பட்டது. ஆனால், அதன் பின்னால்கூட, அந்த மூன்று ஏரிகளிலும் தண்ணீர் நிரம்பி, மழை பெய்தபோதெல்லாம் கடலுக்குத் திறந்துவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போதுதான் எனக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டது. இந்த மூன்று நீர்த்தேக்கங்களோடு இன்னும் கூடுதலாக இரண்டு நீர்த்தேக்கங்களை இங்கே ஏற்படுத்தலாம், சென்னைக்கு அருகே ஏற்படுத்தலாம் என்று ஒரு திட்டம் தீட்டி அதற்கான பணிகளையும் நான் தொடங்கினேன். அதோடு புதிய வீராணம் திட்டத்தையும் செயல்படுத்தலாம் என்று எண்ணினேன். இதற்காக ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அக்குழு வீராணம் ஏரியின் அமைவிடம், நீர்மட்டத்தின் ஆழம், நீர் ஆதாரம் ஆகியவைக் குறித்து ஆய்வு செய்து அறிக்கை தந்ததன் அடிப்படையில் 464 கோடி ரூபாய் செலவில் புதிய வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த 11.8.1993 அன்று தமிழக அரசால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உலக வங்கியின் பரிசீலனைக்குப் பின்னால் இத்திட்டம் 1,638.04 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. எனது அரசு மேற்கொண்ட முயற்சியின் காரணமாக மிகக் குறுகிய காலத்திலேயே இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்திய அரசு மற்றும் உலக வங்கியின் இசைவு 1995லேயே பெறப்பட்டது. ஆனால் அ.இ.அ.தி.மு.க–க்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த தி.மு.க. அரசு இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு மேல் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் இன்றைய தினம், சென்னை மாநகர மக்கள் கடுமையான குடிநீர் தட்டுப்பாட்டிற்கு ஆளாகியிருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் விரும்பியிருந்தால் அவர் 1996லே ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஒரு ஆண்டு காலத்திற்குள்ளாகவே புதிய வீராணம் திட்டத்தை செயுல்படுத்தியிருக்க முடியும். ஆனால் அவர் அந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டு விட்டார். கைவிட்டு விட்டார். காரணம் வீராணம் என்று சொன்னால், மக்களுக்கு நினைவுக்கு வருவது சர்க்காரியா கமிஷன் அறிக்கை, அதிலே விலாவாரியாகக் குறிப்பிடப்பட்டிருந்த வீராணம் ஊழல், வீராணம் திட்ட ஊழல் இந்த திட்டத்தைப் புதிய வீராணம் திட்டத்தை மட்டும் செயல்படுத்தியிருந்தால் இந்நேரம் சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் கேலன் தண்ணீர் தினந்தோறும் கிடைத்திருக்கும். தண்ணீர்த் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போயிருக்கும். ஆனால் முந்தைய ஆட்சியாளர்களின் போக்குக்கு மக்கள் இந்தத் தேர்தலில் தக்க பாடம் புகட்டியுள்ளார்கள். இந்த அரசு சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்கும் முறையில் புதிய வீராணம் திட்டத்தை முனைப்புடனும், முழுமையான ஈடுபாடுடனும் செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டேன். சென்னைக்குக் குடிநீர் வழங்க புதிய நீர்த் தேக்கங்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு நில ஆர்ஜிதப் பணிகளும் தொடங்கப்பட்டிருந்தன. ஆனால், இவை நாங்கள் தொடங்கிய திட்டம் என்பதற்காகவே முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி இந்த திட்டத்தைச் செயல்படுத்தாமல் கைவிட்டு விட்டார். அந்தப் பணியையும் இந்த அரசு விரைந்து மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு வீராசாமி அவர்கள் தன்னுடைய கடமையைச் செய்து கொண்டிருக்கிறார். அவர் தலைவருக்கு அவர் ஆற்ற வேண்டிய கடமையைச் செய்து கொண்டிருக்கிறார். இதையெல்லாம் அவர் சொல்லவில்லை யென்றால் ஏன் சொல்லவில்லை என்று கேள்வி கேட்கப்படக்கூடும்.

சென்னை மாநகரிலே எப்போதுமே குடிநீர்த் தட்டுப்பாடு என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. அதற்காகத் தான் வீராணம் திட்டம் கொண்டு வருவது, கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணங்கள் எல்லாம் அவ்வப்போது மாநில அரசுக்கு வந்துள்ளது. நான் மாண்புமிகு உறுப்பினர்களிடம் கேட்க விரும்புவதெல்லாம் நான் பகீரத முயற்சி செய்து 1993ஆம் ஆண்டில் புதிய வீராணம் திட்டம் அறிவித்து அதற்கு உலக வங்கியின் அனுமதியைப் பெற்றேன். 1993ல் தான் முதன் முதலாக புதிய வீராணம் திட்டத்தை நான் அறிவித்தேன்.

அதன் பிறகு நான் பெரும் பாடுபட்டு, பகீரத முயற்சி செய்து, மத்திய அரசை வற்புறுத்தி உலக வங்கியின் கடன் உதவியைப் பெற்றேன். உலக வங்கியும் இந்தத் திட்டம் சாத்தியமானதுதானா, இதன் சாத்தியக் கூறுகள் எப்படிப்பட்டவை என்பதை எல்லாம் ஆராயப் பல குழுக் களை அனுப்பியது. அந்தக் குழுக்கள் எல்லாம் வந்து இந்தத் திட்டத்தைப் பற்றி ஆராய்ந்து பார்த்து, இது சாத்திய

மானதுதான், வீராணம் ஏரியில் தண்ணீர் இருக்கிறது. அந்தத் திட்டத்தைச் செயல் படுத்தினால் தினந் தோறும் சென்னை மாநகருக்கு 40 மில்லியன் காலன் தண்ணீர் கிடைக்கும் என்று அவர்கள் உறுதியாகக் கூறியதால் உலக வங்கி அனுமதி அளித்தது. இப்போது நான் குறிப்பிட்டது போல ரூபாய் 1,600 கோடிக்கு மேல் அவர்கள் கடன் கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டு, 1995லேதான் உலக வங்கி ஒப்புதல் அளித்தது. 1995ன் இறுதியில் இந்த அனுமதி பெறப்பட்டது. உடனேயே பணிகளைத் தொடங்கினோம். அதற்காக Global tender float செய்தோம். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்து வதற்காக முந்தைய ஆட்சியில் செய்ததுபோல, கான்கிரீட் பைப்புகளைப் பயன்படுத்தாமல் ஸ்டீல் பைப்புகளைப் பயன்படுத்தலாம் என்று Global tender – விட ஏற்பாடு செய்தோம். அந்த நேரத்தில்தான் தேர்தல் வந்துவிட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஆயத்தப் பணிகள் எல்லாம் முடிந்துவிட்டிருந்த நிலையில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி ஏன் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை என்று பதில் கூற முடியுமா? 5 ஆண்டு காலத்தில் இந்தத் திட்டத்தை ஏன் அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. ஏன் செயல்படுத்தவில்லை? எல்லாம் தயாராக இருந்தது. எல்லா அடிப்படை வேலைகளையும் நான் செய்து முடித்து வைத்திருந்தேனே, விட்ட இடத்திலிருந்து அந்தத் திட்டத்தை தொடர்ந்திருந்தால் ஓராண்டு காலத்திற்குள் முடித்திருக்க முடியும். அதற்குப் பிறகு ஒவ்வொரு நாளும் 40 மில்லியன் காலன் தண்ணீர் சென்னை மாநகருக்கு கிடைத்திருக்கும். இன்றைக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம் இல்லாமல் இருந்திருக்கும். ஏன் அவர்கள் அதைச் செய்யத் தவறினார்கள்?

**இந்த அரசு சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்கும் முறையில் புதிய வீராணம் திட்டத்தை முனைப்புடனும், முழுமையான ஈடுபாடுடனும் செயல்படுத்தும்**

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்லுகின்ற கருத்து ஏற்புடையது அல்ல. நம் மாநில அதிகாரிகளைவிட, உலக வங்கியின் நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வந்து இந்தத் திட்டத்தை ஆராய்ந்து பார்த்து, இது சாத்தியமானதுதான், ஆண்டு முழுவதும் வீராணம் ஏரியில் தண்ணீர் இருக்கிறது என்று அவர்கள் அறிக்கை கொடுத்த பிறகுதான் உலக வங்கி இந்தக் கடனை அளிக்க முன்வந்தது. ஆகவே, வீராணம் என்றாலே வீராணம் ஊழல் மக்களுக்கு நினைவுக்கு வருகிறது. அந்த வீராணம் ஊழலின் நாயகர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி என்பதால்தான் இந்தத் திட்டத்தைக் கைவிட்டார் என்பதை மூடி மறைக்க முடியாது. இப்போது அதனால் எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். அன்றைய தினம் உலக வங்கி 1,603 கோடி ரூபாயை இதற்காக நிதி ஒதுக்கீடு அளிக்க ஒத்துக் கொண்டது; கடன் உதவி அளிக்க ஒத்துக்கொண்டது. அதைச் செயல்படுத்தாமல் விட்டதால், மேலும் இப்போது 6 ஆண்டுகள் உருண்டோடி விட்டதால், இப்போது மீண்டும் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமானால், மீண்டும் மதிப்பீட்டைத் தயாரிக்க வேண்டும். Estimates have to be re-worked – இன்றைய காலகட்டத்தில் விலைவாசிகள் எல்லாம் ஏறிவிட்டதால், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமானால் இன்னும் பல ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். இவ்வளவு சிரமத்தையும் இந்த ஆட்சிக்கு வைத்துவிட்டு போயிருக்கிறார்கள். நான் ஏதோ கோபமாகப் பேசுகிறேன் என்கிறார். எனக்கு ஒன்றும் கோபம் இல்லை. இது ஒன்றும் எனது தனிப்பட்ட பிரச்சினை இல்லை. இது மக்கள் பிரச்சினை; குடிநீர் பிரச்சினை. ஆகவே, என்னுடைய வருத்தம் எல்லாம், ஒரு நல்ல திட்டத்திற்கு அரும்பாடுபட்டு உலக வங்கியின் கடன் உதவியைப் பெற்ற பிறகு, வெறும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த நல்ல திட்டத்தை செயல்படுத்தாமல் விட்டுவிட்டார்களே என்ற வேதனைதானே தவிர எனக்கு கோபம் இல்லை.

நான் வீராணம் திட்டத்தைப்பற்றி மட்டும் பேசிவிட்டு சர்க்காரியா விவரங்களுக்குள் போக வேண்டாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் விடுவதாக இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் விடுவதாக இல்லை. ஆகவே ஒன்றை நான் அனைவருக்கும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் தெளிவாக கான்ட்ராக்டர் சத்திய நாராயணாவைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கான்ட்ராக்டர் சத்திய நாராயணா என்பவர் யார்? ஆரம்பத்தில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி

அவர்கள் ஆட்சியில் இருந்தபோது முதன்முதலாக வீராணம் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று திட்டமிடப்பட்டபோது அந்த வீராணம் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக காண்ட்ராக்ட் அளிக்கப்பட்டவர் தான் காண்ட்ராக்டர் சத்திய நாராயணா என்பவர். அப்போது எழுந்த குற்றச்சாட்டு என்னவென்றால் அவரிடம் அதிகப்படியான லஞ்சம் பெறப்பட்டதால் அவருக்கு அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து அந்த லஞ்சத்தை அவர் முன்னாள் முதலமைச்சருக்குக் கொடுத்துவிட்டதால், திட்டத்தைச் செயல்படுத்த முடியாமல் காண்ட்ராக்டர் சத்தியநாராயணா தற்கொலை செய்துகொண்டார்; வைரமோதிரத்தை தின்று பரிதாபமாக செத்தார் என்பதுதான் வரலாறு.

வீராணம் திட்டத்தில் நடைபெற்றது ஊழலா, இல்லையா என்பதற்கு அத்தாட்சியாக, சாட்சியாக இன்று கூட வீராணத்திலிருந்து சென்னை வரை அன்றைக்கு வாங்கப்பட்ட கான்கிரீட் பைப்கள் சாலையோரமாகக் கிடக்கின்றன; பரிதாபமாகக் கிடக்கின்றன. ஆகவே அவையெல்லாம் வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட செய்திகள். இங்கே புதியதாக விளக்கங்கள் கூற முற்படுவது தேவையற்றது. இதை மக்கள் நம்பப் போவது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு லஞ்சம் கொடுத்ததால் தான் திரு. சத்தியநாராயணா அவர்கள் திட்டத்தை முடிக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார் என்ற வாக்குமூலம் அஃபிடவிட்டில் இருக்கிறது என்பதை நானும் ஊர்ஜிதப்படுத்துகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்த அவையில் அதைப் பற்றி விவாதிக்கத் தயாரா, அப்படியானால் ஒரு நாள் இதற்காக ஒதுக்குங்கள், இங்கே விவாதிப்போம் என்கிறார். இந்த அவையின் நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. இந்தப் பிரச்சினைகள், இதுகுறித்து விளக்கங்கள் கூறப்பட வேண்டிய இடம் அவை அல்ல; கூறப்பட வேண்டிய இடம் நீதிமன்றம். நீதிமன்றத்தில் தக்க நடவடிக்கைகள் எடுக்க நாங்கள் ஆவன செய்யவுள்ளோம் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வளர்ச்சி விகிதம் பற்றிச் சில கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில், அதாவது **1991** முதல் **1996** வரை சராசரி வருட வளர்ச்சி விகிதம் **5.93** சதவீதமாக இருந்தது. திரு. கருணாநிதி அவர்களின் ஆட்சிக் காலமான **1996** முதல் **2001** வரை இது **5.60** சதவிகிதமாக குறைந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நபார்டுக்கு எழுதப்பட்ட கடிதத்தைப் பற்றி பலர் இங்கே பேசினார்கள். கடந்த 5 ஆண்டு காலமாக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி தொடர்ந்து சட்டப் பேரவைக்கு உள்ளேயும், வெளியேயும் உண்மைக்குப் புறம்பான ஒரு தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதாவது, நான் நபார்டுக்கு ஒரு கடிதம் கையெழுத்து போட்டு கொடுத்ததாகவும், அந்தக் கடிதத்தில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கூட்டுறவுக் கடன்களையோ, வட்டியையோ இந்த அரசு தள்ளுபடி செய்யாது என்று உத்திரவாதம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் திரும்பத் திரும்பத் தெரிவித்திருக்கிறார்.

எனக்கு அரசு கோப்புகளில் உள்ள விவரங்கள் கிடைக்க வழி இல்லாததால், என்னால் இதுவரையில் அதற்கு மறுப்பு தெரிவிக்க இயலாமல் போனது. தற்போது அரசு கோப்புகளை ஆராய்ந்தபோது, நான் அம்மாதிரியான எவ்விதக் கடிதமும் நபார்டு வங்கிக்கு எழுதவில்லை, என்பது தெரியவந்துள்ளது. ஆகவே திரு. கருணாநிதி அவர்கள் வேண்டுமென்றே சட்டசபையிலும், பொது மக்களிடையேயும் தவறான கருத்துக்களை பரப்பி வந்துள்ளார் என்பது தெள்ளத் தெளிவாகிறது. அதே கருத்தினை வலியுறுத்தி **28.5.2001** அன்று சட்டசபையில் திருவாளர்கள் பேராசிரியர் அன்பழகன், திரு. ஆற்காடு வீராசாமி மற்றும் திரு. கோ.சி. மணி ஆகியோரும் பேசியுள்ளார்கள்.

அடுத்து, உள்ளாட்சி அமைப்பு தேர்தல்களைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். வருகிற செப்டம்பர் மாதத்தில் எல்லா உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்த இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்ற மகிழ்ச்சிகரமான அறிவிப்பை இந்த நேரத்தில் நான் செய்ய விரும்புகிறேன். மேலும் ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களை எல்லாம் கலைப்பதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. The Primary Co-operative Societies அனைத்திற்கும் செப்டம்பர் மாதத்தில் தேர்தல்கள் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகளிர் மேம்பாட்டிற்காக பல திட்டங்கள் இந்த அரசு அறிவித்துள்ளது. **11** மற்றும் **12**ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவசமாக மிதிவண்டி வழங்குதல், அரசாங்கக் கல்லூரிகளில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பெண்களுக்கு மேல்படிப்பு வரை, மேல் பட்ட படிப்பு வரை இலவசக் கல்வி வழங்குதல், மகளிருக்கான சுய வேலைவாய்ப்புகளைப் பெருக்க **5** இலட்சம் பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளித்தல் போன்ற திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் செல்லும் இடமெல்லாம் பெண்கள், குறிப்பாக கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்கள் ஒரு கோரிக்கையை என்னிடத்தில் வைக்கிறார்கள். அதாவது, பெண்களுக்கு கிராமப்புறங்களில் கழிப்பறை வசதி செய்து தர வேண்டும் என்ற கோரிக்கைதான் நான் செல்லும் இடமெல்லாம் என்னிடம் வைக்கப்படுகிறது. ஆகவே, பெண்களுக்கு கிராமப்புறங்களில் கழிப்பறைகள் தேவைப்படும் இடங்களிலெல்லாம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் இருமொழிக் கொள்கையை முனைப்புடன் செயல்படுத்துவோம் என்று அறிவித்திருந்தோம். இந்த இருமொழிக் கொள்கையில் எங்களுடைய உண்மை நிலையையும், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் இரட்டை வேடத்தையும் நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் தமிழவேள், ஐயன் திருவள்ளுவருக்கு அடுத்து வந்த வள்ளுவர் என்றெல்லாம் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியைத் துதிபாடுவது வழக்கம். ஆனால், அவருடைய தமிழ்ப் பற்றைப் பற்றி ஒரு சுவையான உண்மையை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கென்று ஒரு புத்தகம் வாங்கப்பட்டது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக Constitution of India என்ற புத்தகம் வழங்கப்படும். அதற்காக திரு. கருணாநிதி அவர்கள் ஆட்சிக் காலத்தில் வாங்கப்பட்ட புத்தகம்தான் இது. (மாண்புமிகு முதலமைச்சர் பேரவையில் ஒரு புத்தகத்தைக் காண்பித்தார்).

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்காக இந்தப் புத்தகத்தின் 250 பிரதிகளை வாங்கி வைத்திருக்கிறார்கள். இதைப் பார்த்தீர்களானால் முழுக்க, முழுக்க இந்தியில் உள்ளது. அதனால் சட்டப்பேரவை முதன்மைச் செயலாளர் அவர்கள் இதைப் பார்த்ததும் திகைத்துப்போய் இந்தப் புத்தகங்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது, ஒரு பக்கம் ஆங்கிலத்தில் இருக்கிறது, அடுத்த பக்கம் இந்தியில் இருக்கிறதே இந்தப் புத்தகங்களை வழங்கலாமா என்று கேட்டார். அப்போது என்னிடம் இந்தப் பிரச்சினை வந்ததால் நான் ஆலோசனை கூறினேன். இந்தப் புத்தகங்களை அப்படியே வைத்து விடுங்கள், இதை வழங்க வேண்டாம், இதை வழங்கினாலும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்தி படிக்கத் தெரியாது. படிக்க முடியாது, அதனால் எந்தப் பயனும் இருக்காது.

**மாவட்டங்களுக்கும், போக்குவரத்துக் கழகங்களுக்கும் தலைவர்களின் பெயர்கள் பழையபடி சூட்டப்படமாட்டாது**

ஆகவே, பேரறிஞர் அண்ணாவின் இரு மொழிக் கொள்கைக்கேற்ப தமிழிலும் ஆங்கிலத்திலும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பற்றிய புத்தகத்தை வாங்கி, இந்தப் பிரதிகளைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு வாங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆகவே, உண்மையான தமிழ்ப் பற்றுடையவர்கள் யார், உண்மையாக, பேரறிஞர் அண்ணாவின் இருமொழிக் கொள்கையைச் செயல்படுத்துபவர்கள் யார் என்பதை மக்களே புரிந்துகொள்ளலாம் என்றும் எண்ணுகிறேன்.

இந்தப் புத்தகங்கள் இனாமாக வரவில்லை, யாரும் அனுப்பவும் இல்லை. முந்தைய அரசு பணம் கொடுத்து வாங்கியிருக்கிறது.

முந்தைய ஆட்சி இந்தப் புத்தகங்களை வாங்குவதற்காக 36,000 ரூபாய் செலவழித்திருக்கிறது என்ற தகவலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தவறு நடந்துவிட்டதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒப்புக் கொண்டதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் இங்கே பேசுகின்றபோது உசிலம்பட்டியில் செயல்படுத்த வேண்டிய நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டார். இந்த 58 கிராம கால்வாய் திட்டம் என்பது இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தினை விரைந்து முடிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஏற்கெனவே இயங்கி வந்து நடுவில் நிறுத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைக் கள்ளர் சீரமைப்புத் துறை சார்பாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தார். அவ்வாறு ஏற்பாடு செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது, அவரும் இங்கே பேசிய இன்னும் பல மாண்புமிகு உறுப்பினர்களும் மாவட்டங்களுக்கும் போக்கு வரத்து கழகங்களுக்கும் தலைவர்களின் பெயரைச் சூட்ட மாட்டோம் என்ற ஒரு வாக்குறுதியை அளிக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவே இன்று இந்த அவையில் ஒரு அறிவிப்பை வெளியிடுகிறேன். மாவட்டங்களுக்கும், போக்குவரத்துக் கழகங்களுக்கும் தலைவர்களின் பெயர்கள் பழையபடி சூட்டப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது நாடு சுதந்திரம் அடைந்து, விடுதலை பெற்று 50 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில் இன்றுகூட பல பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதில்லை என்று வருத்தப்பட்டுக்கொண்டார். இதைப்பற்றிச் சில விவரங்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். 1991இல் என்னுடைய தலைமையில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி அமைந்தபோது பல குடியிருப்புகளுக்கு குறிப்பாக,

ஆதிதிராவிட குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் எதுவும் இல்லை என்ற தகவல் எனக்குத் தரப்பட்டது. அப்போது ஒரு Time Bound Scheme அதாவது ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டிய ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து குறிப்பிட்ட காலத்திற்குள் ஒவ்வொரு ஆதிதிராவிடக் குடியிருப்பிற்கும் 100 பேர் வசிக்கின்ற ஒவ்வொரு குடியிருப்பிற்கும், 100க்கும் மேற்பட்டவர்கள் வசிக்கின்ற ஒவ்வொரு குடியிருப்பிற்கும் ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரமாவது தரப்பட வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து அதை வெற்றிகரமாகச் செயல்படுத்தி முடித்துவிட்டோம். ஆகவே, நாங்கள் ஆட்சிப் பொறுப்பை விட்டு இறங்கியபோது குடிநீர் ஆதாரமே இல்லாத குடியிருப்பு என்று எதுவும் இருக்கவில்லை.

ஆனால், இதிலுள்ள உண்மை என்னவென்றால் புதிய புதிய குடியிருப்புகள் தொடங்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. ஒரு குடியிருப்பில் ஆரம்பத்தில் 50 குடும்பங்கள் இருக்கின்றன. காலப்போக்கில் அது பெருகி 100 குடும்பங்கள் ஆகிவிடுகிறது. அப்போது 25 பேர் அங்கிருந்து பிரிந்து சென்று ஒரு புதிய குடியிருப்பை ஆரம்பிக்கிறார்கள்; புதிய குடியிருப்பை ஏற்படுத்துகிறார்கள். இத்தகைய புதிய குடியிருப்புகள் தமிழகமெங்கும் ஆங்காங்கே உருவாகிக் கொண்டேயிருக்கின்றன. புதிய குடியிருப்புக்கள் உருவாகும்போது இத்தகைய புகார்களெல்லாம் எழுகின்றன. எங்கள் பகுதிக்கு விளக்கு வசதி இல்லை, சாலை வசதி இல்லை, குடிநீர் வசதி இல்லை என்ற புகார்கள் எழுகின்றன. ஆகவே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், 1996ல் திரு. கருணாநிதி அவர்கள் தலைமையில் இங்கே ஆட்சியமைந்த பிறகு உருவாக்கப்பட்ட புதிய குடியிருப்புகள் கவனிப்பாரின்றிக் கைவிடப்பட்டுள்ளன. ஆகவேதான் இன்று பல இடங்களில் குடிநீர் ஆதாரங்கள் இல்லை என்ற புகார் எழுந்துள்ளன. 1996லேயிருந்து 2001 வரை உருவாக்கப்பட்ட புதிய குடியிருப்புகளுக்கு இவர்கள் குடிநீர் வசதி செய்து தரவில்லை. ஆகவே, இப்போது மீண்டும் நான் ஒரு வாக்குறுதியை அளிக்கிறேன். 100க்கும் மேற்பட்ட ஜனத்தொகை இருக்கின்ற ஒவ்வொரு குடியிருப்புக்கும் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரத்தையாவது ஏற்படுத்திக் கொடுப்போம் என்ற வாக்குறுதியை இங்கே அளிக்கிறேன்.

விவசாயிகளின் நலன் காக்க கோலப்பன் கமிட்டி பரிந்துரைகளை ஏற்க வேண்டுமென்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். கோலப்பன் கமிட்டி பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக விவசாயிகளின் உயிரோட்டம் காவிரி நதி நீரோட்டத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை இவ்வரசு நன்கு அறியும். நடப்பாண்டில் விவசாயத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து காவிரி நீர் வருகிற ஜூன் 12ஆம் தேதியன்று திறந்து விடப்படும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 5 ஆண்டு காலத்தில் தமிழகத்தில் சுற்றுலாத் துறையில் கவனம் செலுத்தப்படவேயில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். கன்னியாகுமரியிலும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் சுற்றுலா வளர்ச்சிக்கு இந்த அரசு தனிக் கவனம் செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது, இன்னும் அதிகமான அணைகளைக் கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அணைகள் கட்டுவதால், நிலநடுக்கம் ஏற்படுகிறது என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள். அணைகள் கட்டுவதால் அதிக அளவில், இந்தியாவில் பூகம்பங்கள், நில நடுக்கம் ஏற்படுகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆகவே, இதை மனதில் வைத்துக்கொண்டு, புதிய அணைகள் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது, வேலூரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் நிகழ்ந்த தீ விபத்துக்கள் குறித்து சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 25 ஆயிரமாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசுகின்றபோது, பல கோரிக்கைகளை எடுத்து வைத்தார். அவற்றில் கொப்பரைத் தேங்காயை, மாநில அரசே கொள்முதல் செய்யவேண்டும் என்றும், தேயிலை நியாயவிலைக் கடைகள் மூலம் விற்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார். அமைச்சரவைக் கூட்டத்தில் இக்கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு தக்க முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் ஆளுநர் உரையில் உள்ள மின்சக்தி குறித்த புள்ளி விவரம் தவறு என்று கூறினார். பிள்ளைப்பெருமாள்நல்லூர் மின்திட்டம் 330 மெகாவாட் திறனோடு மார்ச் மாதம் செயல்பட ஆரம்பித்துள்ளது என்றும் சொன்னார்.

ஆளுநர் உரையில் உள்ள comparison 1991 முதல் 96 வரை உள்ள நிதி ஆண்டுகளுடன் 1996 முதல் 2001 வரை உள்ள நிதி ஆண்டுகளோடுதான். முந்தைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், அதாவது 1991 முதல் 96ஆம் ஆண்டு வரை 968 மெகாவாட் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டு கமிஷன் செய்யப்பட்டது. ஆனால் 1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை தி.மு.க. ஆட்சியில் 458

## மேட்டூர் அணை திறப்பு

**மா**ண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 12-6-2001 அன்று மாலை 6 மணிக்கு காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இவ்வணையிலிருந்து பாசனத்திற்கு திறந்துவிடப்படும் தண்ணீரின் மூலம் திருச்சி, தஞ்சாவூர், சேலம், நாமக்கல், புதுக்கோட்டை, காரைக்கால் மாவட்டங்களில் 16 இலட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

மெகாவாட் உற்பத்தித் திறன்தான் கமிஷன் செய்யப்பட்டது. மேலும் பிள்ளைப்பெருமாள்நல்லூர் திட்டம், நடப்பு நிதி ஆண்டில் அதாவது 26.4.2001 அன்று முதல் தான் செயல்பட ஆரம்பித்தது. அதுவும் 17.5.2001ல் இருந்து 28.5.2001 வரை இந்த மின் உற்பத்தி நிலையம் மூடப்பட்டது. shut down செய்யப்பட்டது. ஆகவே, இது புள்ளிவிவரத்தில் சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசும்போது, நீங்கள் உங்கள் தேர்தல் அறிக்கையில் அளித்துள்ள வாக்குறுதிகளையெல்லாம் உடனே செயல்படுத்த முடியாது என்பது எங்களுக்குத் தெரியும் என்று மிகவும் நியாயமான ஒரு கருத்தைச் சொன்னார். 5 ஆண்டு காலத்தில் இவற்றையெல்லாம் நீங்கள் செய்து முடித்தால், நாங்கள் மகிழ்ச்சி அடைவோம் என்றும் கூறினார். 5 ஆண்டு காலத்தில், நாங்கள் அளித்துள்ள வாக்குறுதிகள் அனைத்தையும் நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தான் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டார்கள். 1996 ஆம் ஆண்டு, தேர்தலின்போது, விவசாயிகளுக்கு, கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் தரப்படும் என்று வாக்குறுதியை தி.மு.க. அளித்தது. ஆனால் 5 ஆண்டு காலத்தில், அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுகின்றபோது, பவர் பிராஜக்டைப் பற்றி, புதிய அனல் மின் திட்டங்களைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டார். எங்கள் ஆட்சிக் காலத்தில், 1991 முதல் 1996 வரை பல புதிய அனல் மின் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் அதன் பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அவற்றில் ஒரு புதிய திட்டத்தைக்கூட ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் கமிஷன் செய்ய அவர்கள் அனுமதிக்கவில்லை. அதற்கு ஏதேதோ விளக்கங்களை மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே அளித்தார்கள். அப்போது அவர் எடுத்து வைத்த ஒரு வாதம் என்னவென்றால், எதற்காக இந்தத் திட்டத்தை நாங்கள் கமிஷன் செய்யவில்லையென்றால், அந்த உபரி மின்சாரம் தமிழகத்திற்குத் தேவையில்லை என்றார். இப்படி ஒரு முன்னாள் அமைச்சர் சொல்வது எனக்கு வியப்பாக உள்ளது. உபரி மின்சாரம் தேவையில்லை என்று பொறுப்புள்ள ஆட்சியாளர்கள் யாருமே சொல்ல மாட்டார்கள். தமிழகத்தில் அந்த உபரி மின்சாரம் தேவையில்லையென்றால், எப்போதுமே மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்ற ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கு நாம் அந்த உபரி மின்சாரத்தை விற்க முடியும், அதன் மூலம் அதிக வருவாயைத் தமிழகத்திற்கு ஈட்ட முடியும்.

தலைவரைச் சுற்றி வருவது தவறு இல்லை என்றார் மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள். தலைவரைச் சுற்றி வருவது தவறு இல்லைதான். ஆனால் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று இருந்தவர், தமிழகத்தைச் சுற்றி வந்து மக்கள் நல்வாழ்வைக் கவனிப்பதற்குப் பதிலாக மக்களை அடியோடு புறக்கணித்துவிட்டு, மறந்துவிட்டு, எந்நேரமும் அவர் தலைவரைச் சுற்றிக் கொண்டிருந்ததுதான் தவறு என்று நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மின்சாரத் திட்டங்களைத் தடை செய்யவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி சொல்லியிருக்கிறார். இதைப்பற்றிய விவரங்களைச் சேகரித்து, இந்தத் துறையின் மானியக் கோரிக்கை இந்த அவையில் எடுத்துக் கொள்ளப்படும்போது, முழு விவரங்களை இந்த அவையில் தெரிவிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில்துறையை எடுத்துக்கொண்டால் 1991 முதல் 1996 வரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பல சாதனைகளைப் படைத்தோம். ஆனால் பின்னர் வந்த தி.மு.க. ஆட்சியில் நான் கொண்டு வந்த திட்டங்களையெல்லாம், நான் கொண்டுவந்த தொழிற்சாலைகளை, பெருந்தொழில்களையெல்லாம் அவர்கள் கொண்டு வந்ததாக இங்கே தம்பட்டம் அடித்தார்கள். ஃபோர்டு கார் நிறுவனத்தை பொறுத்தவரை அது நான் கொண்டு வந்த பெருந்திட்டம். ஹூண்டாய் திட்டத்தைப் பொறுத்தவரை ஹூண்டாய் கார் நிறுவனத்தின் சேர்மன், நான் முதலமைச்சராக இருந்தபோது, மூன்று முறை என்னை வந்து சந்தித்தார். எல்லாம் பேசி முடிக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்கான எம்.ஓ.யூ.வில் கையெழுத்திடுவதற்காக ஒரு தேதியும் குறிக்கப்பட்டது. அதாவது 18 மார்ச், 1996ல் இந்த எம்.ஓ.யூ.வில் கையெழுத்திடுவதாக இருந்தது. அதற்குள் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. அன்றைய தினம்

**11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவசமாக மிதிவண்டி வழங்குதல், அரசாங்கக் கல்லூரிகளில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பெண்களுக்கு மேல்படிப்பு வரை, மேல் பட்ட படிப்பு வரை இலவசக் கல்வி வழங்குதல், மகளிருக்கான சுய வேலைவாய்ப்புகளைப் பெருக்க 5 இலட்சம் பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளித்தல்.**

தலைமைத் தேர்தல் ஆணையர் மிகவும் கண்டிப்பாக ஒரு code of conduct– ஐ enforce செய்தார். தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு ஒரு மாநில அரசு எந்தப் புதிய ஒப்பந்தத்திலும் கையெழுத்து போடக்கூடாது என்று அவர் அன்றைக்குச் சொன்னதால், இந்தத் திட்டத்தை நாங்கள் அறிவிக்க முடியவில்லை. அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியவில்லை. ஆனால் பின்னர் அந்தத் திட்டம் இங்கே வந்த பிறகு, ஏதோ இவர்கள் கொண்டு வந்ததாக அவர் தெரிவித்தார்.

அதைப்போலவே, இங்கே பி அண்ட் சி மில் பற்றி பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் கூட பேசினார்கள். நாங்கள் உண்மையாகவே இதில் சாதனை படைத்திருக்கிறோம். நீண்ட நாட்களாக மூடிக்கிடந்த பி அண்ட் சி மில், அதாவது பின்னி மில் 1993ஆம் ஆண்டு நாங்கள் திறக்க ஆவண செய்தோம்.

அதன்பிறகு அந்த ஆலை செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சர் ஆன உடனேயே, 1996ல் அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயே மீண்டும் பின்னி ஆலை மூடப்பட்டுவிட்டது. இன்றுவரை மூடிக்கிடக்கிறது. இன்று மீண்டும் அதைத் திறக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் கோரிக்கை வைத்தார். முன்பு வெறும் சிக்கலாக இருந்தது; இப்போது இடியாப்பச் சிக்கல் ஆகிவிட்டது. இதில் என்னென்ன சிக்கல்கள் இருக்கின்றனவோ, இதை எப்படி விடுவிப்பது என்பதைப் பற்றியெல்லாம் ஆராயாமல் எந்த வாக்குறுதியையும் இந்த நேரத்தில் நான் இங்கே அளிக்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசுகின்ற போது ஒன்றைச் சொன்னார். நானும், ஆளுங்கட்சி தரப்பில் இருந்தும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து தெரிவித்த சில கருத்துகளுக்கு அவர், நாங்கள் சாதனைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்; அவர்கள் வேண்டுமானால் வேதனைகளைச் சொல்லட்டும் என்றார். அவர்களுடைய சாதனைகளைப் பற்றி இங்கே விரிவாகச் சொன்னார்கள். நாங்கள் வேதனைகளைப் பற்றிச் சொன்னோம் என்கிறார். ஆமாம், வேதனைகளைப் பற்றித் தான் சொல்கிறோம். சட்டம் ஒழுங்கு தமிழ்நாட்டில் அடியோடு கடந்த ஐந்தாண்டு காலத்தில் சீர்குலைக்கப்பட்ட வேதனை; ரேஷன் கடைகள் மூடப்பட்டுக் கிடக்கின்ற வேதனை; தேயிலை விவசாயிகள் அனுபவிக்கின்ற வேதனை; எங்கே பார்த்தாலும் மதக் கலவரங்கள், சாதிக் கலவரங்கள் ஏற்பட்ட வேதனை; கோயம்புத்தூர் குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட வேதனை; திருப்பத்தூர் சந்தன மரக்கிடங்கிற்கு தீ வைக்கப்பட்டதால் வேதனை; தலித் பெண் சித்ரா காவல் நிலையத்தில் மானபங்கப்படுத்தப்பட்டதால் தற்கொலை செய்து கொண்ட கொடுமை; மாணவி சரிகா ஷா காலிகளால் ஈவ் டீசிங் செய்யப்பட்டதால் மரணம் அடைந்த துயரம்; இவையெல்லாம் வேதனைகள்தான். சாதனைகள் அல்ல. இவைகளைத்தான் மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள், அவர்களது ஆட்சிக் காலத்தில் சாதனைகள் என்று குறிப்பிடுகிறார்களோ, என்னவோ, தெரியவில்லை.

இங்கே பேசுகின்ற போது, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் Revenue deficit–ஐ பற்றிக் குறிப்பிட்டார். நாங்கள் குறிப்பிடுவது fiscal deficit–பற்றி. ஆகவே, ஏற்கெனவே அறிவித்ததுபோல், இந்த அவையில் தமிழ்நாட்டின் நிதிநிலை குறித்து ஒரு வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப்படும். அதில் எல்லா உண்மைகளும் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**5 ஆண்டு காலத்தில், நாங்கள் அளித்துள்ள வாக்குறுதிகள் அனைத்தையும் நிச்சயமாக நிறைவேற்றுவோம்**

இன்னும் எவ்வளவோ சொல்ல வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால், காலத்தின் அருமை கருதி, இத்தோடு என் உரையை, பதிலுரையை நிறைவு செய்யலாம் என்று எண்ணுகிறேன். இன்னும் சொல்ல பல கருத்துக்கள் இருக்கின்றன. தெரிவிக்க வேண்டிய பல தகவல்கள் உள்ளன. அவற்றையெல்லாம் பட்ஜெட் கூட்டத் தொடரில் தெரிவிப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறைவாக, எங்கள் தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்திருப்பதற்கிணங்க, தமிழகத்தில் ஏழ்மை, வறுமை, இல்லாமை இல்லாத நிலைமை உருவாக்கவும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் தமிழ்நாட்டில் அறவே இல்லை என்ற உன்னத நிலையை அடையவும், இந்த அரசு பாடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு ஏழையெளிய மக்களின் அரசாகச் செயல்படும் என்றும், இந்த ஆட்சி உண்மையான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியாக, மக்கள் ஆட்சியாகத் திகழும் என்றும், மக்கள் எங்கள் மீது வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்வோம் என்றும் உறுதி அளித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**தமிழகத்தில் ஏழ்மை, வறுமை, இல்லாமை இல்லாத நிலைமை உருவாக்கவும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் தமிழ்நாட்டில் அறவே இல்லை என்ற உன்னத நிலையை அடையவும், இந்த அரசு பாடுபடும்**

மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் இந்த அவையில் மிகவும் நிறைவானதொரு உரையை ஆற்றினார்கள். அப்போது, பல கோரிக்கைகளை அவர் எடுத்து வைத்தார். அதில் இப்போது தெரிவிக்கப்பட்டதும் ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் தெரிவித்த கோரிக்கைகள் எல்லாம், எடுத்து வைத்த கோரிக்கைகள் எல்லாம், அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தேயிலை விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிச்சாமி அவர்கள் தெரிவித்தார். ஏற்கெனவே அவைகள் வாபஸ் பெற உத்தரவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்ட பாட்டாளி மக்கள் கட்சியினர் மீது தொடுக்கப்பட்டு உள்ள வழக்குகள் எல்லாம் ஆராயப்பட்டு, வழக்குகளின் தன்மைக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதம் நடை பெற்றுக் கொண்டிருந்தபோதே அவ்வப்போது நான் எழுந்து உறுப்பினர்கள் எழுப்பிய பல பிரச்சினைகளுக்கு உடனே பதில் தெரிவித்துவிட்டேன். ஆதிதிராவிடர் நலத்துறை ஜி.ஓ. எண்.44–ஐ பற்றி என்ன நிலைப்பாடு என்பதை ஏற்கெனவே தெளிவாக நான் இந்த அவையில் அறிவித்து விட்டேன். நிச்சயமாக அதைச் செயல்படுத்த எல்லா நடவடிக் கைகளையும் மேற்கொள்வோம் என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்து இருப்பதால்தான், மீண்டும் அதை எனது பதிலுரையில் நான் சேர்த்துக் கொள்ளவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. திருமாவளவன் அவர்கள் எழுப்பி இருக்கின்ற மற்றொரு கோரிக்கையான தொழில் கல்வி பயிலும் ஊரகப் பள்ளி மாணவர்கள் 10 சதவிகித கட்டணம் கட்டினால் போதும் என்ற மராட்டிய அரசின் கொள்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

• • •

# மைலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் கோயிலுக்குத் தண்ணீர் வழங்க முதலமைச்சர் உடனடி நடவடிக்கை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 9.6.2001 அன்று பக்தர்கள் சிலர் சந்தித்து மைலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் கோவிலில் தண்ணீர் பற்றாக்குறை மிகக் கடுமையாக உள்ளது என்றும், தெய்வத் திருவுருவங்களுக்கு நாள்தோறும் நடத்தவேண்டிய பூஜைகளுக்குக் கூட தண்ணீர் இல்லாத நிலை உள்ளது என்றும், அதைத் தீர்க்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

## தண்ணீர் வழங்க ஏற்பாடு

தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாக சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் வாயிலாக டேங்கர் லாரிகள் மூலம் அருள்மிகு கபாலீசுவரர் திருக் கோவிலுக்குத் தண்ணீர் வழங்க வேண்டும் என ஆணையிட்டார்கள். மேலும் கோவில் வளாகத்தில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு ஒன்றை அமைக்கவும் உத்தரவிட்டார்கள்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க, அருள்மிகு கபாலீசுவரர் திருக் கோவிலின் தினசரி தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தண்ணீர்த் தொட்டியை கோவில் வளாகத்தில் அமைத்து டேங்கர் லாரி மூலம் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பொதுமக்கள் பாராட்டு

தமிழக முதலமைச்சர் அவர்களின் விரைவான நடவடிக்கையைப் பொதுமக்களும் பக்தர்களும், மைலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் கோவில் நிர்வாகத்தினரும் பெரிதும் பாராட்டினார்கள்.

★ ★ ★

# மிலாது நபி வாழ்த்துச் செய்தி

**முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா**

அண்ணல் நபிகள் நாயகம் அவர்கள் அவதரித்த இந்தப் புனித நாள் உலகம் முழுவதும் மிகுந்த மகிழ்வோடு கொண்டாடப்படுகிறது. சமுதாய நல்வாழ்க்கைக்கான அரிய படிப்பினைகளையும், உயரிய நெறிமுறைகளையும் மக்களுக்கு உணர்த்தும் உயரிய வாழ்வுதான் அண்ணல் நபிகள் நாயகத்தின் அற்புத வாழ்வாகும்.

தனது வாழ்க்கைப் பாதையில் ஏற்பட்ட பாதிப்புகளையும், அனுபவங்களையும் சமுதாயத்துக்கு எடுத்துரைத்து வாழ்வாங்கு வாழும் பாங்கை அருளியவர் அண்ணல் நபிகள் நாயகம் ஆவார்கள். மக்களை மேம்படுத்துவதற்கே மதமும் கோட்பாடுகளும் என்பதில் அண்ணல் நபிகள் நாயகம் உறுதி கொண்டு இருந்ததை அவர் உணர்த்திய போதனைகள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. உலக மக்கள் மதமும் மொழியும் இனமும் பிளவுபடுத்தலாகாது என்றும், அன்பும் சகோதரத்துவமும் மொழி கடந்து, இனம் கடந்து வளர்க்கப்பட வேண்டும் என்றும் பறை சாற்றிய உலகப் பெரியோர்களில் அண்ணல் நபிகள் நாயகம் பெரும் சிறப்புக்கு உரியவர் ஆவார்.


சகிப்புத் தன்மை, நல்லிணக்கம், வன்முறையற்ற வாழ்வு, இவையே உலக அமைதிக்கு வழிகோலும் என்பதை இப்புனித நாளில் உணர்ந்து அண்ணல் நபிகள் நாயகம் பிறந்த நாளை அனைவரும் கொண்டாட வேண்டும். இதுதான் அண்ணலின் புகழ் வளர்க்கும் அற்புதச் செயல் என்றும் தெரிவித்து, அண்ணல் நபிகள் நாயகம் அருளிய நெறிமுறைகளைப் பற்றி நின்று நல் அறம் காக்கும் இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இனிய மிலாது நபி நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன். ●

# புரியவில்லை

பூர்வாஷாட நட்சத்திரம் இப்பொழுதுதான் உதித்திருக்கிறது. தேவகி அம்மாவிற்கு நிலைகொள்ளவில்லை. ஒரே கவலை. நாளை பொழுது விடிவதற்குள் செய்வதற்கு இன்னமும் நூறு காரியங்கள் இருக்கின்றன. உதவி செய்ய காரியஸ்தர் ராமன் நாயரும், வேலைக்காரி சாரதாவும் இருக்கிறார்கள் என்பதென்னவோ

இன்று காலையில் துபாயிலிருந்து உண்ணி போன் செய்தான். ஓணம் பண்டிகையின்போது என் பிள்ளைகள் எல்லோரும் என்னுடன் இருப்பார்கள் என்று உறுதியாகிவிட்டது. அப்பு, சரளாவும் குழந்தைகளுடனும், கேஷி, பத்மினி தங்கள் குழந்தைகளுடனும் வரப்போகிறார்கள் என்று முன்னரே கடிதம் போட்டிருக்கிறார்கள். உண்ணி வருவதுதான் சந்தேகமாக

புடவைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு திரிந்த குட்டி மகன் அல்லவா அவன்! அவன் பெரியவனானது, படித்து, கடல் கடந்து வேலைக்குப் போனது, திருமணம் செய்து கொண்டது எல்லாம் கனவு போலிருக்கிறது. உண்ணி பக்கத்தில் இல்லாவிட்டால் அம்மாவிற்கு ஓணப் பண்டிகையோ, பிறந்தநாளோ கொஞ்சமும் ரசிக்காது என்று பெரிய பையன்கள் இருவரும் சொல்வதுண்டு. ஹூம்...



உண்மைதான், ஆனாலும் தானே முன் நின்று கவனித்தாக வரவேண்டுமே. வரப்போகும், பிள்ளைகள், நாட்டுப் பெண்கள், பேரக் குழந்தைகளுக்கு எந்தவிதமான சிரமம் இருக்கக்கூடாதல்லவா! இதுவரையிலும் எந்தக் குறையும் இருக்கும்படியாக தான் விட்டதில்லையே!

இருந்தது. அவன் மனைவிக்கு இது மூன்றாம் மாதம். அதனால் டாக்டர் பிரயாணம் செய்யக்கூடாது என்று கூறியிருக்கிறாராம். இதனால் தான் தாங்கள் நிச்சயமாக வருவோம் என்று முன்கூட்டியே அவர்களால் தெரிவிக்க முடியவில்லை. மற்ற இரண்டு பிள்ளைகளும் வரும்போது உண்ணி மட்டுமே வராமலிருப்பது அவளுக்கு என்னவோ போலிருந்தது. நேற்று வரை அவளது

கமலாவின் அண்ணன் என்.ஓ.சி. எடுத்துக்கொண்டு வேலைக்காக வெளிநாடு சென்றதில் பிரச்சனை ஒருவாறு தீர்ந்துவிட்டது. இனி உண்ணி நிம்மதியாய் வீட்டிற்கு வரலாம். வரபோகிறான். அவனுக்கு, இந்த வீடு, இந்த கிராமம், ஓணப் பண்டிகை, சித்திரை விஷு, கோவில் உற்சவங்கள் எல்லாமே ரொம்பவும் பிடிக்கும். சின்ன வயதிலும் அப்படித்தான். இன்றும்

அப்படித்தான். இருந்தாலும் திருமணம் வரைதான் இதெல்லாம் என்று சொல்லலாம். இப்பொழுதெல்லாம் வருடத்திற்கொருமுறை ஏதாவதொரு விசேஷ தினத்தன்று வருகிறான். வந்தால் பிறகு என்ன ? நண்பர்களுடன் கொண்டாட்டம் தான். அரட்டையும் கேலியும் கிண்டலும் உறங்கிக் கொண்டிருந்த வீடு விழித்துக் கொண்டுவிடும். ஒரே கலகலப்பு தான்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த வழக்கம் சற்று மாறியுள்ளது என்பது தெரிகிறது. இதற்காக நான் யாரையும் குற்றம் சொல்லப்போவதில்லை. பிள்ளைகளுக்கு திருமணமாகி குடும்பஸ்தராகி விட்டார்கள் என்பதை மறந்துவிடக்கூடாதல்லவா ! அவர்களுக்கு எத்தனையோ பிரச்சனைகள் இருக்கும். வயது காலத்தில் என்னைத் தனியாக விட்டு விட்டுப் போக உண்ணிக்கு மனமில்லை. அவனுடைய வற்புறுத்தலால்தான் நான் அவனுக்கு மனைவியைத் தேடினேன். காசு பணம் ஒரு பெரிய விஷயம் அல்ல, வரப் போகிற மருமகள் எனக்கு உதவியாக, என்னை கவனித்துப் பணிவிடைகள் செய்பவளாக இருக்க வேண்டும் என்பதுதான் உண்ணியின் விருப்பமாக இருந்தது. ஆனால் விடுமுறையில்அவன் துபாய் திரும்பியதும் மருமகப் பெண் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டுவிட்டாள். பிறகென்ன ? நானே பணம் செலவழித்து, டிக்கட் வாங்கி, அவளை உண்ணியிடம் அனுப்பி வைத்தேன். ஏனென்றால் என்னால் அவளுடைய துயரம், அலட்சியம், பட்டும் படாததுமான போக்கைப் பார்த்து சகித்துக் கொண்டிருக்க இயலவில்லை. அவள் புறப்பட்டுப் போய் மூன்று வருஷமாகிறது. இதோ,இருவருமாய் இப்பொழுதுதான் முதன் முறையாக வீட்டிற்கு வரப் போகிறார்கள்.

மூத்தவன் அப்பு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறைதான் வருவான். அமெரிக்காவிலிருந்து வந்து போக அவனுக்கும் குடும்பத்தினருக்கும் நிறைய செலவாகிறது. தன் தம்பிகளிடம் ஐந்து வருடங்களுக்கொருமுறை ஓணம் பண்டிகையின்போது நானும் வருகிறேன். நீங்களும் வாருங்கள். எல்லோரும் ஒன்றாக இருக்கலாம் என்று கூறுவான். ஓணம் பண்டிகை என்பதால் மட்டுமல்ல, சிராவண மாதத்தில்“கனிஷ்டா” வில் என் பிறந்த தினம் வருகிறது. சரியாக இன்னும் மூன்று நாட்களுக்குப் பிறகு எனக்கு எழுபது வயதாகிவிடும்– என நினைத்தவாறே கடந்தகால நினைவுகளில் தேவகி ஆழ்ந்து போனாள். அவருடைய அந்த உருவம் கண் முன்னே நிழலாடியது. வீட்டின் வெளிமுற்றத்தில், தோட்டத்தில் எப்பொழுதும் ஏதாவதொரு வேலையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இருப்பதுதான் அவரது இயல்பு. கறுப்பு நிறம்தான். ஆனால் கட்டுமஸ்தான உடல். தேவு.... தேவு என்று எதற்கெடுத்தாலும் அவளைக் கூப்பிட்டுக் கொண்டேயிருப்பார். சின்னச்சின்ன மூன்று குழந்தைகள். ஆனாலும் நான் எதற்கும் தயங்க மாட்டேன். ஒன்றை இடுப்பிலும், ஒன்றைக் கையிலும் பிடித்துக் கொண்டு அவருக்கு உதவி செய்யப் போய்விடுவேன். இருவருமாய் பாடுபட்டு, வியர்வை சிந்தி உழைத்தோம். ஹூம் அது ஒரு காலம்.

எப்படியெல்லாம் பாடுபட்டு, உழைத்து, இந்த சொத்துக்களையெல்லாம் சம்பாதித்து சேர்த்து வைத்தோம். இடிந்தும் பாழ்பட்டும் கிடந்த, இந்த மூதாதையரின் வீட்டை இடித்து, மாடி வீடாக, பங்களா மாதிரிக் கட்டினோம். தென்னந்தோப்பு வாங்கினோம். அந்த பிராமண ஜமீன்தாரின் நிலத்தை குத்தகைக்குப் பிடித்துப் பயிரிட்டோம். அவர் நல்ல உழைப்பாளி ஆயிற்றே. ஒரு நாளில் ஒரு மணிநேரம் கூட ஓய்வெடுக்கமாட்டார்.

ஒருநாள் வயலிலிருந்து திரும்பியவர் வெட்டுண்ட வாழைமரம் போலல்லவா வாசற்படியில் சாய்ந்துவிட்டார். இந்நிலையிலும் நான் மனம் சோர்ந்துவிடவில்லை. அவர் ஒப்படைத்துவிட்டுப்போன பிள்ளைகளைத் தவிர இந்த உலகில் எனக்கு யார் இருந்தார்கள் ? அவர்களுக்கும் என்னை விட்டால் ஒருவருமில்லை. பிள்ளைகளை வளர்த்து பெரியவர்களாக்கினேன். படிக்க வைத்தேன். பணத்திற்குக் கஷ்டப்படத் தேவையில்லாமல், அவர் சொத்து சேர்த்து வைத்துவிட்டுப் போயிருந்தார். அவர் இல்லையே என்ற குறையைத் தவிர வேறெந்தக் குறையும் இருக்கவில்லை.


இன்றுவரை நானும் கௌரவமாய் வீடு வாசல் தோட்டம் நிலம் என கவனித்துக்கொண்டு வாழ்ந்து வருகிறேன். அன்றும், இன்றும் எல்லோர் நடுவிலும் தலை நிமிர்ந்து தான் நடந்துபோகிறேன். ‘பெரிய வீட்டு தேவகி அம்மா’– என்ற பெயரின் பெருமையும், கௌரவமும் எந்த விதத்திலும் இன்றுவரை பாதிக்கப்படாமல்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அன்றிருந்த மரியாதை இன்றுவரை இருக்கிறது. மாடிவீடு, தென்னந்தோப்பு, நெல் வயல்களின் எஜமானி நான்.

நினைவுகளில் ஏத்தனை நேரம் கழிந்ததோ, அடடா! நேரமாகிவிட்டதே என நினைத்தவளாய்– சாரதா! ஓ சாரதா! என்று உரக்க அழைத்தவண்ணம் நேராய் சமையல் அறைக்குச் சென்றேன். நான் போய் எதிரில் நின்ற பின்தான் நான் கூப்பிட்டது அவள் காதில் விழுகிறது. நல்லவேளை அடுப்பை மூட்டி இருக்கிறாள். இதற்குள் முற்றத்தைப் பெருக்கி வராந்தாவையும் துடைத்திருக்கலாம். நான் சொல்கிறபடி இவள் கேட்டால்தானே. சொன்னபடி எதுவும் மளமளவென்று செய்வதே

இல்லை. இவளை நன்றாய் நூறு வார்த்தை அதட்டி மிரட்டி வைக்க வேண்டும். பிள்ளைகள் வந்துவிட்டுப் போகட்டும். பிறகு இவளை கவனித்தாக வேண்டும். மசமசவென்று என்ன வேலை செய்கிறாள். இப்பொழுது ஏதாவது சொன்னால் அவர்களுக்கு முன்னால் முகத்தைத் தூக்கிக்கொண்டு நிற்பாள். பாவம், பிள்ளைகளை எதற்காக தொந்தரவுபடுத்தவேண்டும். வேலைக் காரர்கள் விஷயத்தில் நான் மிகவும் கண்டிப்பாய் இருக்கிறேன் என்று ஒவ்வொருமுறை அவர்கள் வரும்போதும் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்.

ஹ¨ம் – அப்புவிற்கும் சரளாவிற்கும் மேல் மாடி அறையைத் தரவேண்டும். அவர்களுக்கு இத்தனை பெரிய வீட்டில் அந்த ஒரு அறைதான் பிடிக்கிறது. இங்குதான் கொஞ்சம் பிரைவசி உண்டு. கீழே எல்லோரும் எப்பொழுதும் வந்துபோய்க்கொண்டு இருப்பார்கள். ரேகா, ரஷிம் இரண்டு பேரையும் என்கூட வைத்துக்கொள்ளப் போகிறேன். வீடு சத்திரம் போலாகிவிட்டது. இதில் தனிமை ஏது? அந்த இரண்டு பேத்திகளுக்கும் என் அறை பிடிப்பதில்லை. பழைய வாசனை வருகிறதாம். போனமுறை வந்திருந்த போது அந்த இரண்டும் தன் அப்பாவிடம் இங்கிலீஷில் சொன்னது என் காதிலும் விழுந்தது. சரி உங்களுடனேயே மாடி அறையில் இருக்கட்டும் என்று நான் சொன்னதும் அப்பு வேண்டாம் எனக் கூறித் தடுத்துவிட்டான். அமெரிக்காவில் குழந்தைகளை அப்பா, அம்மாவுடன் படுக்க வைத்துக் கொள்ள மாட்டார்களாம்.... அப்புறம் கேசியின் குடும்பம் இருக்கிறது. படுப்பது பற்றியெல்லாம் அவர்கள் விசேஷமாக எதையும் வற்புறுத்துவது இல்லை. பம்பாயில் ஜன சந்தடியும்,நெருக்கமும் நிறைந்த இடத்தில் ஒரு பெரிய வீட்டின், நாலாவது மாடியில் இரண்டே அறைகளில் அவர்களின் குடித்தனம் நடக்கிறது. அவர்களுக்குக் கீழேயுள்ள பெரிய ஹாலைக் கொடுத்தாலே போதும். அப்பாடா என்றிருப்பார்கள். ஹ¨ம்.. ஆனாலும் கேசியின் மனைவி பத்மினி இருக்கிறாளே அவளுக்கும் தன் மூத்த ஓர்படி மாதிரி– இந்தப் பெரிய வீட்டின் வசதிகளும் சௌகரியங்களும் திருப்தி அளிப்பதில்லை. அவளுக்கும் தனி அறை வேண்டுமென்றிருக்கும். அவர் உயிருடன் இருந்த போதே எங்களுடைய படுக்கை அறையை அவர்களுக்கு ஒழித்துவிடும்படிதான் சொன்னார். ஆனால் நான் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவர் போனபிறகு.... அந்த அறையைப் பெருக்கி மெழுகி, விளக்கேற்றி அப்படியே வைத்திருக்கிறேன். உபயோகப்படுத்துவதில்லை.

உண்ணிக்கென்ன! வராந்தாவில் கிடக்கும் சோபாவே போதும். வந்தால் மட்டுமென்ன! வீட்டில் இருக்க அவனுக்கு நேரமெங்கே இருக்கிறது! பழைய நண்பர்களை, சகாக்களைத் தேடிக்கொண்டு போய்விடுவான். கோவில் குளத்தங்கரை, மண்டபம்... என அவன் பொழுது கரைந்துவிடும்.



அவன் வராமல் நான் சாப்பிடுவதில்லை. காத்திருக்கிறேன் என்பதால் நடுநிசிக்குள் கட்டாயம் வீடு வந்து சேர்ந்து விடுவான்.

தேவகி அறைகளைப் பெருக்கி சுத்தம் செய்து, படுக்கை, தலையணை, விரிப்புகளைத் தட்டி, வெயிலில் போட்டு கட்டில்களில் விரிக்கும்படி சாரதாவிற்கு உத்தரவிட்டாள். எதை எதை எங்கு போட வேண்டும் என்று கூறித் திட்டமிட்டாள். ஒரு வேலையாயிற்று. இனி சாப்பாடு, சமையலைப்பற்றிக் கவனிக்க வேண்டும்.

பிள்ளைகளின் ருசியே இப்பொழுது மாறிவிட்டது. முன்னைப்போல, உப்பும், புளிப்பும், காரமுமாய் எதுவும் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. வெறும் சாம்பார், அதிகம் புளிப்பு இல்லாத காளன், கொஞ்சம் உப்பும் காரமும் கூடிய ஊறுகாய், இப்படி ஏதாவது சமைத்தாலும் அவர்களுக்கு ரசிப்பதில்லை. மீனும், மாமிசமும் இல்லாமல் ஒரு வேளை சாப்பாடு கூட தொண்டையில் இறங்குவதில்லை. ஆனால் ஓணம் மாதிரி பண்டிகை பருவ நாட்களில் இதெல்லாம் எப்படி... சீச்சீ!... பண்டிகையன்று, வழக்கமான பண்டிகைச் சமையல் தான் செய்யப்போகிறேன். இந்த சீர், எல்லாம் வேண்டாம். குழந்தைகளுக்கு வெல்லம் என்றால் நிரம்பப் பிடிக்கும். வெல்லப் பாயசம் பண்ணப் போகிறேன். 'அவர்' காலத்திலிருந்தே இருந்துவரும் கிரமத்தை நான் விடப்போவதில்லை. நம் வயலில் விளைந்த அரிசி, தேங்காயப் பாலும் கூட்டி, பக்கத்து மனைக்காரன் அவநாச்சனுடைய சுத்தமான வெல்லத்தைப் போட்டுத்தான் அவருக்கு பாயசம் செய்ய வேணடும். எல்லோரும் ருசித்து சாப்பிடுவார்கள். அந்த வெல்லப் பாயசத்தை உறிஞ்சி சாப்பிடுகையில் அவரது முகம் என்னமாய் மலர்ந்து போகும், திருப்தி தெரியும் அந்த முகத்தில், ஹூம்... இதையெல்லாம் ஏன் நினைக்கிறேன், நினைக்காமல்தான் இருக்க வேண்டும்.

அப்பு இன்று மத்தியானமே பிளேனில் வந்துவிடுவான் என்றாலும் இன்றைய ராத்திரிப்பொழுது சரளாவின் வீட்டில்தான் கழியும். அமெரிக்காவிலிருந்து கொண்டுவரும் விசேஷமான சாமான்களையெல்லாம் பங்கீடு செய்ய வேண்டாமா? அங்குதான் அதெல்லாம் நடக்கும். அவளுடைய பக்கத்து வீட்டுக்காரி அந்த ரேவதி டீச்சர் முன்பு நம் வீட்டில் குடியிருந்தாளே அவள் தான் இதையெல்லாம் சொன்னாள். எனக்கு ஓணத்தின் போது வஸ்திரம் கொடுக்க அப்பு மறந்ததேயில்லை. இருந்தாலும் சரளா தன் பிறந்த வீட்டுக்காரர்களுக்கு என்னென்னவோ, விலையுயர்ந்த சாமான்கள் எல்லாம் கொண்டுவந்து தருகிறாள் என்பது காதில் வீழ்ந்ததும் – நமக்கும் ஒரு மகள் இல்லையே என்று தோன்றுகிறது. சாகும் வரை அவருக்கு, நமக்கொரு பெண் குட்டியில்லையே என்ற குறையுண்டு. அப்பொழு தெல்லாம் எனக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று பெருமிதப்பட்டுக் கொள்வேன். இப்பொழுது மட்டும் இந்த எண்ணம் ஏன் வருகிறது? மனம் சஞ்சலப்பட்டுப் போய்விட்டதா என்ன?

எல்லா ஏற்பாடுகளையும் கவனித்து முடிக்க சந்தியாகாலம் ஆகிவிட்டது. மாடியிலிருந்த படுக்கை அறையில் பெரிய வாளியில் ஜலம் நிரப்பிக்கொண்டு போய் வைக்கச் சொன்னேன்.காலை டிபனுக்கு வீட்டிற்கு வந்துவிடுவதாக அப்பு எழுதியிருக்கிறான். அவனும் சரளாவும் குளிக்க, துவைக்க சிரமம் இல்லாமல் இருக்க வேண்டாமா! இதற்குத் தான் குளியல் அறையில் தண்ணீர் நிரப்பச் சொல்லுகிறேன்.

படுக்கப் போகுமுன் தேவகி அம்மாள் ஒருமுறை நின்று நிதானித்து எல்லாம் சரியாக, ஏற்பாடாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டுத்தான் படுக்கச் சென்றாள்.


சரியாய் ஐந்து வருடங்களுக்குப் பிறகு மூன்று பிள்ளைகளும் ஒன்றாக வீட்டில் இருக்கப் போகிறார்கள். நான் உயிரோடு இருக்கும்போது அவர்களுக்கு இங்கே எந்தக் குறையும் நேரக்கூடாது. கூடிக் களிக்கட்டுமே! அந்த ரேவதி டீச்சர் – "தேவகி அம்மா! உங்கள் மருமகள்மார்கள் ரொம்பவும் கொடுத்து வைத்தவர்கள். புக்ககத்தில் அவர்களுக்கு எந்தக் குறையும் இல்லை. சிரமமோ, கஷ்டமோ கிடையாது. எல்லாம் பார்த்துப் பார்த்து செய்து வைக்கிறீர்கள். சுகமாய் இளைப்பாற வேண்டும். அவ்வளவுதானே. ஆனால் தேவகி அம்மா! அவர்களுக்கு இதன் அருமை எங்கே தெரிகிறது! என்னுடைய மாமியார் இருக்கிறாரே! ஒவ்வொரு சனிக்கிழமையும் நான் வரும் வழியைப் பார்த்துக் கொண்டிருப்பார். நான் வீட்டிற்குள் காலடி வைத்ததுமே தன் பெண்ணின் வீட்டிற்குப் புறப்பட்டுப் போய்விடுவார். என் புருஷன் தன் அம்மாவிற்கு வாரத்தில் இரண்டு நாள் விடுமுறை வேண்டும் என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார். வாரத்தில் ஐந்து நாட்கள் அவர் பெயருக்குத்தான் சமையல் சாப்பாடு என்று ஏதோ செய்கிறார். குடித்தனம் என்று எதையும் அக்கறையுடன் கவனிப்பதில்லை. வீட்டில் எல்லா வேலையும் அப்படி அப்படியே கிடக்கும். நான்தான் பார்த்துச் செய்ய வேண்டும். ஒரு மூச்சுப்பிடித்து காரியத்தில் இறங்கினால், திங்கட்கிழமை இங்கு வந்துதான் அப்பாடா என்று மூச்சு விடுகிறேன்" என்பாள்.

ரேவதி டீச்சர் சொல்வது சரிதான். நான் இந்த வீட்டில் ஒருநாள் இல்லாவிட்டால் தெரியும். அவர்களுக்கு என் அருமை என்னவென்று இப்பொழுது புரியாது. நானில்லாவிட்டால் இந்தப் பிள்ளைகளும், மருமகள்மாரும் என்ன தான் செய்வார்களோ! ஈசுவரா! என்றெல்லாம் எண்ணி எண்ணி மனத்திற்குள் மாய்ந்தவாறே தேவகி புரண்டு படுத்தாள். உறக்கமே வரவில்லை.

கண்ணயர்ந்தபோது விடிவேளை நெருங்கிவிட்டது. அப்பொழுதுதான் அவள் ஒரு விசித்திரமான கனவு கண்டாள்.

விடிந்து கொண்டிருக்கும் வேளை, இன்று ராமன்நாயர் சீக்கிரமாகவே வந்துவிட்டான். அவன் பின்னாலேயே சாரதாவும் வந்தாகிவிட்டது. பிள்ளைகள் வரப்போகிறார்களே என்று இருவருமே சீக்கிரம் வந்துவிட்டார்கள் போலிருக்கிறது. நேற்று நானே – காலையில் சீக்கிரம் வந்துவிடுங்கள் என்று கூறியிருந்தேன். தினம்போல் வராந்தா கதவைத் தட்டாமல் ராமன்நாயர் சாவியால் கதவைத் திறக்க முயற்சிக்கிறான். அவனுக்கென்ன வந்துவிட்டது ? திமிரா ? கதவைத் திறக்கிறானே! அவன் மட்டுமல்ல அந்த சாரதாவும் கூட இருக்கிறாள். இதென்ன ? நானும் அல்லவா வெளியே நிற்கிறேன். நான் வீட்டில் இல்லையா ? இந்த ஐம்பது வருஷங்களில் இப்படி ஒருநாள் கூட நடந்தது இல்லையே! எங்கே போனாலும் இரவுக்குள் வீட்டிற்குத் திரும்பிவிடுவேன். திரும்பி வந்துவிட வேண்டும் என்பது அவருடைய நியமம். அதாவது விருப்பம். அவர் இறந்த பிறகு நான் இந்த நியமத்தை மீறுவதில்லை. இப்பொழுது இது எப்படி நேர்ந்தது ? என்னை சொல்லாமல் கொள்ளாமல் வீட்டிலிருந்து வெளியேற்றிவிட்டார்களா ? ஐயோ! இதென்ன ? நான் எப்படி இப்படி வெளியே நிற்கிறேன். ஐயோ!... என் நாடி நரம்பெல்லாம் தளர்ந்துவிட்டது. முதலில் வியப்பாக இருந்தது கவலையாக மாறிவிட்டது. ராமன் நாயர் கதவைத் திறந்ததும் நான் அவனைத் தொடர்ந்து வீட்டிற்குள் சென்றேன்.

ராமன்நாயர் சாரதாவிற்கு ஏதேதோ உத்தரவிட்டுக் கொண்டிருந்தான். திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் வடக்கு திக்கைப் பார்த்து – "சாரதா! இதோ பார்! முதலில் அம்மாவின் திண்ணையை அலம்பி அங்கு விளக்கு ஏற்றிவை. மற்ற வேலைகளையெல்லாம் பிறகு பார்க்கலாம்" என்றான். என்ன இது! அம்மாவின் திண்ணையா! அப்பொழுதுதான் நான் இறந்துவிட்டேன் என்பது புரிந்தது. பகவானே பிள்ளைகள் வந்தால் அவர்களை யார் கவனிப்பார்கள்! அவர்களுக்கு வேண்டியதை யெல்லாம் யார் செய்வார்கள் ? நான்தான் உயிரோடு இல்லையே! என்னால் என்ன செய்யமுடியும். இந்த சாரதா ஏன் கல்லுபோல் அசையாமல் நிற்கிறாள். என்ன வந்துவிட்டது இவளுக்கு ? ராமன்நாயர் சொன்னது இவள் காதில் விழவில்லையா என்ன ? ராமன்நாயர் கேட்டான் – அடியே சாரதா! ஏனிப்படி மரம்மாதிரி நிற்கிறாய் ?



சாரதா உதட்டைச் சுழித்துக்கொண்டு முணுமுணுத்தாள்– "ஹூம். விளக்கு ஏற்றுகிறேன். அந்தக் கிழவி இருந்தவரையில் என்னை மூச்சு விடக்கூட மாட்டாள். விரட்டிக்கொண்டே இருப்பாள். ஒவ்வொரு காசாக, சேர்த்து, சேர்த்து, போன வருஷம் ஓணம் பண்டிகைக்கு காலுக்குக் கொலுசு வாங்கிப் போட்டுக்கொண்டேன். ஒரு நாள்கூட கொலுசு போட்டுக்கொண்டு என்னை இங்கே நடமாட விடவில்லை அந்தக் கிழவி. வேலைக்காரியெல்லாம் கொலுசு போட்டுக்கொண்டு இங்கே வேலை செய்யக்கூடாதாம்."

ஹூம் – என்ன நன்றிகெட்டதனம் இந்த வேலைக்காரர்களுக்கு! கொலுசுக்கு

பணம் போதவில்லை என்றதும் நான் தானே சுளையாக முப்பது ரூபாய் தூக்கிக் கொடுத்தேன். இன்றுவரை அதைத் திருப்பிக் கொடுக்கும் பேச்சையே காணோம். அந்த சிறுக்கி வீட்டிற்குள் கொலுசு போட்டுக்கொண்டு நடமாடக் கூடாதென்று கண்டிப்பாகச் சொன்னேன். காரணம் தெரியுமா? காலையில் பால் கறக்க வரும் மாட்டுக்காரனிலிருந்து, மாலையில் தென்னையிலிருந்து கள் இறக்க வரும் மரமேறி வரை எல்லோரிடமும் சீண்டலும் சிங்காரமுமாய் இருப்பாள் அந்த சிறுக்கி. இதுமட்டுமா? உண்ணி– வயசுப் பிள்ளையும் வீட்டில் இருப்பான்.

பெண்களைப் பற்றிய உண்ணியின் பலவீனமும் எனக்குத் தெரிந்ததுதானே! அவள்மீதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டும் அல்லவா? ஹூம்... இந்த வேலைக்காரிகளிடம் நன்றியையும் அன்பையும் எதிர்பார்ப்பது அதுவும் இந்தக் காலத்தில்... வீண்தான் என்று அப்பு அடிக்கடி சொல்லுவானே!

அந்த ராமன் நாயர் தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டு சொல்லுகிறான்– "அடி முட்டாள் பெண்ணே! அதெல்லாம் கடந்துபோன விஷயம். இனி இந்தக் கிழவியின் பிள்ளைகளை அல்லவா நாம் சந்தோஷப் படுத்த வேண்டும். அப்பத்தான் அவர்கள் போகும் போது, பத்து ஐம்பது சந்தோஷமாய் கொடுத்துவிட்டுப் போவார்கள். கிழவி இருந்தால் கொடுக்கவிடமாட்டாள். நல்லவேளை சனி ஒழிந்தது.!"

ஐயோ – என்ன இது? ராமன் நாயரா இப்படிப் பேசுகிறான்! என்பால் இத்தனை வெறுப்புடன், எவ்வளவு இகழ்ச்சியாகப் பேசுகிறான்! நான் அவனை சம்பளத்திற்கு வைத்திருக்கும் வேலைக்காரன்போல் ஒருக்காலும் நடத்தியதேயில்லையே! அவனது மூன்று பெண்களின் கல்யாணத்தின் போதும், அவன் புது வீடு கட்டிய போதும் நான் எவ்வளவு தாராளமாய் என் கையைவிட்டு பணம் செலவழித்தேன் என்பதை யெல்லாம் மறந்துவிட்டானா...? என் மனம் வெதும்பியது. இந்த ராமன் நாயர் கூறுவதிலும் உண்மை யில்லாமலில்லை. என் பிள்ளைகள் வீண்செலவு செய்வதைத் தடுப்பது என் கடமையல்லவா? ராமன் நாயருக்கு இதைப் புரிந்துகொள்ள புத்தி இல்லையா என்ன? நான் இல்லாமல் போவது தனது அதிர்ஷ்டம் என்பதுபோல் பேசுகிறானே!

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம். என் சமாதி – அதுதான் திண்ணையை அலம்பிவிட்டுவிட்டு சாரதா வாளியை எடுத்துக்கொண்டு கிணற்றுப் பக்கம் ஓடுகிறாள்.

என்ன இது? வெளி வராந்தாவில் தண்ணீர் வைக்கவில்லையா? வெகுதூரப் பயணம் செய்துவிட்டு வருகிறார்கள். கை கால் கழுவிக் கொண்டுதானே உள்ளே வரவேண்டும். இந்த சாரதாவிற்கு இது தெரியவேண்டாமா! புத்தி மட்டு அவளுக்கு.

நான் வராந்தாவில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். மௌனமாய்த்தான்.

அப்பு குடும்பம் அல்ல. கேசி, பத்மினி, குழந்தைகளும் வந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் பெட்டி படுக்கைகளோடு ராமன் நாயர் நிற்கிறான். இரண்டுநாள் பயணத்தின் களைப்பும், அழுக்கும், குழந்தை நிறம் மங்கித் தெரிகிறார்கள்.

வீட்டு வாசலுக்கு வந்தபின் கேசி கணநேரம் மௌனமாய் நிற்கிறான். கண்களில் துக்கத்தின் சாயலா? என் நினைவினாலோ! பாவம் கேசி! எனது மறைவு அவனுக்கு துக்கத்தைத் தந்திருக்கும். அடுத்த கணம் பத்மினியின் ஏளனம் நிறைந்த குரல். தன் காலில் தண்ணீர் விடும் சாரதாவை நோக்கி "நீ போ அந்தப் பக்கம்! இனி செருப்பை அவிழ்த்துவிட்டு யார் காலை அலம்பிக் கொள்ளப்போகிறார்கள்? யாருக்கு பயப்படணும்? இனி இந்த வீட்டில் என் சௌகரியப்படி இருக்கலாம்".

மருமகள் தனக்கு இனி முழு நிம்மதியும் சுதந்திரமும் கிடைத்துவிட்டதை உணர்த்துகிறாள்போலும், அப்படியென்றால் நான் உயிருடன் இருந்தது அவளுக்கு தடையாக, உறுத்தலாக இருந்ததோ! என் மகள் கேசி, அவள் பேசுவதைக் கேட்ட பின்னும் பேசாமலிருக்கிறானே! மறுத்து ஏதும் சொல்லமாட்டானோ! அவனும் அவளுடன் சேர்ந்தல்லவா சிரிக்கிறான். வெளியேயுள்ள அழுக்கும், அசுத்தமும் கூடிய செருப்பை அப்படியே – சுத்தமான வீட்டிற்குள் போட்டுக் கொண்டு வருவது சரியல்ல, வரக்கூடாது என்ற அளவுக்குப் புரிந்துகொள்ளும் புத்தி கிடையாதா? இன்றுவரை... இவர்களுடைய சுகம் சந்தோஷத்தைப்பற்றித்தான் என் எண்ணம், செய்கை, கவலையெல்லாம் இருந்தது... இனி! மனம் பாரமாய் கனத்தது. அவர்களுடன் கூட வீட்டில் நுழைய, காலடி எடுத்து வைக்க மனம் வரவில்லை. எல்லாம் அவர்கள் இஷ்டம்போல் இருக்கட்டும், செய்யட்டும் எனக்கென்ன?

என் மகள் கேசி, தன் மனைவியிடம் ஏதோ கிசுகிசுக்கிறானே! எனக்குத் தெளிவாகக் கேட்கவில்லை – சொல்லுகிறான் – "நீ சாரதாவிடம் சொல்லு, அப்பாவின் அறையை நமக்காக திறந்துவிடச் சொல்லு, பம்பாயில் இரண்டு அறைக்குள் குழந்தை குட்டிகளுடன் என்ன தாம்பத்திய சுகம்! இங்கு வந்தாலும் அதேகதிதான். நமக்கென்று அறையில்லை... இந்தத் தடவையாவது கொஞ்சம் பிரைவசியை... தனிமையின் ஆனந்தத்தை அனுபவிப்போம்!"

என்ன இது! என் பிள்ளையா! என் கேசியா பேசுகிறான்! அவன் மனதிற்குள் இத்தனை சுயநலமா ஒளிந்துகொண்டிருந்தது... ஆனால்

ஒருவிதத்தில் அவன் சொல்வதிலும் உண்மையிருக்கிறது. எத்தனையோ வருடங்களுக்கு ஒரு முறை அவன் வீட்டிற்கு வருகிறான். அவனுக்குக் கிடைக்காத இந்த சௌகரியத்தை, அவன் விரும்பும் வசதியை நான் செய்து கொடுத்திருக்க முடியும். கொடுத்திருக்கலாம். இருந்தாலும், நான் போய்விட்டேனே என்று வருத்தப்படுவதற்குப் பதிலாக என் பிள்ளை... இதற்குமேல் அவர்கள் பேசியது எதுவும் காதில் விழவில்லை. காதை மூடிக்கொண்டு வராந்தா சுவற்றில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்துவிட்டேன்.

எத்தனை நேரம் இப்படி உட்கார்ந்திருந்தேனோ தெரியவில்லை.

வாசலில் இன்னொரு கார் வந்து நின்றது. அப்புதான் வந்திருக்கிறான். பாண்ட், ஷர்ட் அணிந்த இன்னும் மூன்று பேர் அவனுடனிருந்தனர். அப்படியென்றால், சரளா, இந்து, பிந்து வரவில்லையா ? நான் இல்லை என்பதாலா ?

சாப்பிடும்போது அவர்கள் கீழே இறங்கி வருவார்கள். நான் இல்லையே... சாப்பாடு யார் பரிமாறி கவனித்துக் கொள்வார்கள் ? சிரமமாக இருக்குமல்லவா! அதனால் தான்... இல்லை... அப்புவுடன் வந்திருப்பவர்களை ராமன் நாயருக்குத் தெரியும் போலிருக்கிறது. அவர்களுக்குள் குசலம் விசாரித்துக் கொள்கிறார்கள். சிரிக்கிறார்கள். கேசியும் பத்மினியும் படியிறங்கிச் சென்று அவர்களை வரவேற்கிறார்கள். இன்னமும் அவர்கள் யார் என்பது புரியவில்லையே! யாராக இருக்கும்! பத்மினி உரக்கச் சிரித்துக்கொண்டே "மதனி, குழந்தைகளின் டிரஸ் பிரமாதம்! அம்மா உயிரோடு இருந்தால் உங்களையெல்லாம் அடையாளம் தெரிந்துகொள்ள சிரமப்பட்டிருப்பார். மதனியார், பேத்திகள் யாரென்று அவருக்குத் தெரிந்திராது" என்றாள்.

இதென்ன இது! அப்புவுடன், பாண்ட் போட்டுக் கொண்டு, தலை மயிரை கழுத்தளவு வெட்டிக்கொண்டு வந்திருப்பவர்கள் சரளாவும், இந்துவும், பிந்துவுமா ? பகவானே! என்னைத் தாண்டிக்கொண்டு செல்லும் சரளா, பத்மினியிடம் தாழ்ந்த குரலில்– இந்த டிரஸ் எவ்வளவு வசதியாய், சௌகரியமாய் இருக்கிறது தெரியுமா ? அங்கெல்லாம் இந்த மாதிரி டிரஸ் போட்டுக்கொண்டு பழக்கமாகி விட்டது இதுவரை இங்கு வரும்போது வேஷத்தை மாற்றிக் கொண்டு விடுவோம். வருவதற்கு 6 மாதம் முன்பே தலை மயிரை வெட்டிக்கொள்ளமாட்டோம். தலை மயிரை வளர்த்திக் கொண்டு விடுவேன். புடவை கட்டுவேன். இங்கு வரும்போது பாரதீய பெண்மணியாக வராவிட்டால் அம்மா கோபித்துக்கொள்வார். கடுமையாக நாலு வார்த்தைச் சொல்லுவார். போனமுறை நான் நைட்டி, போட்டுக் கொண்டதற்குத்தான் எத்தனை எதிர்ப்பு ? கேசி, உண்ணியின் எதிரே நான் சற்றும் வெட்கமில்லாமல் திரிந்தேன் என்று கடிந்துகொண்டார். அப்பொழுதே நான் அப்புவிடம், இனிமேல் அம்மா இறந்தபிறகுதான் இனி நான் இந்தியா வருவேன் என்று சொல்லிவிட்டேன். என் பிறந்த வீட்டில் இப்படி அம்மா... அம்மா என்று மாய்ந்துபோகும் வழக்கமெல்லாம் கிடையாது... இந்த அப்புவின் போக்கெல்லாம் ரொம்பப் பழங்காலம். அதனால்தான்... பத்மினி, இந்த முறை எதற்காக வந்திருக்கிறோம் தெரியுமா ? பாகப் பிரிவினைக்குத்தான்".

இதற்குமேல் கேட்டுக்கொண்டிருக்க என்னால் இயலவில்லை. இரண்டு பெண்களுக்கு அம்மாவாக இருக்கும் சரளாவா இப்படிப் பேசுகிறாள். அவளால் எப்படி இப்படியெல்லாம் பேசமுடிகிறது ? நாளைக்கு தனக்கும் இம்மாதிரி நிலை ஏற்படும் என்று யோசித்துப் பார்க்கவில்லையா அவள்!

நைட்டி என்ற பெயரில் உள்ளாடையெல்லாம் தெரியும்படியான மெல்லிய உடையை அணிந்து கொண்டு அவள் காப்பி சாப்பிடக் கீழே வந்ததும் உண்மையிலேயே அதிர்ந்து போன நான் அவளைக் கண்டித்தேன். அப்பொழுது உண்ணிக்குத் திருமணமாகி இருக்கவில்லை. கட்டை பிரம்மச்சாரி அவன். கேசியும் தனியாகத்தான் வந்திருந்தான். மனைவியைக் கூட்டி வரவில்லை. மைத்துனர்களுக்கு தாய்க்குச் சமமான ஸ்தானத்தில் இருப்பவள் இப்படி ஆடை அணிந்து சங்கோஜமில்லாமல் வருவது சரியா ?... அன்று அவள் உடனே முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு மேலே போய் விட்டாள். ஆனால் நான் உயிரோடு இருக்கும் வரை மீண்டும் இந்த வீட்டிற்கு வரமாட்டேன் என்று அவள் இப்படி கடுமையானதொரு முடிவை எடுத்திருப்பாள் என்று நான் நினைத்துப் பார்த்ததில்லை. அப்படியென்றால் எனது மரணம் அவளுக்கொரு வெற்றி அவளுடைய பிரதிக்ஞை வென்றுவிட்டது. ஹூம். கொஞ்சமும் பாசமோ, அன்போ இல்லாத மருமக்கள்மார் களிடமிருந்து சீக்கிரமே விலகி தூரப் போய்விட வேண்டும்.

என் பேரன் பேத்தி இருக்கிறார்களே அவர்கள் உடம்பில் ஓடுவது என் ரத்தம்தானே! அவர்களுடன் என் அறையில் இருந்துகொள்கிறேன்.

ரேகாவும், ரஷிமும் மிகுந்த உற்சாகத்துடன் அறையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தனர். இரண்டுபேருமே ரொம்ப சந்தோஷமாக இருந்தனர். அவர்களது இங்கிலீஷ் பேச்சும், சிரிப்பும் புரியாவிட்டாலும் அவர்களை கண் நிறையப் பார்த்துக்கொண்டிருப்பதே சந்தோஷமாக இருந்தது. பெரியவளுக்கு பதினாலு வயதாகிறது. ஒருவரும் அவளைச் சின்னப் பெண் என்று கூற முடியாது. நல்ல வளர்த்தி, உற்றுப்பார்த்தால்... 'அவரைத்' தன் தாத்தாவைக்

கொண்டிருக்கிறாள் என்று தோன்றும். அகன்ற நெற்றி, கூர்மையான மூக்கு, தடிமனான உதடுகள், எல்லாம் அப்படியே அச்சு. அவள் உரக்கச் சிரித்தால் வலது பக்கத்து பற்கள் தெரியும். அதுகூட அவரைப் போலவேதான். எனக்குப் புல்லரித்தது. தூறலில் நனைவது போன்ற இனிமை.

அவர்களுக்குப் பால் கொடுக்க சாரதா வந்ததும் கொச்சை மலையாளத்தில் அவளுடன் அவர்கள் பேசியதைக் கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர்கள் இருவருக்கு மட்டும் அந்த அறை கிடைத்ததில் அவர்களுக்கு ரொம்ப ரொம்ப மகிழ்ச்சியாம். நல்லவேளை பாட்டியில்லை. என்னுடைய எண்ணை வாசனை, குறட்டை, இருமல்... அவர்களால் கொஞ்சம்கூட சகித்துக்கொள்ள முடியவில்லையாம்.

இனி இங்கே இருக்கக்கூடாது. என் பேத்தி மார்களுக்குக் கூட நான் இருப்பதில் மகிழ்ச்சி இல்லை. கனத்த உள்ளத்துடன் வெளியேறினேன்.

முற்றத்தில் அப்புவும் ராமன் நாயரும் நின்று கொண்டிருந்தனர். ராமன் நாயர் கொணர்ந்திருந்த சோடா பாட்டிலை அப்பு தன் கையில் வாங்கிக் கொண்டான். ராமன் நாயர் சிரித்துக் கொண்டே – "சாரே இனி நீங்கள் மாடிக்குப் போய் குடிக்க வேண்டாம். இங்கே – சாப்பாட்டறையிலேயே தாராளமாய் குடிக்கலாம். நான் என் வீட்டிலே கோழி சமைத்துக் கொண்டு வருகிறேன். இனி அம்மா பார்த்துவிடுவாளே என்ற தொந்தரவெல்லாம் இல்லை..." என்றான்.

அப்புவும் இதைக் கேட்டுச் சிரிக்கிறான் – ராமன்நாயர்! நீ சொன்ன பிறகுதான் இது நினைவு வருகிறது. சாப்பாடு பரிமாறச் சொல்லு. நான் மேலே போய் பாட்டிலை எடுத்து வருகிறேன். இது ரொம்ப நல்லதாகப் போயிற்று!

நான் வியப்பினால் கல்லாய் சமைந்து போனேன். "இது ரொம்ப நல்லதாகப் போயிற்று" எது? எனக்கு ஏதும் புரியவில்லை. நான் இறந்துபோனதா? அல்லது பகல் சாப்பாட்டுக்குப் பிறகு எல்லோரும் காண அமர்ந்து விஸ்கி குடிப்பதா! எது ரொம்ப நல்லதாகப் போயிற்று?"

அதிகமாக யோசிக்க என்னால் இயலவில்லை. மெதுவாக அடி எடுத்து வைத்து வராந்தாவிற்கு மீண்டும் வந்தேன். சுவற்றில் சாய்ந்தவாறு அமர்ந்து என்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டேன். இனி உண்ணி வரவேண்டியது ஒன்று தான் பாக்கி. இன்று அவன் கட்டாயம் வந்துவிடுவான். நாளைக்கு ஓணப் பண்டிகை அல்லவா! நான் இல்லாவிட்டாலும் அவன் வந்து விடுவான். அவனையும் ஒருமுறை கண்ணாறப் பார்த்துவிட்டு...

ஆனால் உண்ணிக்குப் பதிலாக தபால்காரன்தான் வந்தான். ராமன் நாயர் கடிதத்தை வாங்கிக்கொண்டு உள்ளே வந்ததும் அது உண்ணியின் கடிதமாகத் தானிருக்கும் என்று நினைத்தேன். என்ன எழுதி யிருக்கிறானோ என்று தெரிந்துகொள்ள ஒரே ஆவலாக இருந்தது. என்னவாக இருக்கும்! இந்த முறையும் கமலா நோய் படுக்கையில் படுத்துவிட்டாளா? என்ன உடம்போ! குழந்தை வேண்டும் என்று அவளுக்குத் தான் பாவம் எத்தனை ஆசை! எத்தனை வேண்டுதல்கள். பிரார்த்தனைகள் செய்துகொண்டிருக்கிறாள்.

உரக்கச் சிரிக்கும் சத்தம். அப்படியென்ன சிரித்துக் களிக்க அவன் எழுதியிருக்கிறான்! குழந்தைகள் பேசிக் கொள்வது காதில் வீழ்ந்தது... இதென்ன! கமலா மூன்று மாதம் கர்ப்பமாய் இருக்கிறாள் என்ற செய்தி பொய்யாம் இங்கு வந்தால் அம்மா தன்கூட கொஞ்ச நாட்கள் இருக்கும்படி கூறுவாளாம். இதிலிருந்து தப்பிக்கத்தான் உண்ணி அப்படி எழுதினானாம். இந்தத் தடவை ஊருக்கு வந்து வீட்டில் போர் அடித்துக் கொண்டிருப்பதைவிட அவர்கள் ஐரோப்பாவிற்கு சுற்றுலா போகிறார்களாம். ஹூம் – அம்மாவிற்கு இது எத்தகைய ஏமாற்றத்தை அளிக்கும். எத்தனை நிராசை அடைவாள்! என்ற குற்ற உணர்வுகூட அவர்களுக்குத் தோன்றவில்லையே!

மனத்தில் விரக்தி மெல்ல மெல்ல பரவியது. உண்ணிக்கு மட்டுமென்ன மற்ற எவருக்குமே குற்ற உணர்வு... தோன்றாமல் இருக்கட்டும். இனி இந்த வீட்டிலிருந்து எனக்கு முற்றிலும் அன்னியமாகப் போய்விட்ட இந்த வீட்டிலிருந்து பற்றுக்கள், தளைகள் ஏதுமின்றி நிர்விகாரமான மனத்துடன் நான் போய்விடுவேன்.

நான் எங்கே போய்விட்டேன்!... எனக்கு எதுவுமே புரியவில்லை. நான் கண் விழித்த போது பொழுது நன்றாக விடிந்துவிட்டிருந்தது. இருந்தாலும் நான் பரபரப்படையவில்லை. ஐந்து வருடங்களுக்கொரு முறை அந்த நாளை எதிர்பார்த்து காத்திருக்கிறேனோ அன்றைய தினத்தின் முக்கியத்துவத்தை நினைத்தோ, செய்யவேண்டியிருந்த நூறு காரியங்களைப் பற்றியோ பரபரப்படையாமல் மனம் சோர்ந்து போனவளாய் படுத்திருந்தேன். மிகவும் அசதியாக இருந்தது.

இந்த வீட்டிற்கு நான் இன்றியமையாதவளா? அல்லது வேண்டப்படாத, தேவையில்லாத ஒருத்தியா?

புரியவில்லை.

*– 'இந்தியப் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்' நூலிலிருந்து.*
*மலையாளச் சிறுகதை*
*மூல ஆசிரியை : சாராதோமஸ்*
*தமிழில் : சரஸ்வதி ராம்நாத்*
*வெளியீடு: வானதிப் பதிப்பகம், சென்னை–17*

• • •



# சுதந்திரப் போராட்ட தியாகிக்கு வீட்டு மனைப்பட்டா மற்றும் உதவித்தொகை

## – மனு கொடுத்த மறு நாளே வழங்கினார் முதல்வர்

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டத்தைச் சேர்ந்தவர் சுதந்திரப் போராட்டத் தியாகி திருமதி சி. செல்லம்மாள். கணவரை இழந்து வறுமையில் வாடுகின்ற இவர் 7.6.2001 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் தனது குடும்பச் சூழ்நிலையைத் தெரிவித்து, தனக்கு மத்திய அரசு வழங்குகின்ற சுதந்திரப் போராட்ட வீரர்க்கான ஒய்வூதியம் பெற்றுத் தர வேண்டும் என்றும், தனக்குக் குடியிருக்க வீட்டுமனை ஒன்று வேண்டும் என்றும் மனு ஒன்றினைக் கொடுத்திருந்தார்.

**மத்திய அரசின் ஒய்வூதியம்**

முதலமைச்சர் அவர்கள் அவரது மனுவை உடனடியாகப் பரிவோடு பரிசீலனை செய்து, திருமதி. சி. செல்லம்மாளின் கோரிக்கையின் அடிப்படையில், மத்திய அரசின் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் ஒய்வூதியம் பெற்றுத் தர உடன் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்கள்.

**வீட்டுமனை மற்றும் உதவித்தொகை**

மேலும் வயது முதிர்ந்த மனுதாரராகிய திருமதி சி.செல்லம்மாளின் கோரிக்கையை ஏற்று, வீட்டுமனைப் பட்டா ஒன்றினையும், ஏழ்மையான குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு கருணை அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ.5,000–மும் வழங்கி உத்தவிட்டார்கள். அதற்கான காசோலையை 8.6.2001 அன்று தலைமைச் செயலகத்தில் சுதந்திரப் போராட்டத் தியாகி திருமதி சி. செல்லம்மாளிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

**மனு கொடுத்த மறுநாளே நடவடிக்கை**

சுதந்திரப் போராட்ட தியாகி திருமதி சி. செல்லம்மாள் 7.6.2001 அன்று மனு கொடுத்தார். மறு நாளே (8.6.2001) அதற்கு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நடவடிக்கை எடுத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

★ ★ ★

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15–6–2001 அன்று விழுப்புரம் மாவட்டம் குண்டலப்புலியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆதிநாராயணன் என்ற 80 வயது முதிர்ந்த சுதந்திரப் போராட்ட வீரருக்கு மாதம் ரூ.3,000 வழங்குகின்ற மாநில சுதந்திரப் போராட்ட ஒய்வூதியத்திற்கான அரசாணையை தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

**முதலவரிடம் மனு**

விழுப்புரம் மாவட்டம் குண்டலப்புலியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோபால் பிள்ளை அவர்களின் மகன் திரு. கோ. ஆதிநாராயணன் என்பவர் தான் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்குபெற்று சிறைத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர் எனவும், தனக்கு மாநில விடுதலைப் போராட்ட வீரர் ஒய்வூதியம் வழங்க வேண்டுமெனவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் 12.6.2001 அன்று மனு அளித்திருந்தார். அம்மனுவில் அவர் வெள்ளையனே வெளியேறு என்று இயக்கத்தில் ஈடுபட்டு 7.9.1942–ல் தண்டனை அடைந்து 8.12.1943 வரை பெல்லாரி அலிபுரம் சிறையில் இருந்ததாக சககைதி அளித்த சான்றினையும் இணைத்து அனுப்பியிருந்தார். மேலும், இவரது கோரிக்கை கடந்த 17 வருடங்களாக கவனிக்கப்படவில்லை என்றும், தான் வறுமையில் வாடுவதாகவும் தெரிவித்திருந்தார்.



# சுதந்திரப் போராட்ட வீரருக்கு மாதம் ரூ.3,000 ஒய்வூதியம்

**ஒய்வூதியம் வழங்க ஆணை**

அவரது மனுவின்மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இதனையடுத்து மாநில விடுதலைப் போராட்ட ஒய்வூதியம் அனுமதிக்கப்பட்டு அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இதனை விடுதலைப் போராட்ட வீரர் திரு. ஆதிநாராயணன் அவர்களுக்கு 15.6.2001 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் வழங்கினார்கள்.

கடந்த 17 ஆண்டுகளாக தொடர்ந்து விடுதலைப் போராட்ட ஒய்வூதியத்திற்காக காத்திருந்த அவருக்கு, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் ஒய்வூதியம் வழங்கப்பட்டதற்காக திரு. ஆதிநாராயணன் தனது நன்றியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்.•

தமிழகத்தில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைந்து கொண்டே வருகிறது. 1991-ஆம் ஆண்டு 1,000 ஆண் குழந்தைகளுக்கு 948 பெண் குழந்தைகள் என்றிருந்த குழந்தைகள் பிறப்பு விகிதம் 2001-ஆம் ஆண்டில் 939 ஆக குறைந்துள்ளது. தேனி, சேலம், நாமக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் இந்த நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இந்த மாவட்டங்களில் எல்லாம் 1,000 ஆண் குழந்தைகளுக்கு, 900 பெண் குழந்தைகள் என்ற விகிதத்திலே பிறப்பு விகிதம் உள்ளது.

இப்படி பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் குறைந்து போனதற்கு முக்கியக் காரணம் பெண் கருச்சிதைவும், பெண் குழந்தைகளை அழிப்பதுமே ஆகும். இந்தக் கொடுமையை தடுப்பதற்காக 1994-ஆம் ஆண்டு, பிறப்பிற்கு முன் கருவை அறியும் நுட்ப முறைகள் (வரன்முறை மற்றும் தவறான பயன்பாட்டினைத் தடுத்தல்) சட்டமும், அந்தச் சட்டத்தையொட்டி 1996-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட விதிகளும் உறுதியாக அமல்படுத்தப்படும். அந்தச் சட்டப் பிரிவுகளின்படி பிறப்பிற்கு முன் கரு பரிசோதனைகளில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களும், சென்னை-6, தேனாம்பேட்டையில் உள்ள மருத்துவ மற்றும் ஊரக நலவாழ்வுப் பணிகள் இயக்குநரிடம் பதிவு செய்துக் கொள்ள வேண்டும். அந்தச் சட்டத்தின்படி சிசுக்கருவின் பாலினத்தைக் கண்டறியும் கருவிகளைத் தவறாகப் பயன்படுத்தினாலோ அல்லது சிசுக்கருவின் மீது மருத்துவ சோதனை நடத்தும் பரிசோதனை நிறுவனங்கள் பதிவு செய்யப்படாமல் இருந்தாலோ, அந்தச் செயல்கள், கைது செய்யப்படக் கூடிய, ஜாமீனில் விட முடியாத, பிணைத் தொகை செலுத்த முடியாத குற்றங்களாக கருதப்பட்டு, அவற்றிற்கு உயர்ந்தபட்சம் 3 ஆண்டுகள் சிறை தண்டனையும், 50,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படும். இத்தகையக் குற்றங்களில் ஈடுபடும் மருத்துவர்கள், தங்களுடைய மருத்துவ தொழிலுக்கான பதிவையும் இழந்து விடுவார்கள்.

# சிசுக்கருவின் பாலினத்தைக் கண்டறியும் கருவிகளைத் தவறாகப் பயன்படுத்தினால் தண்டனை

மேலும், அத்தகைய உபகரணங்கள் கண்டிப்பாக நோய் சார்ந்த பரிசோதனைகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ 2000-க்கும் மேற்பட்ட மரபியல் மருத்துவ பரிசோதனை/ ஸ்கேன் மையங்களில், இதுவரை 600 மையங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் புரிபவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், இதுவரை பதிவு பெறாத மையங்கள், பதிவு செய்து கொள்ள அந்தந்த மாவட்டங்களில் உள்ள நல வாழ்வுப் பணிகள் இணை இயக்குநரிடம் உடனடியாக அதற்கென குறிப்பிடப்பட்ட படிவத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அத்துடன் 200 ரூபாய்க்கான கேட்பு வரைவோலையை இயக்குநர், மருத்துவ மற்றும் ஊரக நல வாழ்வு பணிகள், சென்னை என்பவருக்கு பெற்று பதிவு செய்யும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். சென்னை நகரத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள், இயக்குநர், மருத்துவ மற்றும் ஊரக நலவாழ்வு பணிகள், சென்னை-6 என்ற முகவரியில் கிடைக்கும். விண்ணப்பிக்க கடைசி நாள் 5.8.2001 என அறிவிக்கப்படுகிறது. •

# தரமான அரிசியை விநியோகம் செய்ய முதலமைச்சர் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.6.2001 அன்று தலைமைச் செயலகத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கான ஆய்வுக் கூட்டத்தை துறை அலுவலர்களுடன் நடத்தினார்கள்.

அப்போது செய்தியாளர்கள் பார்வைக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்படும் அரிசியின் மாதிரிகள் வைக்கப்பட்டன. பாமணி–மன்னார்குடி நுகர்பொருள் வாணிபக் கிடங்கிலிருந்தும், சுந்தரக்கோட்டை நவீன அரிசி ஆலையிலிருந்தும், மன்னார்குடி வட்டம் கோயில் வெண்ணி நியாய விலைக் கடையிலிருந்தும் சமீபத்தில் இந்த மாதிரிகள் எடுக்கப்பட்டிருந்தன. இவை அனைத்தும் பழுப்பு நிறம் உடையதாகவும், பூச்சி புழுக்களுடனும் உணவுப் பொருளாகப் பயன்படுத்த இயலாத, தரமற்றதாகவும் இருந்தன. அரிசியிலிருந்த வண்டுகள், புழுக்கள் மற்றும் பூச்சிகள் ஊர்ந்து செல்வதை அனைவரும் கண்டனர். இந்த தரம் குறைந்த அரிசி அனைத்தும் முந்தைய அரசால் கொள்முதல் செய்யப்பட்டு, இருப்பு வைப்பதில் சரியான சேமிப்பு முறைகளைக் கடைபிடிக்கத் தவறியதாலும், குறித்த நேரத்தில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படாததாலும், தற்போது உண்பதற்குத் தகுதியற்றதாக உள்ளது. இதனால் அரசுக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளதோடு, இத்தகைய தரம் குறைந்த அரிசியை பொது விநியோகத்தில் மக்களுக்கு வழங்குவதன் மூலம், சுகாதார கேட்டையும், நோய்களையும் விளைவிக்கும் நிலை உருவாகியுள்ளது.

**நல்ல தரமான அரிசி விநியோகம்**

இதுபோன்று, பொது மக்கள் உண்பதற்கு பயன்படுத்த இயலாமல் உள்ள அரிசியை மாற்றி, நல்ல தரமான அரிசியை விநியோகம் செய்யவும் இதற்கான தக்க நடவடிக்கை எடுக்கவும், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் ஆணைகள் பிறப்பித்து தக்க அறிவுரைகளையும் வழங்கினார்கள். ★




மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 12.6.2001 அன்று மலேசிய நாட்டு அமைச்சர் டத்தோ எஸ். சுப்பிரமணியம் அவர்கள் மற்றும் மலேசிய நாட்டின் உதவி ஹை கமிஷனர் திரு.ராஜா அகமது ராஜா தாவுத் ஆகியோர் சந்தித்தனர்.

# ஊனமுற்றோர் சேவைக்கான விருதுகள்

ஊனமுற்றோரில் சிறந்த முறையில் பணிபுரிந்த நபர்களுக்கும், ஊனமுற்றோர்களுக்காக சிறப்பாக சேவைபுரிந்தவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கும் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் மூலம் ஆண்டுதோறும் மாநில விருதுகள் மற்றும் தேசிய விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு விருதுகள் பெற விருப்பமும், தகுதியும் உடையவர்கள் விண்ணப்பிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**தேசிய விருது (National Award)**

அ) அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் ஆகியோருக்கான சிறந்த பணியாளர் (Best Employee) மற்றும் சிறந்த சுயதொழில் செய்யும் பணியாளர் (Best Self Employed) ஆகியோருக்காக மொத்தம் 25 விருதுகளும்,



ஆ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் ஆகியோரை அதிக அளவில் பணியமர்த்திய அரசு நிறுவனங்கள் அரசு சார்ந்த பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சிறந்த தனியார் தொழிலதிபர்களுக்காக என 18 விருதுகளும்,

இ) ஊனமுற்றோரை அதிக அளவில் வேலைக்கு அமர்த்திய பணியமர்த்தும் அலுவலர் (Placement Officer) நான்கு நபர்களுக்கும்,

ஈ) ஊனமுற்றோருக்கு சிறப்பாக சேவைபுரிந்த ஐந்து தனி நபர்களுக்கும் (Best Individual Award),

உ) ஊனமுற்றோருக்கு சிறப்பாக சேவைபுரியும் ஒரு தொண்டு நிறுவனத்துக்கு (Best Institution Award)

ஊ) ஊனமுற்றோரின் மறுவாழ்விற்காக உதவும் நவீன சாதனங்களை கண்டுபிடிக்க சிறந்த தொழில்நுட்ப சாதனைக்காக (Best Technology Award) 3 விருதுகளும்,

எ) இலக்கியம், கலாச்சாரம் போன்ற துறைகளில் புதிய படைப்புகளை உருவாக்கிய ஊனமுற்ற நபருக்கு ஒரு விருதும்,

ஏ) ஊனமுற்றோர் தடையின்றி சென்றுவர சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கட்டடத்திற்கான மூன்று விருதுகளும் என மொத்தம் 60 தேசிய விருதுகளுக்காக மாநில அரசு தகுந்த விண்ணப்பங்களை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யும்.

**மாநில விருதுகள் (State Award)**

அ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர் ஆகியோரை அதிக அளவில் பணியமர்த்திய அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சிறந்த தொழிலதிபர்களுக்கான 8 விருதுகளும்,

ஆ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களுள் சிறந்த பணியாளர்களுக்கான ஒவ்வொரு பிரிவிலும் ஒருவருக்கான 6 விருதுகளும்,

இ) பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளித்தல் மற்றும் கல்வி போதித்தமைக்கான சிறந்த ஆசிரியர்களுள் 5 நபர்களுக்கும்,

ஈ) ஊனமுற்றோருக்கு சிறப்பாக சேவைபுரிந்த தொண்டு நிறுவனங்களுக்கு 2 விருதுகளும்,

உ) ஊனமுற்றோருக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கும்,

ஊ) ஊனமுற்றோருக்கு சிறப்பாக மருத்துவ உதவிகள் செய்த சிறந்த மருத்துவர் அல்லது தொழில்சார் சிகிச்சையாளர் (Occupational Therapist) என ஒரு நபருக்கும்,

எ) ஊனமுற்றோருக்கு சேவையாற்றிய 2 சமூகப் பணியாளர்களுக்கும்,

ஏ) மகளிர் நலத்திற்கு தொண்டாற்றிய ஒரு மகளிர் நிறுவனத்திற்கும் என மொத்தம் 25 விருதுகள் வழங்கப்படும்.

மேற்கண்ட 25 விருதுகளில் கீழ்க்கண்ட ஆறு விருதுகள் சுதந்திர தின விழாவின்போது வழங்கப்படும்.

1. பார்வையற்றோர், செவித்திறன் குறையுடையோர், உடல் ஊனமுற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர் மற்றும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்த நபர்களின் முன்னேற்றத்திற்கு உதவிய ஒரு தனியார் நிறுவன தொழிலதிபருக்கும்,

2. ஊனமுற்றோர் உயர்வுக்கு சிறப்பாக பயிற்சி அளித்த ஒரு தனியார் நிறுவனத்திற்கும்,

3. மகளிர் உயர்வுக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு மகளிர் நிறுவனத்திற்கும்,

4. ஊனமுற்றோருக்கு அருஞ்சேவையாற்றிய ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும்,

5. ஊனமுற்றோருக்கு சிறப்பாக மருத்துவ உதவிகள் செய்த ஒரு மருத்துவருக்கும்,

6. ஊனமுற்றோருக்கு சிறப்பாக சேவையாற்றிய ஒரு சமூகப் பணியாளருக்கும் என மொத்தம் ஆறு விருதுகள் சுதந்திர தினத்தன்றும், இதர 19 விருதுகள் 3–12–2001ல் நடைபெறும் ''உலக ஊனமுற்றோர் தினம்'' அன்று வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட விருதுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் விவரங்கள் அந்தந்த மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலரிடமிருந்து பெற்று விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து புகைப்படத்துடன் 3 நகல்களை மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலரின் பரிந்துரையுடன் 15.7.2001க்குள் அந்தந்த மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலருக்கோ அல்லது கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரிக்கோ அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது.

மாநில ஆணையர்,
ஊனமுற்றோருக்கான மாநில
ஆணையர் அலுவலகம்,
எண்.2, பக்தவச்சலம் சாலை (வாரன் ரோடு),
மைலாப்பூர், சென்னை – 600 004.


## தமிழரசு வாசகர்களே!
## தமிழகப் பொதுமக்களே!

**இன்னும் தீர்க்கப்படவில்லையே
என்று நீங்கள் ஏங்கி நிற்கும்
பிரச்சினை ஏதும் உங்கள்
பகுதியில் உள்ளதா?
உடனடியாகத் தீர்க்கப்பட
வேண்டிய பிரச்சினை,
நிறைவேறாமல் கிடக்கும்
நீண்டகாலக் கோரிக்கை
இப்படி எதுவாயினும் உடனே
"தமிழரசு" இதழுக்கு
எழுதுங்கள். அப்பிரச்சினை
தொடர்பான துறையின் உயர்
அலுவலர்களிடமிருந்து
பதில் பெற்று "தமிழரசு" இதழில்
வெளியிடப்படும்.**

**இப்பகுதிக்கு நீங்கள் எழுதிட நிபந்தனை
ஏதுமில்லை.
வேண்டுகோள் மட்டுமே உண்டு.
உங்கள் கோரிக்கை பொதுநல நோக்கோடு
அமையவேண்டும் என்பதே அது.**

**எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :**

**தமிழரசு**
**ஓமந்தூரார் அரசினர் தோட்டம்
அண்ணா சாலை,
சென்னை - 600 002.**



# பின்னலாடைத் தொழில் பிரச்சினை

## - பிரதமருக்கு முதல்வர் கடிதம்

தமிழ் நாட்டின் திருப்பூரில் அமைந்துள்ள பின்னலாடைத் தொழில் தொடர்பான, அவசர முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் பற்றி தங்களுடைய கனிவான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

திருப்பூரில் நடைபெற்று வருகின்ற பின்னலாடைத் தொழிலில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 5,000 கோடி ரூபாய் மதிப்புள்ள பின்னலாடைத் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதோடு 2 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் காரணமாக விளங்கி வருகின்றது. கடந்த ஜூன் 1-ஆம் தேதி மத்திய அரசின் நிதி அமைச்சகத்தினால் அறிவிக்கப்பட்ட சுங்கவரி ஊக்கத்தொகை விகிதம் குறைப்பு சலுகை 15 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக திடீரென்று குறைக்கப்பட்டது. தமிழ்நாட்டின் பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தொழிலை ஒரேயடியாக நிலைகுலைய செய்துவிட்டது என்பதை தங்களுக்குச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இத்தொழிலுக்கு இதுவரை அளிக்கப்பட்டு வந்த சுங்கவரி ஊக்கத் தொகை இதுவரை பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை மூலம் கிடைத்து வந்த அதிக அளவிலான அன்னியச் செலாவணி வருவாய் கிடைப்பதற்கு இடராக அமையும் என்று நான் கருதுகின்றேன். இது மட்டுமின்றி அன்னியச் செலாவணி வருவாய்க்கு ஏற்படுகின்ற மிக பெரிய இழப்பீடு, திருப்பூர் பகுதியை சார்ந்த ஊரக வேலைவாய்ப்பு சூழ்நிலையை வெகுவாக பாதிக்கும் என்று நான் கருதுகின்றேன். மேலும், இத்தகைய பிரச்சனையின் காரணமாக திருப்பூரில் உள்ள பின்னலாடை உற்பத்தியாளர்கள் 20.6.2001 அன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டின் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இது தொடர்பாக சுங்க வரி ஊக்கத் தொகை விகிதங்களை சென்ற ஆண்டின் நிலைக்கு மீண்டும் கொண்டுவருவதன் அவசியம் குறித்து மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்கு விளக்கக் கடிதம் ஒன்றினை எழுதியுள்ளார் என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதனையே நான் மீண்டும் வலியுறுத்துவதோடு, தாங்கள் இது குறித்து உடனடியாக அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதற்கான உரிய ஆணைகளை விரைந்து பிறப்பிக்க ஆவன செய்ய வேண்டும் என்றும், இதன் வாயிலாக திருப்பூர் பின்னலாடை உற்பத்தியாளர்கள் மத்தியில் நிலவுகின்ற அதிருப்தியை நீக்கி அவர்கள் தங்களது பின்னலாடைத் தொழிலை தொடர்ந்து லாபகரமான முறையில் நடத்த வழிவகை செய்ய வேண்டும் என்றும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ●



# மீனவர் - மீனவ மகளிருக்கு விபத்துக் குழு காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதித் தொகை

தமிழக அரசு மீனவர்களின் நன்மைக்காக மீனவர் விபத்து குழு காப்புறுதித் திட்டம் மற்றும் மீனவர் தனிநபர் காப்புறுதித் திட்டம் ஆகிய திட்டங்களை, மீனவர் மற்றும் மீனவ மகளிர் நலன் கருதி மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் கீழ் மீனவர்கள் இறந்தாலோ அல்லது முழுமையாக ஊனமடைந்தாலோ ஆண்டு சந்தாத் தொகை அளவைப் பொறுத்து அதிகபட்சமாக ரூ.2.65 இலட்சம் வரை காப்புறுதித் தொகையும், குறைந்தபட்சமாக ரூ.15,000 வரை உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

**32 நபர்களுக்கு உதவி**


மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றவுடன் மீனவர் நலன் கருதி, நிலுவையில் இருந்த அனைத்து இனங்களிலும் காப்புறுதித் தொகை உடனடியாக வழங்கப்படும் என்று ஆணையிட்டதற்கு ஏற்ப இராமநாதபுரம், திருவள்ளூர், நாகப்பட்டினம், விழுப்புரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி, சென்னை, கடலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 32 நபர்களுக்கு ரூ.19.75 இலட்சம் உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யப் பட்டது. மரணமடைந்த மீனவர் மற்றும் மீனவ மகளிரின் வாரிசுதாரர்களுக்குக் காப்புறுதித் தொகையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் 20.6.2001 அன்று நேரில் வழங்கி அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.



• • •

# இரத்த அழுத்தம்

நமது உடலின் போக்குவரத்து சாதனம் இரத்தம். இது உடலெங்கும் சுற்றி எல்லா செல்களுக்கும் ஆக்ஸிஜனையும் ஊட்டச் சத்துக்களையும் வழங்குகிறது. அவைகள் வெளியிடும் கழிவுப் பொருள்கள் மீண்டும் சுத்திகரிப்பு சாலைக்கு எடுத்துச் செல்லுகிறது. உடலெங்கும் இரத்த ஓட்டம் சீராக நடைபெற உதவும் பம்ப் இருதயம் என்பது தெரியும். ஆனால் இரத்தக் குழாய்களில் இரத்தம் செல்ல உதவும் விசை எதுவென்று எத்தனை பேருக்குத் தெரியும்? அந்த விசை இரத்த அழுத்தம். இரத்த நாளங்களின் வழியாகச் செல்லும் இரத்தம் அந்த நாளச்சுவர்களின் மீது ஒரு குறிப்பிட்ட அளவு அழுத்தத்தை உண்டாக்குகிறது. பொதுவாக இது ஒரே நிலையாக இருக்கும். ஏதேனும் வேறுபாடுகள் இருந்தாலும் அது குறிப்பிடத்தக்க நிலையில் இருக்காது.



இடது வெண்ரிக்கிள் சுருங்கும் போது இரத்தத்தை வேகத்துடன் மகாதமனிக்குள் செலுத்துகிறது. வேகத்தையும் நேரத்தையும் கணக்கிடும் காலமாயிற்றே இது. வெறும் வேகம் என்று சொன்னால் போதுமா? எத்தனை வேகம் என்று சொல்ல வேண்டாமா? ஏறக்குறைய மணிக்கு 1.4 கிலோ மீட்டர் வேகத்தில் செலுத்துகிறது. இந்த வேகத்தில் மகாதமனிக்குள் நுழையும் இரத்தம் குறுந்தமனிகளை அடையும்போது அதன் வேகம் மணிக்கு 72 மீட்டர்கள்! தந்துகிகளில் செல்லும்போது அதன் வேகம் 18 மீட்டர்கள்!

இடது வெண்ரிக்கிளிலிருந்து துவங்கிய உடன் மகாதமனி பல கிளைகளாகப் பிரிகிறது. இக்கிளைகள் மேலும் பல கிளைகளாகவும் மாறுகிறது. இவைகள் இவ்வாறு பிரியப் பிரிய சிறு நாளங்களின் குறுக்களவு படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. இவைகளின் வழியாக வரும் இரத்தத்தின் வேகமும் குறைந்து விடுகிறது. ஆனால் இவைகள் இரத்த விநியோகம் செய்யும் பரப்பு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

தந்துகிகள் இரத்த நாளங்களில் மிக நுண்ணியது. வெறும் கண்களினால் பார்க்க முடியாது. நுண்ணோக்காடி மூலமே பார்க்க முடியும். இவைகளின் வழியாக இரத்தம் மிக மெதுவாகச் செல்லுகிறது. நுரையீரலிலுள்ள ஆல்வியோலி எனும் காற்று நுண்ணறைகளைச் சுற்றிச் செல்லும் தந்துகிகள் வளியப் பரிமாற்றம் நடத்திக் கொள்ள வசதியாக இரத்தம் மிக மெதுவாகச் செல்லுகிறது. இந்தத் தந்துகிகள் ஆக்ஸிஜனூட்டம் பெறும். அதே சமயத்தில் மற்றவைகள் ஆக்ஸிஜனை திசுக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும். ஆக்ஸிஜனற்ற இரத்தம் நுண் சிரைக்குழல் வழியாக மேற்பெருஞ்சிரை கீழ்ப் பெருஞ்சிரையை அடைந்து மணிக்கு 360 மீட்டர்கள் வேகத்தில் வலது ஏட்ரியத்திற்குள் செலுத்தப்படுகிறது.

இரத்த அழுத்தம், இரத்த சுழற்சியின் ஆரம்பத்தில் அதிகமாக உள்ளது. பின்னர், படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. இரத்த அழுத்தம் என்பது இரத்தம் அது செல்லும்

நாளங்களின் பக்கச் சுவர்களில் ஏற்படுத்தும் அழுத்தம். ஆரம்பத்தில் அழுத்தம் அதிகமாக இருப்பதற்குக் காரணம் வேகம். வேகம் குறையக் குறைய அழுத்தமும் குறைந்து கொண்டே வருகிறது. இரத்த அழுத்தம் என்று சொல்லும்போது தமனிகள், குறுந்தமனிகள், தந்துகிகள், சிரைகள் ஆகியவற்றில் ஏற்படும் அழுத்தத்தையும் குறிப்பதுதான். ஆனால் பொதுவாக கணக்கிடுவது, பெரிய தமனிகளின் அழுத்தத்தைத்தான்.

ஏறக்குறைய 57 கிராம் அளவு ஆக்ஸிஜனூட்டம் பெற்ற புதிய இரத்தம் ஒவ்வொரு இருதயத் துடிப்பின் போதும் இருதயத்திலிருந்து வெளிச் செலுத்தப் படுகிறது. உடலெனும் உலகிலுள்ள ஒரு இலட்சம் கிலோ மீட்டர் நெடுஞ்சாலைகளில் (இரத்த நாளங்களில்) சுற்றுலாவை ஆரம்பிக்கிறது. அவ்வாறு வர அதற்குத் தேவையான விசை அல்லது அழுத்தம் தேவை. இந்த அழுத்தம் வெப்ப இரத்தவோட்ட உயிரினங்கள் எல்லாவற்றிடையேயும் அனேகமாக சமமாக இருக்கும். சிறிய உயிரினமாக இருந்தாலும் சரி பெரிய உயிரினமாக இருந்தாலும் சரி இரத்த அழுத்தம் ஏறக்குறைய ஒரேமாதிரி இருக்கும். இருதய துடிப்பு வீதம் போல் வேறுபாடுகள் இருக்காது.

இரத்த அழுத்தம் பொதுவாக எவ்வித பாதிப்பும் இல்லாதவர்களிடையே அவர்களது வயதுடன் 100ஐக் கூட்டினால் வரும் எண் சுருக்கு அழுத்தமாகவும் விரிவழுத்தம் 60 முதல் 80 மில்லி மீட்டர் பாதரசமாகவும் இருக்கும். உடலின் தேவை தன்மைக்கேற்ப இரத்த அழுத்த வேறுபாட்டைக் கட்டுப்படுத்தும் சிக்கலான அமைவுகள் உடலில் உள்ளன.

இரத்த அழுத்தம் இரத்த நாளங்களின் வழியாகச் செல்லும் இரத்தம் அவைகளின் சுவர்களில் ஏற்படுத்தும் விசை அல்லது அழுத்தம் என்று தெரிந்து கொண்டோம். குறுந்தமனிகளிலும் தந்துகிகளிலும் இரத்தம் மிக மெதுவாகச் செல்லுகிறது. இதனால் தமனிகளில் இரத்த அழுத்தம் சிரைகளின் அழுத்தத்தை விட அதிகமாக இருக்கும். அதாவது தமனியில் இரத்தம் எப்போதும் நிறைந்திருக்கும்.

ஒவ்வொருமுறை இருதயம் சுருங்கும் போதும் தமனிகளில் அழுத்தம் அதிகமாகிறது. அது விரிவடையும்போது அழுத்தம் குறைகிறது. எனவே இரத்த அழுத்தத்தை பார்க்கும்போது இரு வகை அழுத்தங்கள் இருப்பது தெரியும். இருதயம் சுருங்கும்போது ஏற்படும் அழுத்தம் அதிகமாக இருக்கும். விரிவடையும்போது ஏற்படும் அழுத்தம் குறைவாக இருக்கும்.

இருதயம் சுருங்கும் நிலைக்கு ஸிஸ்டோலி என்று பெயர். இருதய சுருங்கு நிலை இருதயம் விரியும் நிலைக்கு டயஸ்டோலி என்று பெயர். இருதய விரிவு நிலை. இடது வெண்ரிக்கிள் சுருங்கும் போது இரத்தத்தை ஏற்கெனவே இரத்தம் நிரம்பியுள்ள தமனிக்குள் செலுத்துவதால் அங்கு அழுத்தம் அதிகமாகிறது. இந்த அழுத்தத்திற்கு ஸிஸ்டோலிக் அழுத்தம் என்று பெயர். இருதயச் சுருங்கலழுத்தம் என்று சொல்லலாம். ஒருவனது சாதாரண இரத்த அழுத்தம் 120 மில்லி மீட்டர் பாதரசம். இதை 16 கிலோ பாஸ்கல்கள் என்றும் குறிப்பிடுவதுண்டு.

சுருங்கலியக்கத்திற்குப் பிறகு இருதயம் விரிவடையத் துவங்குகிறது. இரத்தத்தை உந்தி செலுத்திய பின் இருதயம் ஓய்வு நிலையை அடைகிறது. அப்போது தமனிகளில் அழுத்தம் குறைகிறது. இதற்கு டயஸ்டோலி அழுத்தம் அல்லது இருதய விரிவழுத்தம் என்று பெயர். இது சாதாரணமாக 80 மில்லி மீட்டர் பாதரசமாக இருக்கும். இதை 11 கிலோ பாஸ்கல்கள் என்று குறிப்பிடுவதுண்டு.

இடது வெண்ரிக்கிள் சுருங்கி இரத்தத்தை உடலின் மற்ற பகுதிகளுக்கு அனுப்பும் போது அழுத்தம் அதிகமாக இருக்கிறது. அதாவது 120 மி.மீ. பாதரசம், மற்ற நேரங்களில் 80 மி.மீ. பாதரசம். ஒரு மில்லி மீட்டர் என்பது ஒரு அங்குலத்தில் 25இல் ஒரு கூறு. இரத்த அழுத்தத்தைக் குறிப்பிடும் போது மி.மீ பாதரசம் என்று குறிப்பிடுவதுண்டு. 120 மி.மீ. பாதரசம் என்றால் 120 மி.மீ. உயரமுள்ள பாதரசம் எவ்வளவு எடை இருக்குமோ அந்த எடைக்கு தமனியிலுள்ள இரத்த அழுத்தம் சமம் என்று பொருள். சுருங்கழுத்தத்திற்கும் விரிவழுத்தத்திற்கு மிடையேயுள்ள வேறுபாடு நாடி அழுத்தத்தைக் குறிக்கும்.

இரத்த அழுத்தம் எல்லோருக்கும் எப்போதும் 120/80 மி.மீ. என்று இருக்க வேண்டிய அவசியமில்லை. இது வயது, உயரம், எடை, பாலினம், நோய் ஆகியவற்றை ஒட்டி மாறுபடும். இரவில் ஓய்வெடுக்கும் போது அழுத்தம் குறைவாக இருக்கும். வயதாக ஆக அதிகரித்துக் கொண்டு போகும் ஆண்களை விட பெண்களுக்கு இரத்த அழுத்தம் அதிகம்.

பிறந்த குழந்தைக்கு சுருக்கழுத்தம் 40 மி.மீ. பாதரசம் இருக்கும். பிறந்த ஒரு மாதத்தில் இது 80 மி.மீ. ஆக உயர்ந்துவிடும். விரிவழுத்தம் 40 மி.மீ.யாக இருக்கும். பொதுவாக இளங்குழந்தைகளிடையே இரத்த அழுத்தம் 80/40 அல்லது 90/50 மி.மீ. யாக இருக்கும். இது மெதுவாக உயர்ந்து கொண்டு போய் 13 மாதம் முதல் 6 வயது வாக்கில் 100 மி.மீ.யாக உயருகிறது. பிறகு படிப்படியாக உயர்ந்து கொண்டு போய் 60 வயதில் சுருக்கழுத்தம் 140 மி.மீ.யாகவும் விரிவழுத்தம் 90 மி.மீ. யாகவும் உயர்கிறது.

அதிக உடலுழைப்பு, தேகப்பயிற்சி, மனப்பதட்டம் போது இரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. உடலுக்கு அதிகப்படியான ஆக்ஸிஜனூட்டம் தேவைப்படும் நிலையில் இருதயம் துரிதமாக இயங்குகிறது. இரத்தத்தை விசையுடன் தமனிக்குள் செலுத்த விரைந்து வரும் இரத்தம் தமனிச் சுவர்களில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இம்மாதிரி நேரங்களில் சுருக்கழுத்தம் 180 மி.மீ. பாதரசம் என்ற அளவில் உயர்ந்துவிடும். இது தற்காலிகமாக ஏற்படுவது. எனவே இதனால் பயம் ஒன்றுமில்லை.

இரத்த அழுத்தம் ஸ்பிக்மோ மானோ மீட்டர் எனும் இரத்த அழுத்த மானியின் உதவியுடன் அளக்கப் படுகிறது. இதை


இரத்த அழுத்தம் = 120/80 மி.மீ. பாதரசம்

அல்லது = 16/11 கிலோ பாஸ்கல்கள்

என்று குறிப்பிடுவதுண்டு. 120/16 என்பது சுருங்கழுத்தத்தையும், கீழேயுள்ள 80/11 என்பது விரிவழுத்தத்தையும் குறிப்பிடுவது.

இரத்த அழுத்தம் ஸ்பிக்மோனோமீட்டர் எனும் கருவியால் அளக்கப்படுகிறது. ஸ்டெதெஸ் கோப்பிற்கு அடுத்தபடியாக டாக்டர்கள் எல்லோரிடமும் இருக்கும் கருவி இது. இதில் ஒரு ரப்பர் பை இருக்கும். 12 செ.மீ. அகலமும் 20 செ.மீ. நீளமும் கொண்டது. பையைச் சுற்றி துணிப் பட்டை; பாதரச அளவு மானியும் ஒரு வழி வால்வுடன் கூடிய ரப்பர் பந்து போன்ற அமைப்பும் உண்டு. அளவுமானி துணிப் பட்டையுடன் கூடிய ரப்பர் பையுடனும் ரப்பர் பந்துடனும் ரப்பர் குழாய்கள் மூலம் இணைக்கப்பட்டிருக்கும்.

இரத்த அழுத்தம் பார்க்கும்போது துணிப்பட்டை மேற்கையில் இறுக்கமாகச் சுற்றப்படுகிறது. ரப்பர் பந்தை அமுக்குவதின் மூலம் காற்று துணிப் பட்டை யுள்ளிருக்கும் ரப்பர் பைக்குள் செலுத்தப்படுகிறது. காற்று ரப்பர் பைக்குள் செல்லச் செல்லச் அதனுள் அழுத்தம் அதிகமாகிக் கொண்டு வந்து மேற்கையை இறுக்குகிறது. ஒரு நிலையில் பையிலுள்ள அழுத்தம் இரத்த



அழுத்தத்திற்குச் சமமாகிறது. அந்த நிலையில் மேற்கையிலுள்ள தமனி இறுகி இரத்த ஓட்டம் தடைப்பட மணிக்கட்டுப் பகுதியில் நாடித் துடிப்பு நின்றுவிடும். இப்போது காற்று மெதுவாக வெளிவிடப்படுகிறது. இச்சமயத்தில் தடைப்பட்ட இரத்த ஓட்டம் மீண்டும் ஆரம்பிக்கிறது. இலேசான துடிப்பொலியும் கேட்கும். அளவுமானியில் காண்பிக்கும் எண் சுருக்கழுத்தத்தைக் குறிப்பது. அழுத்தம் மிக அதிகமாக இருந்தால்தான் சுருக்கழுத்தத்தின் போது அந்த முதல் துடிப்பொலி கேட்கும். தொடர்ந்து காற்று வெளி விடப்பட அளவு மானியில் பாதரசம் மட்ட அளவு குறைந்து கொண்டு வருகிறது. பிறகு ஒரு துடிப்பொலி; இருதய விரிவியக்கத்தின்போது ஏற்படும் ஒலி; இப்போது அளவு மானியில் காண்பிப்பது விரிவழுத்தம்.

இரத்த அழுத்தம் ஒரே சீராக இருப்பது பல்வேறு காரணங்களைப் பொறுத்துள்ளது. அவைகள்.

1. இருதய வீச்சு அளவு
2. புறவெல்லை குறுந்தமனிகளின் எதிர்ப்புத் தன்மை
3. இரத்த நாளச் சுவர்களின் மீள் சக்தி
4. போக்களவு
5. இருதயத்திற்குத் திரும்பி வரும் சிரை இரத்த அளவு

என்பன.

இருதய வீச்சு அளவு என்பது ஒரு வெண்ரிக் கிளிலிருந்து ஒரு சுருக்கத்தின் போது வெளிப்படும் இரத்தத்தின் அளவு. இது ஏறக்குறைய 60 கிராம்கள் ஆகும். ஒரு நிமிடத்தில் வெண்ரிக்கிளால் வெளியேற்றப் படும். இரத்தத்தின் அளவு இருதயப் பணி அளவு எனப்படுகிறது. இருதயச் சுருக்கத்தின் விசையையும் வீதத்தையும் பொறுத்து இருதயப் பணி அளவு அமைகிறது. இருதயப்பணி அளவு அதிகமாகும்போது சுருங்கழுத்தமும் விரிவழுத்தமும் உயர்கிறது. ஆனால் வீச்சு அளவு அதிகமாக இருந்தால் சுருங்கழுத்தம் விரிவழுத்தத்தை விட அதிகமாக இருக்கும்.

குறுந்தமனிகள் என்பது மிகச்சிறிய இரத்த நாளங்கள் இந்த நாளச்சுவரின் நடு உறை மென்மையான தசைகளினாலானது. மீள் சக்தியுடைய திசுக்களைக் கொண்டது. நரம்பு உந்தல்களுக்கு ஆளாகக் கூடியது. முகுளத்தில் நாள இயக்கக் கேந்திரம் உள்ளது. இந்தக் கேந்திரத்தில் ஏற்படும் கிளர்த்தல் இரத்த நாளங்களின் உட்துவாரத்தில் மாறுதல்களை ஏற்படுத்தக்கூடியது. கிள்ர்த்தல் ஏற்பட்டதும் உந்தல்கள் நாளச் சுருக்கி நரம்புகள் மூலமாக நாளங்களை அடைகிறது. தொடர்ந்து வரும் உந்தல்கள் நாளத்தின் உட்துவார அளவைச் சுருக்குகிறது. அதாவது குறுந்தமனிகளைச் சுருங்கச் செய்கிறது. இதனால் இரத்த அழுத்தம் அதிகமாகிறது. நாள இயக்கிகளின் செயலூக்கம் குறையும்போது உந்தல்கள் வருவது நின்று போய் விடுகிறது. நாளமும் விரிவடைய இரத்த அழுத்தமும் குறைகிறது. உறுப்புகளின் தேவைக்கேற்ப இரத்த ஊட்டம் அளிப்பதற்கு வசதியாக குறுந்தமனிகளில் விரிதல்-சுருங்கல் நிகழ்வு நடைபெறுகிறது.

குறுந்தமனிகளின் இந்தத் தன்மை, உடலுக்குப் பேருதவியாக இருக்கிறது. உடலின் இரத்த விநியோகத்தில் தற்காலிக மாறுதல்களை ஏற்படுத்தி சூழ்நிலைக்கு ஏற்ப தேவை அதிகப்படும் உறுப்புகளுக்கு அதிகப்படியான இரத்தத்தை அளிக்கிறது. சாதாரணமாக ஓய்வு நிலையில் இரத்தம் உடலின் பல்வேறு உறுப்புகளுக்குக் கீழ்க்கண்ட விகிதத்தில் விநியோகிக்கப்படுகிறது.

*1. இருதய இரத்த நாளங்கள் 5 சதவீதம்*

*2. நுரையீரல் பகுதிகள் 10 சதவீதம்*

*3. மூளை 15 சதவீதம்*

*4. தசைகள் 15 சதவீதம்*

*5. குடல்கள் 15 சதவீதம்*

*6. கல்லீரல் 10 சதவீதம்*

*7. சிறுநீரகங்கள் 20 சதவீதம்*

*8. சருமம் எலும்பு 10 சதவீதம் முதலியன*

பயம், கோபம், மற்ற பல காரணங்களினால் இந்த விநியோக முறையில் தற்காலிக மாறுதல்கள் ஏற்படும். சாலையைக் கடக்கும்போது திடீரென்று விரைந்துவரும் கார் நம் மேல் மோதிவிடுமோ என்று பய உணர்ச்சியை கிளப்புகிறது. அந்த விபத்திலிருந்து உயிரைக் காத்துக் கொள்ள உடனடியாக பல தற்காப்பு முயற்சிகளில் உடல் இறங்குகிறது. இம்மாதிரி சமயங்களில் துரிதமாக செயல்பட, இருதயம், நுரையீரல், தசைப் பகுதிகள் ஆகியவற்றிற்கு அதிக இரத்த ஊட்டம் தேவை. நெருக்கடி நிலை தீரும் வரை குடல்கள் போன்ற செரிமானப் பகுதிக்கு அவ்வளவு இரத்தம் தேவையில்லை. எனவே இப் பகுதிகளுக்குச் செல்லும் தமனிகள் சுருங்கி, இரத்தத்தை நெருக்கடி நிலையை சமாளிக்க நேரடியாக செயல்படும் பகுதிகளுக்கு அனுப்புகிறது.

கடுங்கோடை காலத்தில் உடல்வெப்பத்தைக் குறைக்க உதவும் வகையில் சரும அடி நாளங்களில் இரத்த போக்குவரத்து அதிகமாக இருக்கும். கடும் உழைப்பின் போதும் இதே நிலை தான். குளிர் காலங்களில் உடல் வெப்ப இழப்பைத் தவிர்க்க சரும அடி நாளங்கள் சுருங்கி கொள்ள அப்பகுதியில் இரத்தம் சாதாரண அளவை விட குறைவாக இருக்கும். உணர்ச்சி வயப்படும் போது அதே நிலைதான். உடல் வெளிறிப் போய் இருப்பது பார்த்தாலே தெரியும்.

ஒரு உறுப்பின் செயல் நிகழ்ச்சிக்கேற்ப தேவையான அளவு இரத்தம் அந்தப் பகுதிக்கு அனுப்பப்படுகிறது. செயல் நிகழ்ச்சி அதிகமாக உள்ள உறுப்புக்கு ஓய்வுநிலையிலுள்ள உறுப்புகளைவிட அதிக அளவு ஆக்ஸிஜனும் ஊட்டப் பொருள்களும் தேவைப்படுகிறது. குறுந்தமனிகளின் சுருங்கல்-விரிவு இயல்வு அத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது.

உடலின் இடது பக்கம் இரைப்பையின் பின்புறமாக மண்ணீரல் என்று ஒரு உறுப்பு உள்ளது. சுமார் 150 முதல் 170 கிராம் எடையுள்ளது. இது ஒரு இரத்த சேமிப்பு கிடங்கு. ஏறக்குறைய ஒரு லிட்டர் இரத்தம் வரை தேக்கி வைத்துக்கொள்ளும் திறனுடையது. தேவைப்பட்டால், இது சுருங்கி அவ்வளவு இரத்தத்தையும் பொது இரத்தவோட்டத்திற்கு அனுப்பி விடுவதுண்டு.

நெருக்கடி நிலை, பயம், கோபம் மற்றும் உணர்ச்சி மயமாதல் போன்ற சமயங்களில் இரத்த ஓட்டத்தில் மாறுதல்கள் ஏற்படும். இவைகள் தற்காலிக நிகழ்ச்சிகளே.

அடுத்து, இரத்த அழுத்தம் ஒரே சீராக இருக்க உதவுவது இரத்த நாளச்சுவர்களின் மீள்சக்தியைப் பொறுத்தும் உள்ளது. தமனிச்சுவர்கள் மீள்சக்தி உடைய திசுக்களைக் கொண்டது. குறிப்பாக பெரிய தமனி நாளங்களின் சுவர்களுக்கு இந்தத் தன்மை அதிகம் உண்டு. ஏற்கெனவே இரத்தத்தால் நிரம்பியுள்ள மகாதமனியுள் இடது வெண்ரிக்கிள் சுருங்கி மேலும் இரத்தத்தைச் செலுத்துகிறது. அதிகப்படியாகவரும் இரத்தத்திற்கு இடமளிக்க தமனிச்சுவர் விரிந்து பெரிதாகிறது. பின்னர் எதிர்த்துத்துள்ளி இரத்தத்தை முன்னோக்கித் தள்ளுகிறது. இந்த நிகழ்வு தமனி அமைவு முழுவதிலும் நடைபெறுகிறது. தமனிச் சுவரின்

எதிர்த்துத்துள்ளும் இச்செயல் இருதய விரிவு நிலையில், விரிவழுத்தம் ஒரே சீராக இருக்க உதவுகிறது.

இரத்த நாளங்களின் வழியாகப்போகும் இரத்தத்தின் அளவும் அதாவது போக்களவும் இரத்த அழுத்தத்தை நிர்ணயிப்பவைதான். இரத்த நாளங்களில் போதுமான அளவு இரத்தம் எப்போதும் போய்க்கொண்டிருக்க வேண்டும். இந்த போக்களவில் ஏற்படும் ஏற்ற தாழ்வுகள் இரத்த அழுத்தத்தில் மாறுதல்களை உண்டு பண்ணி விடும்.

இருதயத்திற்குத் திரும்பிவரும் சிரை இரத்தத்தின் அளவு இருதயப்பணி அளவை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இடது வெண்ரிக்கின் சுருங்கி இரத்தத்தை தமனி, குறுந்தமனி, தந்துகிகளுக்கு அனுப்புவது மட்டுமே. மீண்டும் சிரை இரத்தம் இருதயத்திற்கு வரும் அளவை நிர்ணயித்து விடாது. உடல் இருக்கும் நிலையும் உதவுகிறது. நிற்கும்போதோ உட்கார்ந்து கொண்டிருக்கும்போதோ ஈர்ப்புவிசை தலை, கழுத்து பகுதியிலுள்ள சிரை இரத்தம் இருதயப் பகுதிக்கு வர உதவுகிறது.

தசைச் சுருக்கங்கள் குறிப்பாக எலும்புத் தசை சுருக்கம் சிரை நாளத்தில் அழுத்தம் ஏற்படுத்தி இரத்தத்தை இருதயத்தை நோக்கி உந்தித் தள்ளுகிறது. சிரை இரத்தம் பின்னுக்கு வராமல் தடுக்க தடுக்கிதழ்கள் சிரைகளில் உள்ளன. சுவாசித்தலும் சிரை இரத்தம் இருதயத்தை நோக்கிச் செல்ல உதவுகிறது.

பொதுவாக இவைகள் எல்லாமே இரத்த அழுத்தம் ஒரே சீராக இருக்க உதவுகின்றன. சாதாரண நிலையில் இரத்த அழுத்தத்தில் ஏற்படும் ஏற்ற தாழ்வுகள் தற்காலிகமானவை. அந்தந்த சந்தர்ப்பங்களில் ஏற்படும் தற்காலிக தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது ஏற்படும் மாறுதல்களே, ஆனால் சில சமயங்களில் இரத்த அழுத்தம் அதிகமாகி அதே நிலையில் நிரந்தரமாக இருப்பதுண்டு. இந்த நிலையே இரத்த மிகை அழுத்தம்.

இரத்த மிகை அழுத்தம் என்பது பொதுவாக ஒரு நோயல்ல. இது நோய்க்குறிகளில் ஒன்று. சுருக்கழுத்தம் 140ம் அதற்கு மேலும், விரிவழுத்தம் 90ம் அதற்கு மேலும் இருந்தால் அது இரத்த மிகை அழுத்தம் என்கிறது. அமெரிக்காவிலுள்ள நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் ஹெல்த். எனினும் சுருக்கழுத்தம் 100 முதல் 140 மி.மீ. என்பது சாதாரணம். வயது முதிர்ந்தவர்களிடையே சுருக்கழுத்தம் 150 ஆகவும் விரிவழுத்தம் 90 ஆகவும் இருப்பதுண்டு. 60 வயதிற்கு மேற்பட்டவர் களிடையே 160,90 ஆக இருப்பதும், 75 வயது ஆனவருக்கு 170,100 மி.மீ.யும் சகஜம்தான்.

இந்த சகஜமான அளவிற்கு மேல் போகும் ஒவ்வொரு 10 மி.மீ.யும். இருதய நோய்களுக்கும் வன்தாக்கிற்கும் வழிவகுக்கும். சுருக்க அழுத்த அதிகரிப்பை விட விரிவழுத்த அதிகரிப்பு கவலைக் கிடமானது.

இரத்த மிகை அழுத்தம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. 5 முதல் 10 சதவீதம் சிறுநீரகக் கோளாறுகள் தமனிநாளக் குருக்கம் குறிப்பாக சிறுநீரகத் தமனிகளில் ஏற்படும் குறுக்கம், அட்ரினல் சுரப்பியின் மிகை சுரப்பு அல்லது அட்ரினல் சுரப்பியில் கட்டி ஆகிய காரணங்களினால் ஏற்படுகிறது. எப்போதும் எதிலும் பரபரப்பு, படபடப்பு, துரிதம் ஆகியவற்றையும் சொல்லலாம். 90 சதவீத நேர்வுகளில் இரத்த மிகை அழுத்தத்திற்குரிய காரணங்களைக் கண்டறிய முடியாது.

காரணமறிய முடியாத இரத்த மிகை அழுத்தத்திற்கு முதனிலை இரத்த மிகை அழுத்தம் என்று பெயர்.

மற்ற உறுப்புகளில் ஏற்படும் நோய் காரணமாக ஏற்படும் இரத்த மிகை அழுத்தத்திற்கு சார்நிலை இரத்த மிகை அழுத்தம் என்று பெயர்.

முதனிலை இரத்த மிகை அழுத்தம் எதனால் உண்டாகிறது என்பதற்குச் சரியான காரணங்கள் தெரியாது. எனினும் அது ஏற்பட தூண்டுகோலாக இருப்பவைகள் எவையெவை என்பதை ஊகித் துள்ளனர் அந்த தூண்டுகோல்கள்.

1. உப்பு
2. தமனி படர்வடு
3. உடற்பருமன் (எடை)
4. ஈஸ்ட்ரோஜன்
5. பரம்பரை, என்பவைகள்

உயிர்வாழ உப்பு மிகத்தேவை. உடலின் தண்ணீர் சமநிலையைப்பேண திசுக்களிடையே தண்ணீரைத் தக்க வைத்துக்கொள்ள உப்பின் உதவி மிக அவசியம். உயிர்வாழ உப்பு தேவை. ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமே. நாள்தோறும் ஆயுள் முழுவதும் உப்பைச் சேர்த்துக் கொண்டே வந்தால் அளவிற்கு மீறிவிடுகிறது. மிகை அழுத்தத்தில் கொண்டுபோய் முடிகிறது.

ஆஸ்திரேலிய ஆதிகுடியினர், எஸ்கிமோக்கள் மற்றும் உலகில் பல பகுதிகளில் வாழும் பழங்குடியினர் உணவில் உப்பை மிகச் சிறிய அளவிலேயே சேர்த்துக் கொள்ளுகின்றனர். இந்தக் குழுவினரிடையே மிகை அழுத்தம் என்பதே

கிடையாது. இன்னும் சொல்லப் போனால் வயதாக ஆக இவர்களிடையே இரத்த அழுத்தம் குறைந்து கொண்டு தான் வருகிறது.

இதற்கு நேர்மாறான நிலையிலிருப்பவர்கள் சாலமன் தீவுகளிலுள்ள பழங்குடிகளில் ஓர் இனமும், ஜப்பானின் வட பகுதியில் வாழும் விவசாயிகளும். முன்னவர்கள் காய்கறிகளை கடல் நீரில் வேக வைப்பதின் மூலம் தினமும் உட்கொள்ளும் உப்பின் அளவை தங்களை அறியாமலேயே அதிகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். பின்னவர்கள் (ஜப்பானிய விவசாயிகள்). உணவுப் பொருள்கள் கெடாமல் இருப்பதற்காக உப்பிலே ஊற வைத்து உண்பதால் அதிக உப்பை உடலிலே சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இவ்விரு பிரிவினர்களிடையேயும் ஏறக்குறைய 60 சதவீதத்தினர் இரத்த மிகை அழுத்தத்தினால் அவதிப்படுகிறார்கள். வன்தாக்கு நோய்க்குள்ளாகி மரணமும் அடைகிறார்கள்.

உணவில் உப்பை குறைந்த அளவு பயன்படுத்தும் சமுதாயம் குறைந்த இரத்த அழுத்த சமுதாயம். இந்த சமுதாயத்தில் வயதாக ஆக இரத்த அழுத்தம் அதிகரிப்பது என்பது அபூர்வமாகவே ஏற்படுகிறது. மாறாக மிகை உப்பு உண் சமுதாயம் மிகை இரத்த அழுத்தத்தின் வேட்டைக்காடு.

நமது உடலின் ஒரு நாள் உப்புத் தேவை 500 மில்லி கிராம்கள்தான். ஆனால் தினமும் உணவுடன் நாம் சேர்த்துக் கொள்ளும் உப்பின் அளவு ஏறக்குறைய 15 முதல் 20 கிராம்கள். அதாவது 15,000 முதல் 20,000 மில்லிகிராம்கள் சிறுநீரகத்தின் பணிகளில் ஒன்று இரத்தத்தில் உப்பின் செறிவை நிலையாக வைத்திருப்பது அதாவது அதிகப்படியான உப்பை அகற்றுவது. அதன் பணித் திறனை விட பல மடங்கு உப்பு அதிகமாகச் சேர்ந்தால் அதனால் என்ன செய்ய முடியும். இனியொரு விதி செய்து நாளும் 5 கிராமிற்குள் உப்புசேர்த்துக் கொள்வது என்று கடைபிடித்தால் மிகை அழுத்தம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்காது.

தமனிபடர்வடு இன்னொரு தூண்டுகோல். தமனி நாளங்களில் கொலெஸ்டெராலும் கொழுப்பும் படிந்து படர்ந்து இரத்தம் செல்லும் பாதையை குறுக்கிவிடுவது. இதனால் இரத்தம் செல்வது தடைப்படுகிறது. உறுப்புகளுக்கு ஊட்டம் கொடுக்க தடையை மீறிக் கொண்டு இரத்தம் செல்ல முயற்சிக்கும் போது இரத்த அழுத்தம் அதிகமாகிறது. இந்த நிலையில் ஏற்படும் மிகை அழுத்தம் உண்மையில் நமக்கு நன்மை செய்யவே ஏற்படுகிறது. அதாவது குறிப்பிட்ட உறுப்புகளுக்கு இரத்தம் செல்லாவிட்டால் ஏற்படும் விளைவுகளை தவிர்க்கவே தடையை மீறிக் கொண்டுபோக முயற்சி செய்கிறது. எனினும் பாதை மிகக் குறுகலாக இருந்து அழுத்தம் அதிகமாக இருந்தால் விளைவு நேர்மாறாக ஆகிவிடுகிறது. உணவில் கொலெஸ்டெராலையும், அதிக கொழுப்பையும் அறவே நீக்கிவிட்டால் இந்தப் போரிலும் வெற்றி நம் பக்கமே!

மூன்றாவதாக உடற்பருமன் மிகை இரத்த அழுத்தத்திற்கு வழி செய்கிறது. கொழுப்பு உடலுக்குத் தேவைதான். ஆனால் அளவிற்கு அதிகமான கொழுப்பு தேவையற்ற நோய்க்கு பாதை போட்டுவிடும். தேவையான எடைக்கு மேல் 30 சதவீத எடை அதிகமுள்ளவர்களுக்கு இரத்த மிகை அழுத்தம் ஏற்படுகிறது. தேவையற்ற எடையைக் குறைப்பதின் மூலம் இரத்த அழுத்தத்தை சகஜ நிலைக்குக் கொண்டு வந்து விடலாம்.


கருத்தடை மாத்திரையில் அடங்கிய ஈஸ்ட்ரோஜன் எனும் ஹார்மோன் பெண்களிடையே இரத்த மிகை அழுத்தம் ஏற்படத் தூண்டுகோலாக உள்ளது. இது உப்பை தக்க வைத்துக் கொள்ளும் திறனுடையது. நாளடைவில் இரத்த மிகை அழுத்தத்தில் கொண்டுபோய் முடியும்.

பரம்பரை காரணமாகவும் இரத்த மிகை அழுத்தம் வருகிறது. இந்த வகை பொதுவாக 40 வயதிற்கு மேலாகவே ஏற்படுகிறது. உணவில் கட்டுப்பாடு, உடல் எடை குறைப்பு மருந்துகள் மூலமாக இதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விடலாம்.

காரணம் கண்டறியமுடியாத முதனிலை இரத்த மிகை அழுத்தம் ஏற்பட தூண்டு கோல்களாக இருப்பவைகள் என்று ஐந்து காரணிகளைச் சொன்னோம். மீண்டும் ஒருமுறை முதல் மூன்று தூண்டுகோல்களை நினைவுபடுத்திப்பாருங்கள். நமது உணவுத் தட்டே நமக்கு எதிரியாகி இருப்பது புரியும்.

இரத்த மிகை அழுத்தத்தில் சார்-நிலை மிகை அழுத்தம் என்று ஒருவகை உடலில் ஏதேனும் ஓர் உறுப்பில் ஏற்படும் நோய் காரணமாக ஏற்படுவது. இந்த மிகை அழுத்தம் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவைகள் சிறுநீரக அழற்சி குறுகிய மகாதமனி, சிறுநீரகத் தமனி குறுகல், அட்ரினல்சுரப்பி நோய், பிட்யூட்டரி சுரப்பி நோய், தைராய்டு சுரப்பியின் மிகைச் சுரப்பு, மூளைக் கட்டி முதலியன.

இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவதில் சிறுநீரகமும் உதவுகிறது. சிறுநீரகம் இரத்தத்தைத் தொடர்ந்து வடிகட்டிக் கொண்டிருக்கிறது. தனக்கு தேவையான அளவு இரத்தம் ஒரே சீராக



தொடர்ந்து வந்து கொண்டிருக்க சிறுநீரகமே ஒரு வகையை வைத்துக் கொண்டுள்ளது. ஏதோ ஒரு காரணத்தால் இரத்த அழுத்தம் குறைந்து அதற்கு வர வேண்டிய இரத்தத்தின் அளவு குறைந்து விட்டால் உடனே சிறுநீரகம் ரெனின் என்ற பொருளைச் சுரக்கிறது. இது இரத்தத்தில் கலந்து குறுந்த மனிகளைச் சுருங்கச் செய்து இரத்த அழுத்தத்தை பழைய நிலைக்குக் கொண்டு வருகிறது.

சிறுநீரக அழற்சி காரணமாக சிறுநீரகம் தனது பணியினை சரிவரச் செய்ய முடியாமல் போய்விடுகிறது. அதன் இரத்த அழுத்தக் கட்டுப்பாட்டு பணியும் பாதிக்கப்படுகிறது. இதனால் இரத்தமிகை அழுத்தம் ஏற்படுகிறது. அதே சமயம் இன்னொன்றையும் . இங்கே சொல்லிவிட வேண்டும். இரத்த மிகை அழுத்தத்தினால் சிறுநீரகங்கள் பாதிக்கப்படுவது முண்டு. இதனால் அது ஏற்படுகிறது. அல்லது அதனால் இது உண்டாகிறது என்பது நெய்க்குத் தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா என்பது போலத்தான். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இரத்தமிகை அழுத்தத்திற்கும் சிறுநீரக நோய்களுக்கும் இருதய வியாதிகளுக்கும், தொடர்பு உண்டென்பது.

குறுகிய மகாதமனி பிறவிக்கோளாறு. இந்தக் குறுகலான வழியில் இரத்தம் மிகுந்த விசையுடன் செல்லும்போது மிகை அழுத்தம் உண்டாகிறது.

சிறுநீரகத் தமனி படர்வடு காரணமாகவோ மற்ற காரணங்களினாலோ குறுகல் ஏற்பட்டால் சிறுநீரகத்திற்குச் செல்லும் இரத்த அளவு குறையும். அதை ஈடுகட்ட சிறுநீரகமே, மிகை இரத்த அழுத்தத்தை உண்டு பண்ணும்.

அட்ரினல் சுரப்பியின் அட்ரினலின் சுரப்பு குறைவாக இருந்தால் இரத்த அழுத்தம் குறையும். இதன் அதிக சுரப்பு இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தி விடும். அட்ரினல் சுரப்பியில் ஏற்படும் கட்டியும் இரத்த மிகை அழுத்தத்தை உண்டுபண்ணிவிடும். பிட்யூட்டரி சுரப்பியின் சுரப்பு அதிகமானாலும் இரத்த மிகை அழுத்தத்தை உண்டு பண்ணி விடும். அதே போல் தைராய்டு சுரப்பியின் சுரப்பு அதிகமானால் இருதய துடிப்பு வீதம் அதிகரித்து, இரத்த மிகை அழுத்தம் ஏற்படும். மூளை கட்டியினாலும் இது ஏற்படும்.

கருத்தரித்திருக்கும் பெண்களுக்கு மிகை அழுத்தம் ஏற்படுவதுண்டு. கருத்தடை மாத்திரை சாப்பிடுவதாலும் ஏற்படுகிறது. தவிர அதிகப்படியான மன, உடல் உழைப்பு, மன உளைச்சலும் இரத்த அழுத்தம் அதிகமாக காரணமாகிறது.

உடலிலுள்ள சிறிய இரத்த நாளங்கள் சுருங்கி விடுவதினாலும் பெரிய இரத்த நாளங்கள் மீள்சக்தி தன்மையை இழப்பதினாலும் இருதயத்தின் சக்தி வாய்ந்த உந்தித் தள்ளும் பணியாலும் இரத்த அழுத்தம் அதிகமாகிறது.

இரத்த மிகை அழுத்தத்தின் அறிகுறிகள் பொதுவாக தெரிவதில்லை. தற்செயலாகத் தான் இது இருப்பது கண்டுபிடிக்கப்படுகிறது. எனினும் இதன் பொதுவான அறிகுறிகள் தலைசுற்றல், தலைவலி, மயக்கம், தூக்கமின்மை, படபடப்பு, அசதி, காரணமில்லாத கோபம் முதலியன.

இரத்த மிகை அழுத்தத்தில் தீங்கு பயப்பது, தீங்கற்றது என இரு வகைகள். நோயின் தன்மை அதன் துரித வளர்ச்சியைக் கொண்டு இதை நிர்ணயிக்கிறார்கள். இரத்த மிகை அழுத்தம் இருந்தும் குறிப்பிடத் தக்க எவ்வித சிரமுமின்றி வாழ்க்கையை வழக்கம் போல் நடத்திச் செல்லும் தீங்கற்ற இரத்த மிகை அழுத்த வகையினர். தீங்கு பயக்கும் வகையில், இரத்த மிகை அழுத்தம் துரிதமாக வளர்ந்து சிறுநீரகம், கண்கள், இருதயம் முதலியன சீர்கெட்டு நோயாளி மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவது.

சுருங்கழுத்தம் 300 மி.மீ. ஆகவும் விரிவழுத்தம் 150 மி.மீ. ஆகவும் அதற்கு மேலாகவும் இருந்தால் இரத்த மிகை அழுத்தம் தீங்கானது என்று சொல்லலாம். விழித் திரையில் கசிவு, இரத்தப் போக்கு, சிறுநீரகச் செயலிழப்பு முதலியன இந்நோய் இருப்பதை வெளிப்படுத்தும்.

இரத்த மிகை அழுத்தத்தினால் மூளை, சிறுநீரகம், கண்கள் போன்ற பகுதிகளுக்கு இரத்த ஊட்டம் குறைகிறது. இதனால் கண்பார்வையில் கோளாறு, இருதய இரத்த நாள அடைப்பு, பெருமூளை இரத்த ஓட்டம் தடைபடல். பெருமூளை இரத்தப் போக்கு, இருதயச் செயலிழப்பு, குறைவாக சிறுநீர் பிரிதல், பக்கவாதம், கால்வீக்கம் முதலியன ஏற்படுகிறது. சில நேர்வுகளில் பேச்சிலும், பார்வையிலும் கோர்வை இருக்காது. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் பேசுவார்கள்.

இரத்த மிகை அழுத்தம் பெரும்பாலும் நமது உணவுத்தட்டிலிருந்தே ஆரம்பிக்கிறது எனலாம். நாவிற்கு அடிமையானவர்களை இது ஆட்சி செலுத்த தொடங்கிவிடுகிறது. நமது உணவு முறைகளையும், பழக்க வழக்கங்களையும் மாற்றிக்கொள்வதின் மூலமும், தவிர்ப்பதின் மூலமும், இதற்கு விடைகொடுத்து அனுப்பி விடலாம்.

உணவில் உப்பு சேர்த்துக் கொள்வதை குறைக்க வேண்டும். ஒரு நாளைக்கு 5கிராம் உப்பு சேர்த்துக் கொண்டால் போதுமானது.

கொழுப்புப் பொருளும், உப்பும், அதிகமாக உள்ள ரெடிமேட் உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள் ஆகியவற்றை தவிர்த்து விட வேண்டும்.

வெறும் கொழுப்புச் சத்து மட்டுமே நிரம்பிய உணவுப் பொருள், எண்ணெய், சர்க்கரை முதலியவற்றைத் தவிர்த்து விடலாம். உறை தன்மை கொண்ட எண்ணெய்களை தவிர்க்கவும்.

உடல் எடையைக் குறைப்பதின் மூலம் இரத்த மிகை அழுத்தத்தையும் குறைத்து விடலாம்.

பொட்டாசியம் சத்து மிகுந்த இயற்கை உணவுப் பொருள்கள், உருளைக் கிழங்கு, பயற்றின காய்கள், பழங்கள் முதலியவற்றை ஏராளமாக சேர்த்துக் கொள்ளலாம்.

புகைப் பிடிப்பது,குடி முதலியவற்றை அடியோடு நிறுத்திவிட வேண்டும்.

எளிய உடற்பயிற்சிகள், உடலுக்கும் உள்ளத்திற்கும் நல்லது. தினமும் குறைந்தது அரைமணி முதல் ஒருமணி நேரம் வரை நடந்தால் இரத்த மிகை அழுத்தத்தால் நம்மை எட்டிப்பிடிக்க முடியாது.

எளிதில் உணர்ச்சிவயப்படும் தன்மை,ஆசைகள், கோபதாபங்களை அடக்கிக் கொள்ள வேண்டும். வீண்கவலை, மனஉளைச்சல்களைத் தவிர்க்க வேண்டும். நிம்மதியான தூக்கமும் மிக முக்கியமானது.

வேறு சில நோய்களின் காரணமாக மிகை அழுத்தம் ஏற்பட்டிருந்தால் அந்த நோய்களை குணப்படுத்தி விட்டால் இரத்த அழுத்தமும் பழைய நிலைக்கு வந்துவிடும். கருத்தடை மாத்திரை காரணமாக அழுத்தம் அதிகம் ஏற்பட்டால் அந்த மாத்திரையை பயன்படுத்துவதை நிறுத்திவிட வேண்டும்.

வீண் வேகம், வீண் கவலை, வீண் உணவு (வெறும் கலோரிமதிப்பும் கொழுப்புச் சத்தும் அடங்கிய உணவு) மூன்றையும் தவிர்த்துவிட்டால் மெல்லக் கொல்லும் இந் நோய்க்கு விடை கொடுத்து அனுப்பிவிடலாம்.

இவைகளெல்லாம் தடுப்பு வழிகள் தான். இரத்த மிகை அழுத்தம் என்று தெரிந்தால் டாக்டரிடம் சென்று பரிசோதனை செய்து தகுந்த சிகிச்சை முறைகளை பின்பற்றுவது சிறப்பு வழி. இரத்த மிகை அழுத்தத்தை தாங்கும் திறன் ஆண்களை விட பெண்களுக்கு அதிகம்.


மிகை இரத்த அழுத்தத்தைப் பற்றியே அதிகமாக கூறிவிட்டோம். இரத்த அழுத்தம் குறைவாக இருந்தால் என்ன நேரிடும் என்று கேட்கலாம். இரத்த அழுத்தம் சகஜநிலையை விட குறைவாக இருந்தால் அதற்கு தாழ் இரத்த அழுத்தம் என்று பெயர். இதனால் பயப் படுவதற்கு ஒன்றும் இல்லை. இருதய சுருக்கங்களின் எண்ணிக்கையையும், ஆற்றலும் குறைவதினாலும் குறுந்தமனிகள் விரிவடைவதினாலும் பெருமளவு இரத்தப் பெருக்கினாலும் தாழ் இரத்த அழுத்தம் ஏற்படுகிறது. இருதய அதிர்ச்சி, உடலில் சர்க்கரை அளவு குறைதல், இரத்த ஓட்டச் செயலிழப்பு, அளவுக்கதிகமான மிகை இரத்த அழுத்த குறைப்பு மாத்திரைகளை சாப்பிடுவது முதலியனவும் இரத்த அழுத்தத்தை சகஜ நிலைக்குக் கீழாக குறைத்துவிடும்.

தலைச் சுற்று, மயக்கம், உடல் அசதி முதலியன இதன் அறிகுறிகள். உயரமாகவும் ஒல்லியாகவும் இருப்பவர்களுக்கு இந்நோய் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். இதற்குரிய சிகிச்சை முறைகளை பின்பற்றுவதின் மூலம் இதை தவிர்த்து விடலாம்.

***- என். ஸ்ரீநிவாஸன் எழுதிய "உடலியல் கலைக் களஞ்சியம்" என்னும் நூலிலிருந்து***
***வெளியீடு :- அல்லயன்ஸ் புத்தக நிறுவனம்***

• • •

# சுழலில் சிக்கியவனைக் காப்பாற்றுமுன்



சுழலில் மாட்டிக்கொண்டவனைக் காப்பாற்ற
நீச்சல் தெரிய வேண்டும் முதலில்
ஓர் அசாதாரண தைரியம்
இருக்கவேண்டும் மனசில்
நல்லனுபவமிருக்க வேண்டும்
நதிபற்றி
சுழல் குறித்து
தெரிந்து வைத்திருக்க வேண்டும் குறிப்பாக
சுழலில் சிக்கியவன் உங்களையும்
உள்ளிழுத்துவிடாமல் பார்த்துக்
கொள்ளவேண்டும் கவனமாக
அவன் உயிர்பயம் உங்களுக்கு
அபாயமாக முடிந்துவிடக்கூடாது இல்லையா
தலைமுடியைப் பற்றித்தான்
பிடித்திழுக்க வேண்டும் பத்திரமாக
உங்கள் சக்தி பூராவையும் பிரயோகித்துத்தான்
செய்யவேண்டும் எதையும்
பிரயோஜனப்படாதென்று பட்டுவிட்டால்
விட்டுவிட்டு வந்துவிடவேண்டும் ஈவிரக்கமில்லாமல்
குற்றவுணர்வு கொள்ளலாகாது
இதுவிஷயமாய் ஒருநாளும்
காப்பாற்றுவதும் கைவிடுவதும்
உங்கள் கைகளில்லை ஒருபொழுதும்
நதிச்சுழலுக்குக் கட்டுப்பட்டவர்கள்தாம்
நீங்களும் நானும் அவர்களும்
சுழல்பற்றிய ஞானம் ஒருவேளை
இன்னும் விசாலமடையலாம் இதற்குப்பிறகு •

☐ விக்ரமாதித்யன் நம்பி

# சிறுபான்மை சமுதாயத்தின் நலன் பாதுகாக்கப்படும்

## - முதலமைச்சர் உறுதி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, 21.6.2001 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கத்தோலிக்க கிறிஸ்துவ திருச்சபையை சார்ந்த தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி அனைத்து பேராயர்கள் மற்றும் ஆயர்கள், ஆயர் பேரவையின் தலைவரும், சென்னை மயிலை பேராயருமான மேதகு அருள்தாஸ் ஜேம்ஸ் அவர்கள் தலைமையில், நேரில் சந்தித்து, இரண்டாம் முறையாக தமிழக மக்களால் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மைக்காக சிறுபான்மை சமுதாயத்தின் மகிழ்ச்சியைத் தெரிவித்து, தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனம் உவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இதனை ஏற்றுக் கொண்ட முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கிறிஸ்துவ சமுதாய நலனுக்கும், பாதுகாப்புக்கும், என்றும் உறுதுணையாக இருப்பேன் என உறுதியளித்தார்கள். மேலும் கிறிஸ்துவ சமுதாயம் தொடர்ந்து தனக்கு அளித்துவரும் நல்லாதரவிற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இதனைத் தொடர்ந்து தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றினை ஆயர் பேரவைத் தலைவர் மேதகு அருள்தாஸ் ஜேம்ஸ், முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார். இக்கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து ஆவன செய்வதாக உறுதியளித்த முதலமைச்சர் அவர்கள் இதன் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் அவர்களுக்கு ஆணையிட்டார்கள்.

தமிழக முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துவாழ்த்துக் கூறிய தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி பேராயர்கள் மற்றும் ஆயர்கள் விவரம் வருமாறு:-

1. மேதகு அருள்தாஸ் ஜேம்ஸ்,
   சென்னை-மயிலை பேராயர் மற்றும்
   தமிழக ஆயர் பேரவைத் தலைவர்
2. மேதகு மைக்கிள் அகஸ்டின்,
   பாண்டி-கடலூர் பேராயர்
3. மேதகு எட்வர்ட் பிரான்சிஸ்,
   சிவகங்கை ஆயர்
4. மேதகு சின்னப்பா,
   வேலூர் ஆயர்
5. மேதகு தேவதாஸ் அம்புரோஸ்,
   தஞ்சை ஆயர்
6. மேதகு சிங்கராயர்
   சேலம் ஆயர்
7. மேதகு ஜூட் பால்ராஜ்,
   பாளையங்கோட்டை ஆயர்
8. மேதகு அந்தோணி பாப்புசாமி,
   மதுரை துணை ஆயர்
9. மேதகு இலாரன்ஸ் பயஸ்,
   சென்னை-மயிலை துணை ஆயர்
10. அருள்திரு பால்ராஜ்,
    திருச்சி ஆயரின் பிரதிநிதி
11. அருள்திரு சார்லஸ்
    தமிழக கத்தோலிக்க கல்வி குழு செயலர்
12. அருள்திரு லூயிஸ்ராயர்,
    செயலர், சென்னை-மயிலை பேராயர்
13. அருள்திரு பி. அந்தோணி,
    இயக்குநர், கத்தோலிக்க தகவல் மையம்



# கொத்தடிமை - சிறுவர்கள் மீட்பு

மதுரை, தேனி, திருநெல்வேலி, ஈரோடு மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த சிறுவர்களை உத்திரப்பிரதேசம் மற்றும் சத்தீஷ்கர் மாநிலங்களிலுள்ள கடலை உருண்டை மற்றும் இனிப்பு வகைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் கொத்தடிமைகளாக வைத்துள்ளார்கள் என்று மதுரையிலுள்ள 'சோகோ' தொண்டு நிறுவனத்தில் புகார் பெறப்பட்டது. இச்சிறுவர்களின் பெற்றோர்களிடம் மொத்தமாக பணம் வழங்கி அதற்கு ஈடாக ஏஜெண்டுகள் இவர்களை உத்திரப் பிரதேசம் மற்றும் சத்தீஷ்கர் மாநிலங்களுக்கு அழைத்துச் சென்று கொத்தடிமைகளாக்கி வைத்திருந்தார்கள் என்று அப்புகார் மூலம் அறியப்பட்டது. எனவே இச்சிறுவர்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு கொத்தடிமை ஒழிப்பு தனி அலுவலரிடம் மதுரை ''சோகோ'' தொண்டு நிறுவனம் கோரிக்கை வைத்தது. இக்கோரிக்கையை உடனடியாக ஆய்வு செய்து கொத்தடிமையாக இருந்த அச்சிறுவர்களை விடுவிக்க ''சோகோ'' தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த திரு.அழகுமணி, திரு. பாபுலால் ஆகிய இரு வழக்கறிஞர்கள் மற்றும் பிரான்சிஸ் சேவியர் என்ற சமூக சேவகர் ஆகிய மூவர் குழு உத்தரப்பிரதேசம் மற்றும் சத்தீஷ்கர் மாநிலங்களுக்கு அரசால் அனுப்பி வைக்கப்பட்டது. உத்தரப் பிரதேசத்தில் உள்ள அலகாபாத் மாவட்டத்தில் 10 முதல் 18 வயது வரையான 15 சிறுவர்களும், சத்தீஷ்கர் மாநிலத்தில் உள்ள பிலாஸ்பூர் மாவட்டத்தில் 2 சிறுவர்களும், இவ்வாறு கொத்தடிமைகளாக இருப்பது கண்டறியப்பட்டது. அச்சிறுவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டு சென்னைக்கு அழைத்து வரப்பட்டார்கள். 29-6-2001 அன்று சென்னைக்கு அழைத்துவரப்பட்ட அச்சிறுவர்கள் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு.வி. சுப்பிரமணியன் அவர்களை, தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்கள். இவர்கள் கொத்தடிமைகளாக இருந்த நிலைபற்றியும், அக்கொடுமையிலிருந்து விடுவிக்கப் பட்டது குறித்தும் அமைச்சர் அவர்களிடம் ஆதிதிராவிடர் நலத்துறை செயலாளர் திருமதி பி.சிவகாமி, இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு கொத்தடிமை ஒழிப்பு தனி அலுவலர் திரு.பி.டபிள்யு.சி. டேவிதார், இ.ஆ.ப., ஆகியோர் எடுத்துக் கூறினர்.

கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட சிறுவர்களில் ஒரு சிறுவன் ஆந்திர மாநிலத்தையும், ஒரு சிறுவன் கர்நாடகா மாநிலத்தையும் சேர்ந்தவர்கள். எனவே, அவ்விரு சிறுவர்களை சம்பந்தப்பட்ட மாநில அரசுடன் தொடர்பு கொண்டு, அங்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழகத்தைச் சார்ந்த 15 சிறுவர்களும் மதுரைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் மறுவாழ்வு மேற்கொள்வதற்காக தலா ரூ.1,000 வழங்கப்படும். தொடர்ந்து முழுமையான மறுவாழ்வு உதவியாக மேலும் ரூ.19,000 வழங்கப்படும். பள்ளி செல்லும் வயதுள்ள சிறுவர்கள் உடனடியாக பள்ளிகளில் சேர்க்கப்படுவார்கள். அதற்கு மேலான வயதுடையவர்களுக்கு சுயதொழில் தொடங்க தக்க உதவி செய்யப்படும்.

தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் நலத்துறையும், மதுரை சோகோ தொண்டு நிறுவனமும் இணைந்து இம்மீட்புப் பணியை சிறப்பாக செயல்படுத்தியுள்ளது.

• • •



# ஒரிசாவிலிருந்து...

மதுரை மற்றும் தேனி மாவட்டங்களைச் சேர்ந்த சிறுவர்களை ஒரிசா மாநிலத்திலுள்ள முறுக்கு தயாரிக்கும் தொழிற்சாலைகளில் கொத்தடிமைகளாக வைத்துள்ளார்கள் என்று மதுரையிலுள்ள 'சோகோ' தொண்டு நிறுவனத்தில் புகார் பெறப்பட்டது. இச்சிறுவர்களின் பெற்றோர்களிடம் மொத்தமாக பணம் வழங்கி அதற்கு ஈடாக ஏஜெண்டுகள் இவர்களை ஒரிசாவிற்கு அழைத்துச் சென்று கொத்தடிமைகளாக்கி வைத்திருந்தார்கள் என்று அப்புகார் மூலம் அறியப்பட்டது. எனவே இச்சிறுவர்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு கொத்தடிமை ஒழிப்பு தனி அலுவலரிடம் மதுரை 'சோகோ' தொண்டு நிறுவனம் கோரிக்கை வைத்தது. இக்கோரிக்கையை உடனடியாக ஆய்வு செய்து கொத்தடிமையாக இருந்த அச்சிறுவர்களை விடுவிக்க 'சோகோ' தொண்டு நிறுவன வழக்கறிஞர் மற்றும் இரண்டு நபர்கள் கொண்ட மூவர் குழு ஒரிசாவிற்கு அரசால் அனுப்பி வைக்கப்பட்டது. ஒரிசாவில் கஞ்சம் மற்றும் ராயகடா மாவட்டங்களில் ஏழு முதல் 18 வயது வரையான 12 சிறுவர்கள் இவ்வாறு கொத்தடிமைகளாக இருப்பது கண்டறியப்பட்டது. அச்சிறுவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டு சென்னைக்கு அழைத்து வரப்பட்டார்கள். 23.6.2001 அன்று காலை சென்னைக்கு அழைத்து வரப்பட்ட அச்சிறுவர்கள் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு வி.சுப்பிரமணியன் அவர்களை, தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்கள். இவர்கள் கொத்தடிமைகளாக இருந்த நிலைபற்றியும், அக்கொடுமையிலிருந்து விடுவிக்கப்பட்டது குறித்தும் அமைச்சர் அவர்களிடம், ஆதிதிராவிடர் நலத்துறைச் செயலாளர் திருமதி பி.சிவகாமி, இ.ஆ.ப. மற்றும் தமிழ்நாடு கொத்தடிமை ஒழிப்பு தனி அலுவலர் திரு பி.டபிள்யு.சி. டேவிதார்,இ.ஆ.ப. ஆகியோர் எடுத்துக் கூறினர்.

கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட 12 சிறுவர்களும் மதுரைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் மறுவாழ்வு மேற்கொள்வதற்காக தலா ரூ.1,000/– வழங்கப்படும். தொடர்ந்து முழுமையான மறுவாழ்வு உதவியாக மேலும் ரூ.19,000 வழங்கப்படும். பள்ளி செல்லும் வயதுள்ள சிறுவர்கள் உடனடியாக பள்ளிகளில் சேர்க்கப்படுவார்கள். அதற்கு மேலான வயதுடையவர்களுக்கு சுய தொழில் தொடங்க தக்க உதவி செய்யப்படும்.

தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் நலத்துறையும், மதுரை சோகோ தொண்டு நிறுவனமும் இணைந்து இம்மீட்புப் பணியைச் சிறப்பாக செயல்படுத்தியுள்ளன.

# செல்லக்கிளி


□ அபரார் அகமது

கிளிகள் செல்லப் பறவையாக வீட்டில் வளர்க்கப்படுகின்றன. இப்பழக்கம் பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து வருகிறது. அழகு, நிறம், பேசும் திறன் போன்ற பல்வேறு காரணங்களுக்காக இதனை வீட்டில் விரும்பி வளர்த்து வருகின்றனர். சர்வதேச மற்றும் உள்நாட்டுத் தேவையை கருத்தில் கொண்டு ஆயிரக்கணக்கான பறவைகள் ஆண்டுதோறும் பிடிக்கப்படுகின்றன. கிளியை செல்லப் பறவையாக வீட்டில் வளர்ப்போர் பிற கொடூர எண்ணங்களுக்கு அடிமையாவதில்லை.


வர்த்தக ரீதியாகவும், எண்ணிக்கை அடிப்படையிலும் பறவையினங்களில் அதிகமாக பாதிக்கப்படுவது கிளிகள்தான். 330 வகையான கிளிகள் தற்போது உலகம் முழுவதும் வாழ்ந்து வருகின்றன. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட வகைகள் பாதுகாக்கப்பட வேண்டியவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1990–94ம் ஆண்டின் சர்வதேச போக்குவரத்து அறிக்கையின்படி இரண்டு மில்லியன் கிளிகள் உலகம் முழுவதும் வர்த்தகத்திற்காக பிடிக்கப்படுகின்றன. நம் நாட்டிலிருந்து வர்த்தக நோக்கத்திற்காக உயிருடன் பிடிக்கப்படும் பறவைகளில், கிளிகள் மட்டும் 60 முதல் 70 சதவீதம் ஆகும். இந்தியா முழுவதும் 14 வகை கிளிகள் வாழ்ந்து வருகின்றன. இவற்றில் 7 வகை கிளிகள் வர்த்தக நோக்கத்திற்காக பிடிக்கப்படுகின்றன.

கழுத்தில் வட்ட வளையம் உள்ள கிளிகள், மேற்கு தொடர்ச்சி மலையில் வாழும் நீலநிற கிளிகள், லோரிகீட், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இமயமலையில் வாழும் தலைசாய்க்கும் கிளிகள், மலர்ந்த மலர்களைப் போல முக அமைப்பைப் பெற்ற கிளிகள் ஆகியவை வியாபார நோக்கத்திற்காக பிடிக்கப்படுகின்றன.

அலெக்சாண்டிரியன் என்ற கிளி வகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. உள்நாட்டு கிராம மக்களின் வாழ்க்கையோடு ஒன்றி இந்த கிளி வளர்ப்பு முறை இந்தியாவில் தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது. கிரேக்க வரலாற்றில் முத்திரை பதித்த மாவீரன் அலெக்சாண்டரால் இந்திய படையெடுப்பின் முடிவில் கிரேக்க நாட்டிற்கு கிளிகள் எடுத்துச் செல்லப்பட்டன. எனவே இவற்றை அலெக்சாண்டிரியன் கிளிகள் என பெயர் பெற்றன. இந்தியாவிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட முதல் பறவையினம் இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. ராஜஸ்தானிலுள்ள ஜலாவர் மாவட்டத்தின் காக்கிரின் கோட்டைப் பகுதியில் அதிக அளவில் காணப்பட்ட



கிளிகள் தற்போது உறிராமன் அல்லது கக்ருனிதோடா என்றழைக்கப்பட்டு வருகிறது. இந்த வகை கிளிகள் அதிக அளவில் பிடிக்கப்படுவதால் இவற்றின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. கக்ருனிதோடா என்ற இனம் தற்போது குறைந்த அளவே காணப்படுகிறது. கக்ரான் கோட்டையை முகலாயப் பேரரசர் ஹுமாயூன் கைப்பற்றியதை நேரில் கண்ட கிளி தனது மன்னன் தோல்வி அடைந்ததற்கு காரணமாக இருந்த துரோகி ரோமிகான் அரண்மனையில் நுழைந்தவுடன் துரோகி துரோகி என்று அழைத்து தனது பேச்சாற்றலை வெளிப்படுத்தியது. கிளியின் அழகை கண்டு மயங்காத ஹுமாயூன் இக்கிளியின் பேச்சைக்கேட்டு மயங்கிய தாக ஒரு வரலாறும் உண்டு. வேகமாக பேசப்பயிலும் இக்கிளிகளை மன்னர்கள் பயிற்றுவித்து வெடிகுண்டுகளுக்கு தீ வைத்துள்ளதை அறிய பயன்படுத்தினர். இதுபோன்ற பல்வேறு கதைகளும் இக்கிளிகள் குறித்து பரவலாக



பேசப்படுகின்றன. இதுபோன்ற பல்வேறு காரணங்களால் கிளிகளின் வியாபார அந்தஸ்து உயர்ந்து வந்துள்ளது.

வியாபார சந்தையில் பெரிய கிளிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டாலும் இரண்டு முதல் நான்கு வாரங்கள் கொண்ட கிளிக் குஞ்சுகளுக்கு அதிக கிராக்கியுண்டு. இக்குஞ்சுகள் எளிதில் பேசும் திறனை பயிலும் திறன் கொண்டவை.

இந்தியாவில் வாழும் அனைத்து கிளிகளும் மரப்பொந்துகளில் வாழும் பழக்கமுள்ளவை. கிளிக்குஞ்சுகள் பிப்ரவரி முதல் ஏப்ரல் மாத இறுதிக்குள் பிறந்த ஒரு வாரத்தில் வளைந்த கம்பியின் துணையுடன் பிடிக்கப்படுகின்றன. முதிர்ந்த மரங்கள் அதிகம் இல்லாததாலும் காடுகள் அதிகமாக அழிக்கப் பட்டதாலும் யூகலிப்டஸ் போன்ற மரங்கள் அதிகரித்த காரணத்தினாலும் இப்பறவையினம் அழியத் துவங்கியது.

இந்தியா முழுவதிலுமுள்ள பறவைப் பிடிக்கும் தொழில் செய்வோர் இவற்றைப் பிடித்து மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர். நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் வழியாக மேற்கு ஆசிய நாடுகளுக்கு இக்கிளிகள் சில்லறை வியாபாரிகள் மூலம் விற்கப்படுகின்றன. கிளிக் குஞ்சுகள் பல்வேறு வகையாக பிரிக்கப்பட்டு அதற்கேற்றார்போல் விலை நிர்ணயம் செய்யப்படுகின்றன. அடிமட்ட விலையாக இரண்டு ரூபாயில் தொடங்கி ஐநூறு ரூபாய் வரை இவை விற்கப்படுகின்றன.

அலெக்சாண்டிரியன் கிளிகள் **100** அமெரிக்க டாலர் வரை விற்கப்படுகின்றன. இந்தியா **1990–91**ம் ஆண்டு வரை கிளிகள் ஏற்றுமதியில் முக்கிய இடம் வகித்தது. **1981–90** இடைப்பட்ட காலங்களில் **3** மில்லியன் கிளிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. சுவீடன், பெல்ஜியம், ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கு ஐந்துவகைக் கிளிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இந்தியாவில் பறவை வியாபாரத்திற்கு தடையிருந்தும்கூட ஆண்டொன்றுக்கு **50,000** கிளிக்குஞ்சுகள் பிடிக்கப்படுகின்றன. வடஇந்திய வர்த்தக மையங்களிலிருந்து **1992** அக்டோபர் முதல் ஆகஸ்ட் **1994** வரை **25,000** கிளிகள் மீட்கப்பட்டன. **1989** முதல் **1995** வரை **16,000** கிளிகள் மீட்கப்பட்டன.

நடப்பாண்டின் துவக்கத்தில் கழுத்தில் சிவப்பு வளையம் கொண்ட **200** கிளிகள் பெங்களூர் பறவை வியாபார மையத்திலிருந்து மீட்கப்பட்டன.

காடுகளில் சுதந்திரமாக திரிந்து வாழும் பறவைகளை செல்லப் பறவையாக வளர்ப்பதை தடுக்க மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். கடுமையான சட்டவிதிமுறைகள் மட்டும் எதிர்பார்க்கும் பலனை அளிக்காது. வர்த்தக மையங்களிலிருந்து மீட்கப்படும் பறவைகளுக்கு போதிய பராமரிப்பு அளிக்கப்படுவதில்லை. பறவைகளுக்கு மூன்று வேளை உணவு அளிக்கப்பட வேண்டியது அவசியம். மீட்கப்பட்ட பறவைகளுக்கு இந்திய மிருகக் காட்சி சரணாலயங்களில் போதிய மறுவாழ்வு வசதிகள் அளிக்கப்படுவதில்லை. தொண்டு மனப்பான்மை



கொண்டவர்கள் இப்பறவை வர்த்தகத்தை தடைசெய்ய ஒத்துழைக்க முன்வருவதன் மூலம் இந்த அபூர்வ பறவையினம் அழியாமல் காக்கப்படும்.

*நன்றி : பத்திரிகைத் தகவல் அலுவலகம்,*
*இந்திய அரசாங்கம்*

# உடல் ஊனமுற்ற இளம் பெண்ணுக்கு ஆசிரியர் பணி நியமன ஆணை முதலமைச்சர் வழங்கினார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் தலைமைச் செயலகத்தில், கடந்த 15–6–2001 அன்று சென்னை தண்டையார்பேட்டையில் வசித்துவரும் செல்வி டி. மரியாள் என்னும் உடல் ஊனமுற்ற 25 வயது இளம் பெண் தனக்கு வேலைவாய்ப்பு வழங்கிட வேண்டி மனு கொடுத்தார். பி.ஏ., பி.எட்., படித்துள்ள தனக்கு ஆசிரியர் பணி வழங்குமாறு மனுவில் கோரியிருந்தார்.



முதலமைச்சர் அவர்கள், இவரது கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து, இவர் உடல் ஊனமுற்றவர் என்பதைக் கருத்தில் கொண்டு, இவரது கல்வித் தகுதியின் அடிப்படையில், ஆசிரியர் பணி வழங்கிட ஆணையிட்டார். இந்த ஆணையின்படி, சென்னை எம்.பி.டி. காலனி மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் பெற்றோர்–ஆசிரியர் கழக ஆசிரியையாக செல்வி டி. மரியாள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இப்பணி நியமன ஆணையை செல்வி டி. மரியாளிடம் 25–6–2001 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்.

ஆசிரியை பணி நியமன **ஆணையைப்** பெற்றுக்கொண்ட செல்வி டி. மரியாள், முதலமைச்சர் அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

• • •

# காரை நிறுத்தி முதலமைச்சர் பொதுமக்களின் குறைகளைக் கேட்டார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 29–6–2001 அன்று காலை சென்னை நந்தனம், சேமியாஸ் சாலை வழியாகச் சென்று கொண்டிருந்தபோது ஆஸ்டின் முதல் தெருவைச் சேர்ந்த சில பெண்கள், முதலமைச்சர் அவர்கள் தங்கள் குறைகளைக் கேட்குமாறு கேட்டுக் கொண்டனர். உடனடியாக தமது வாகனத்தை நிறுத்தி முதலமைச்சர் அவர்கள் இறங்கி வந்து அப்பெண்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தார். அப்பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுவதாக அவர்கள் தெரிவிததனர். மேலும், சாலை பழுதுபார்க்கப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். அக்கூட்டத்திலிருந்த வயதான திரு.நடராஜ் என்பவர் தனக்கு மூக்குக் கண்ணாடி வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதேபோன்று, பைகிராப்ட்ஸ் நகரைச் சேர்ந்த திரு. அந்தோணிதாஸ் என்பவரும் தனது வீட்டுக்கு ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைத்துத் தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டார். அவர்கள் அனைவரது குறைகளையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்ட முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதி அளித்தார். மேலும், ஆஸ்டின் நகர் முதல் தெருவில் உடனடியாக ஆழ்குழாய் கிணறு அமைக்குமாறு சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநருக்கு உத்தரவிட்டார். திரு. நடராஜ் மற்றும் திரு. அந்தோணி தாஸ் ஆகியோருடைய குறைகளைத் தீர்க்கவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

• • •

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தேவ. ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப, இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906

உங்களின் நீண்டநாள்
கனவை நனவாக்கும்
புதிய திட்டம்.

கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.



உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, "பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்".

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் 1 | மாதச் சந்தா ரூ. 2 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. 3 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 4 | கூடுதல் தொகை (3+4) ரூ. 5 | அரசு தள்ளுபடி * ரூ. 6 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 7 |
|---|---|---|---|---|---|---|
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டர்விளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.**

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

*பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.*


R.N.I.No.21446/70
Licence No.G/TN/CPMG/190, WPP-130